நன்றி - நூலகத்திட்டம்


SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 191 பெப். 24 - மார்ச் 08, 2000 விலை ரூபா 10. 00





## "விடுதலைப் புலிகளின் அனுமதியை அரசு சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் !"

- அங்கவீனமுற்ற படைவீரர் சங்கத் தலைவர் தயாரத்ன



தமிழ் மொழி மூல பாடநூல் விநியோகம்:

## தீர்க்கப்பட முடியாத பிரச்சினை?



கனடாத் தமிழரின் முக்கோணச் சோகக் கதை: மதம், சாதியம், தொடர்பு ஊடகம்



## காணாமல் போனோர் கதை!

நன்றி - நூலகத்திட்டம்



## சமூகசேவை அமைச்சு அதிகாரி சிறுமி மீது பாலியல் வல்லுறவு

வெலிஓயா பிரதேசத்தில் 9வயது சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சமூக சேவைகள் அமைச்சர் சுமேதா ஜயசேன அவர்களின் ஒருங்கிணைப்பு அதிகாரி எம்.எல். சந்திர பிரேமதிலக்க என்பவருக்கு எதிராக மொனராகலை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குற்றவாளியைப் பிணையில் விடுதலை செய்ய சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை- எனவும், ரூபா 25,000 பிணையில் குற்றவாளி விடுக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

கடந்த ஜனவரி 31ம் திகதி இரவு இச்சம்பவம் நடந்துள்ளதாகவும் பாதிப்புக்-குள்ளான சிறுமி மொனராகலை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் எனவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## சிங்கள வீரவிதானவை - இனவாத அமைப்பாக மாற்றியதற்குக் கண்டனம்

இலங்கையின் பொருளாதாரத்தை பாதுகாக்கும் நோக்கில் 1995ல் தேசவிரும்பிகள் ஆரம்பித்த "வீரவிதான"வின் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் முன்னாள் இராணுவ அதிகாரியொருவர் தனது தனிப்பட்ட நோக்கங்களுக்காக, அவ்வமைப்பை இனவாத அமைப்பாக மாற்றியது தொடர்பாக ஆரம்பகாலத்தில் அமைப்புக்கு ஆதரவளித்து வந்தவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

சிங்கள வீரவிதான அமைப்பின் தற்போதைய பணிப்பாளரின் நடவடிக்கைகள் தொடர்பாக விசனம் தெரிவித்துள்ள பிக்குகள் பலர் இவ்வமைப்பிலிருந்து விலகிச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதற்கு முன் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்த "சுத்தஸ்ஸயை" எனும் அமைப்பின் அதிகாரத்தை பொறுப்பேற்றுக்-கொண்டிருந்த இம் முன்னாள் இராணுவ அதிகாரி அமைப்பை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொண்டமை பற்றியும் பரவலாக பேசப்படுகின்றது எனத் தெரிய வருகின்றது.

## இரண்டு மில்லியன் சுதந்திரம்

52வது சுதந்திர விழாவை கொண்டாடும் முகமாக டவர்ஹோல் மன்றத்தின் ஆதரவில் பிரபல நாடகவியலாளர் கே.பி. ஹேரத் அவர்களினால் தயாரிக்கப்பட்ட "யுக அசிரிய" எனும் விவரண நிகழ்ச்சிக்கு ரூ. 2 மில்லியனுக்கு அதிகமான பணம் செலவழிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பெப்ரவரி 4ம்திகதி சுகததாச உள்ளக அரங்கில் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு நூற்றுக்கும் குறைவானவர்களே சமூகமளித்-துள்ளனர். ரூபா 250,000 செலவழிக்கப்பட்டு அரங்கு அமைக்கப்பட்டதாகவும், அரச தொடர்பூடகங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்களுக்கென ரூ.73,800 செலவழிக்-கப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைக்கின்றது.

கலைஞர்களின் கொடுப்பனவு தொடர்பாக ரூ.167,000 செலவழிக்கப்பட்ட போதும், தமக்கு உறுதி அளித்த தொகை இன்னும் வழங்கப்படவில்லை என கலைஞர்கள் கே.பி. ஹேரத்தை குற்றம் சாட்டியுள்ளனர்.

## ஓசிப் புள்ளி!

அண்மையில் வவுனியா பாவற்குளம் பகுதியில் உள்ள கணேஸ்வரா மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்து ஒருநாள் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். அந்தப் பாடசாலையில் இருந்த விவசாய பாட ஆசிரியரின் வழிகாட்டலிலேயே, அந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கை இடம்பெற்றதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

விவசாயப் பாடத்திற்குரிய செய்முறைகள் செய்யப்படாமலேயே மாணவர்களுக்குப் புள்ளிகளை வழங்குமாறு அந்த ஆசிரியரைப் பாடசாலை அதிபர் வற்புறுத்தியதாகவும், அதற்கு எதிராகத் தான் இந்த பாடசாலை பகிஷ்கரிப்பு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்-படுகின்றது.

அதிகாரிகளின் கூற்றுப்படி, செய்முறைப் பயிற்சிகளோ அல்லது பரீட்சையோ குறிப்பிட்ட ஆசிரியரின் பொறுப்பிலேயே நடத்தப்பட வேண்டும். இப்போது மட்டுமல்லாமல், இதற்கு முன்னரும் செய்முறைப் பரீட்சை அந்த ஆசிரியரினால் நடத்தப்பட்டதற்கான பதிவுகள் இல்லை என அதிகாரிகள் கண்டறிந்திருக்-கின்றார்கள். இதனையடுத்து, அந்த குறிப்பிட்ட ஆசிரியர் இந்தப் பாடசாலையில் இருந்து ஆசிகுளத்தில் உள்ள சிதம்பரபுரம் நாகராஜ வித்தியாலயத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## தமிழ் - இனி 2000

தமிழ் - இனி உலக தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை நடாத்த திட்டமிட்டிருப்பது பற்றி சரிநிகரில் வெளியான அறிவிப்பு வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இந்த மாநாடு எதிர்வரும் செப்டெம்பர் முதல் வாரத்தில் சென்னையில் நடாத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஞாயிறன்று (20.02.2000) சென்னையில் நடைபெற்ற தமிழ்இனி அமைப்பாளர்களது கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு நூற்றாண்டு கால உலக தமிழ் இலக்கியத்தின் சாதனைகளை மதிப்பிடுவதும் புதிய நூற்றாண்டிற்கான இலக்கியப் போக்குகள் குறித்த சிந்தனைகளை வெளிக்கொணர்வதையும் அடிப்படையாக கொண்டதாக இம்மூன்று நாள் உலக தமிழ் இலக்கிய மாநாடு நடைபெறும் என்றும், புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வரும் புலமையாளர்கள், இலக்கியவாதிகள் கலந்து கொள்வார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டது. சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம், கலை, அறிவியல் போன்ற அனைத்து துறைகளையும் குறித்த கட்டுரைகள் இம்மாநாட்டில் படிக்கப்படும்.

தமிழ் இனி மாநாட்டில் கட்டுரை சமர்ப்பிக்க விரும்பும் புலமையாளர்கள, எழுத்தாளர்கள், கலைஞர்கள் தமது கட்டுரைகளை சரிநிகரில் வெளியிடப்பட்ட எத்துறை சார்ந்ததாயினும், சமர்ப்பிக்க முடியும்.

## கதிருக்கு வயிற்றுவலி

அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை தொடங்கப்படுவதற்கான ஆரம்ப கட்டவேலைகள் முடிந்துவிட்டன. நோர்வேஜிய அமைச்சர், அரசாங்கத்துடனும் எதிர்க் கட்சித் தலைவருடனும் பேசி விட்டார்.

ஆனால், வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர் முகத்தில் சந்தோஷத்தைக் காணவில்லை. கொஞ்ச நாட்களாக அவரது வாயும் அடங்கிப் போய்க் கிடக்கிறது. புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு வந்தால் தான் பேசுவோம் என்று ஜனாதிபதியையும் விடத் தீவிரமாகப் பேசியவர் அல்லவா அவர். அவரது பேச்சில், ஒரு வேளை புலிகளுடன் சந்திரிகா பேச இறங்கி வந்தாலும், இவர் இறங்கி வர விட மாட்டார் என்று நம்பும் படியான காரம் இருந்தது.

ஆனால் இப்போது அவரது வாய் நீண்ட மௌனம் சாதிக்கிறது.

ஓய்வு எடுத்துக் கொள்ளும் எண்ணம் வந்து விட்டது போலும் ?

அநேகமாகப் புதிய மந்திரி சபையில் இவர் இருக்க மாட்டார் என்கிறார் நமது அரசியல் நண்பர் ஒருவர்.

ஆமாம். தேர்தல் வந்தால் தேசியப் பட்டியலில் அதிகாரத்துக்கு வந்தவர்களுக்கு வயிற்றைக் கலக்காதா என்ன ?

000

## ஜனாதிபதி வருகை!

பாராளுமன்றத்துக்கு வந்தார் ஜனாதிபதி.

ஐந்து ஆண்டு காலமாக நிதி அமைச்சர் பொறுப்பு இருந்த போதும், வரவு செலவுத் திட்டத்தைப் பேராசிரியர் மூலம் அரங்கேற்றிய ஜனாதிபதி, இம் முறை யாரும் எதிர்பாராத விதமாகத் திடீரென்று பாராளுமன்றத்துக்கு வந்து வரவு - செலவுத் திட்ட உரையை ஆற்றினார்.

அவர் ஆற்றிய உரையும், அதில் அடங்கியிருந்த யோசனைகளும் யாருக்கும் முக்கியமாகப் படவில்லை.

ஜனாதிபதி பாராளுமன்றம் வந்ததே அதை விட முக்கியமான விடயமாகப் பத்திரிகைகளில் அடிபட்டது.

உண்மையில், அவரது பேச்சிலும் எதுவும் இருக்கவில்லைத்தான்.

வரவு செலவுத் திட்டம் வருவதற்கு முன்பே ஜே. ஆர். பாணியில் மண்ணெண்ணை, டீசல் விலை உயர்த்தப்பட்டு விட்டது.

ஏனையவற்றின் விலை ஏற்கெனவே அதிகம்.

புதிதாக வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்க அவருக்குத் தொலைந்த பாஸ்போட்டை மீளப் பெறுவதற்கான கட்டணம் மட்டும்தான் இருந்தது போலும் !

தேர்தல் வரப்போகின்ற ஒரு சூழலில் வேறு எதைத்தான் அதிகரிக்க முடியும் ?

அப்படி அதிகரிப்பதற்கு ஜனாதிபதி முட்டாளா என்ன ?

பொருட்கள், சேவைகள் வரியை(GST) 12.5% இலிருந்து 17% ஆக்குவதாக ஆலோசிக்கப்பட்டிருந்த போதும் தேர்தலை மனதில் வைத்தே அது அதிகரிக்கப் படவில்லை என்று தோன்றுகிறது.

ரீ. வி., றேடியோ லைசென்சை இல்லாமல் செய்தமைக்காக ஜனாதிபதியை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம் என்று தோன்றவில்லையா ?

அதிகளவு வருமானம் தராத, பெருமளவு மக்களால் அலட்சியம் செய்யப்படுகிற ஒரு வரி இது. இதை நீக்கி விடுவது கூட ஒரு வகையில் தேர்தல் காலத்தை உத்தேசித்துச் செய்யப்பட்ட ஒரு நடவடிக்கை தான்.

உண்மையில் இந்த வரவு - செலவுத் திட்டத்தின் சிறப்புத்தான் என்ன ?

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வந்து, அதைப் படித்தது என்பதுதான் !

வேறோன்றும் இல்லை !

000

## அமுதுக்குப் புரியாதது

ஜனாதிபதி மீதான தாக்குதலை நடாத்தியது தற்கொலையாளியா அல்லது பாசல்குண்டா என்ற சர்ச்சை இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

"அந்தச் சமயத்தில் ஜனாதிபதி உயிரிழந்திருந்தால் இங்கு ஒரு இனக்கலவரமே நடந்திருக்கும்,

நல்லவேளை, தெய்வாதீனமாக அவர் உயிர் தப்பினாரோ, தமிழ் மக்களை அவர் பாதுகாக்கும் பொறுப்பை கையில் எடுத்துக்கொண்டாரோ நாம் பிழைத்துதோமோ என்று எழுதியிருக்கிறது அமுது.

புலிகளின் குண்டுத் தாக்குதல்களின் நோக்கம் இனக்கலவரத்தைத் தூண்டுவது தான் என்று அமுது எழுதியிருப்பது உண்மையோ இல்லையோ இங்கு ஒரு இனக்கலவரம் தோன்றாமல் இருந்ததற்கு ஜனாதிபதி அவர்களின் கருணையுள்ளம் தான் காரணம் என்ற அமுதின் கண்டுபிடிப்பை நம்பமுடியவில்லை.

ஜனாதிபதிக்கு சாமரம் வீசுவது அமுதுக்கு செஞ்சோற்றுக் கடனாக இருக்கலாம்.

ஆனால், அதற்காக அவரது கருணை உள்ளத்தையும் கண்ணீரையும் பற்றி இவ்வளவு பேசத்தேவையில்லை.

ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்ட போது கூட கலவரம் ஏற்படவில்லை.

கலவரம் ஒன்றை செய்யும் எண்ணம் சிங்கள மக்களிடம் ஒருபோதும் இருந்ததில்லை.

தூண்டிவிடவும், முன்னின்று நடத்தவும் அரசியல்வாதிகள் தயாராக இல்லையென்றால் கலவரம் ஒரு போதும் நடக்காது.

இது 'அமுது'க்கு புரியுமோ என்னவோ?

நன்றி - நூலகத்திட்டம்



# சித்தாண்டி: திறந்தவெளி வதைமுகாம்?

மட்டக்களப்புக்கு வடக்கே 24கிலோமீற்றர் துாரத்தில் சித்தாண்டி முறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாம் அமைந்திருக்கின்றது. கடைத்தெரு, சந்தை, தபாற்கந்தோர், பாடசாலை, 35 தனியார் வீடுகள் என அப்பிரதேசத்தின் முழுத்தேவைகளையும் தன்னுள்ளே விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டு இந்த முகாம் இருக்கின்றது. இம் முகாமில் இருக்கின்ற இராணுவத்தினரும் தேசிய துணைப்படை(ராசிக்குழு)யினருமாகச் சேர்ந்து அண்மைக் காலமாக இப்பகுதியை திறந்தவெளி வதைமுகாமாக மாற்றியிருக்கின்றார்கள் என்று தான் சொல்லத் தோன்றுகிறது. "நாங்களெல்லாம் உங்களுக்காகத் தான் இங்கு வேலை செய்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு பிக்கப் ஓடுவதற்கு மட்டும் நிறையப் பேர் இருக்கின்றார்கள். எங்களை அடிக்கும் போதும் எங்கட பிள்ளையள சுடும் போதும் கேட்பதற்கு ஆக்களில்லை. இருக்கிறவனுகள் தான் அப்படி என்றால் வந்தவனுகளும் அப்படித் தான்" என்கிறார் அப்பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அது என்றால் உண்மை தான் என ஆமோதிக்கிறார் அருகில் நின்ற இன்னொரு பெண்மணி. கடந்த மாதம் முறக்கொட்டாஞ்சேனையில் நடந்த சம்பவம் ஒன்றின்போது இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட சிலரோடு கதைத்த போது அழுத்திக் கூறப்பட்ட விடயமும் ஆதங்கப்பட்ட விடயமும் கூட இது தான்.

கடந்த மாதம் 23ம் திகதி முறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாமில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருள் ஒருவரை புலிகளின் பிஸ்டல் குழுவினர் சுட்டுக் கொன்றதையடுத்து கணநேரத்தில் முகாமைச் சுற்றியுள்ள பிரதேசத்தை சுடுகாடாக்கி விட்டனர் இராணுவத்தினர். இந்தச் சம்பவத்தின் போது செல்லத்தம்பி விஜயன் என்ற 14வயதுச் சிறுவனும், செல்லத்தம்பி புஸ்பலதா என்ற 10வயது சிறுமியும் இராணுவத்தினரால் ஈவிரக்கமற்ற முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டு பிள்ளைகளும் படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவத்துக்கு பரீட்சயமான முகங்கள். பாடசாலைக்குப் போகும் போதும் வரும் போதும் கடைகளுக்குப் போய் வரும் போதும் பழகிய முகங்கள். சம்பவநேரம் எல்லோரும் அல்லோலகல்லோலப்பட்டு ஓடும் போது இந்தச் சிறுமி மாத்திரம் இது நமக்குப் பழக்கமான ஆமி தானே ந[illegible] ஒன்றும் செய்யமாட்டார் [illegible]று நின்றிருக்கின்றாள். பாவம் அந்தப் பாலகி அறியவில்லை பாதகனின் வஞ்சத்தை. அவனது சுடுகுழலுக்கு தெரியுமா தன்னை வைத்திருப்பவனுக்கு இவள் பழக்கமானவள் என்று. சுடுகுழலை வைத்திருப்பவனுக்கே கொலைவெறி கண்ணை மறைத்து விட்டது சுடுகுழலுக்கு என்ன என்று தெரியப் போகிறது. அந்தச் சிறுமி கையெடுத்து கும்பிடக் கும்பிட அது அவளது உடலைப் பதம் பார்த்தது. இந்தச் சிறுமியைச் சுடும் போது கடை ஒன்றினுள் ஒளித்துப் பார்த்துக் கொண்டிருந்த தாயாரோ அந்தச் சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் தலைவிறைத்து மயக்கம் போட்டு விழுகின்றார்.

இதைப் போலவே துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்கவும் கடைஒன்றினுள் எல்லோரும் போய் இருந்திருக்கின்றார்கள். இராணுவத்தினர் பின் கதவால் யார் இருக்கின்றது என்று கேட்டுப் பார்த்து விட்டு முன்பக்கமாக வந்து நின்று சுட்டார்களாம். இந்தச் சம்பவத்திலே விஜயன் என்ற சிறுவன் சூடுபட்டு இறந்துள்ளான்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு புஸ்பாவுடன் படித்த என்ர பிள்ளை பாடசாலைக்கோ, ரீயுசனுக்கோ போகப் பயப்படுகிறாள் என்று சித்தாண்டியைச் சேர்ந்த ஒரு பெண்மணி குறிப்பிடுகிறார்.

இதேநேரத்தில் வேறு கடை ஒன்றினுள் இருந்த கர்ப்பிணிப் பெண்ணொருவரையும் இவர்கள் தாக்கியுள்ளார்கள். 15,000 ரூபா பெறுமதியான எருது மாட்டை கூட சுட்டுக் கொன்றிருக்கின்றார்கள். கொலை வெறி எதைத் தான் விட்டு வைத்தது. குளிர்சாதனப் பெட்டியை திறந்து உள்ளுக்குள் சுட்டார்களாம். கண்ணாடி ஜன்னல்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் என எல்லாவற்றையும் துப்பாக்கி ரவைகள் பதம் பார்த்தன. இந்தச் சம்பவத்தின் போது 13,000 ரூபா வரை காசு களவாடப்பட்டிருப்பதாகவும் களவு கொடுத்தவர்கள் கூறுகின்றார்கள். இந்த சம்பவம் 90ம் ஆண்டு நடந்ததை விட கொடூரமாக இருந்தது என்றார் அச்சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர். இனிமேல் தங்களுக்கு ஏதாவது நடந்தால் மூன்று கிலோமீற்றர் சுற்றத்துக்குக் குண்டு போட்டு எல்லாத்தையும் பற்ற வைப்போம் என்றும் இராணுவத்தினர் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். வீட்டினுடைய வளவுகளுக்கு உள்ள வேலிகளைப் பிரித்து மதில்களையும் உடைக்குமாறு இராணுவத்தினர் அப்பகுதி மக்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இதே போன்றே இம்மாதம் 19ம் திகதி இராணுவத் தொடரணிக்காக வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்து விட்டு மாலை 6.20 மணியளவில் முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது படையினர் தீர்த்த வேட்டுக்கள் வீட்டில் இருந்து வல்லாரை பிடுங்கிக் கொண்டிருந்த ராஜரெத்தினத்தையும் பிள்ளைகள் ராதிகா, ரனித்தாவையும் பதம் பார்த்துச் சென்றது. இவர்கள் மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ராஜரெத்தினத்துக்கு விரல் ஒன்று கழற்றப்பட்டுள்ளது.

புலிகள் தங்களைச் சுடவந்ததாகவும் தாங்கள் அவர்களைக் கண்டு விட்டுச் சுட்டதாகவும் இராணுவத்தினர் கூறுகின்றனர். இராணுவத்தினர் புலிகள் ஓடியதாகச் சொன்ன இடத்தில் சின்னப் பிள்ளைகளின் செருப்புக்கள் தான் கிடந்ததாக சம்பவத்தைக் கண்டவர்கள் கூறுகின்றனர். இது இவ்வாறிருக்க இந்த முகாமில் இருக்கின்ற மகேசன் தலைமையிலான துணைப்படையினர் மிகவும் மோசமான முறையில் இப்பகுதி மக்களுடன் நடந்து கொள்கின்றனர். இரவு நேரங்களில் வீடுவீடாகச் சென்று கதவைத் தட்டுவதும் புலி இருக்கின்றதா நாங்கள் சோதனை செய்யப் போகிறோம் என்று சொல்லி ஆண்கள் இல்லாத வீடுகளில் பெண்களுடன் சேட்டைபண்ணுவதுமே இவர்களுடைய வேலையாக இருக்கின்றது. இப்பகுதியில் உள்ள ஆண்களில் அனேகமானோர் வயல் வேலைகளுக்காகவும் மில்வேலைகளுக்காகவும் வெளியிடங்களுக்குச் செல்பவர்கள். இதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இரவுவேளைகளில் இவர்கள் புலிவேட்டைப் போர்வையில் ஆடுமாடுகள்போல் மேய வெளிக்கிட்டுள்ளனர். இந்த மேய்ச்சலுக்குப் பெயர் தான் புலி பிடித்தல்.

சித்தாண்டியில் வாரத்தில் ஒருநாள் கூடும் சந்தையை சமுர்தி செயலணியினர் ஆரம்பித்துள்ளனர். இந்தச் சந்தைக்குப் பல இடங்களில் இருந்தும் வியாபாரிகள் வருவது வழக்கம். இங்கு வரும் துணைப்படையினர்(ராசிக்குழு) வியாபாரிகளிடம் இருந்து கப்பமாக பணத்தையும் பாவனைப் பொருட்களையும் வசூலித்துச் செல்கின்றனர். இதனால் பொருட்கள் விலையேறுவது மட்டுமல்லாமல் வெளியிடங்களில் இருந்துவரும் வியாபாரிகளும் இங்கு வர மறுக்கின்றனர்.

கடந்த வருடம் 11ம் மாதம் 14ந் திகதி சித்தாண்டி முருகன் கோயிலுக்கு வந்த ராசிக்குழுவினர் அங்கிருந்த ஒவ்வொரு பூந்திக் கடைக்காரர்களையும் தனித்தனியே கூப்பிட்டு ஒவ்வொருவரிடமிருந்தும் 500 ரூபா தொடக்கம் 1000ரூபா வரை பணம் பெற்றிருக்கின்றார்கள். சிலர் தமது வறுமை நிலையைக் கூறவும் "உங்களிட்ட வேண்டுற பணத்தை நாங்க எடுக்கல்ல. எங்களுக்கு ரூபா 9000 சம்பளம் கிடைக்குது. இந்தப் பணம் எல்லாம் அனாதை இல்லங்களுக்கும் கோயில்களுக்கும் கொடுப்பதற்குத் தான் என்று நியாயமும் கூறியுள்ளனர். எந்த இடத்தில் மிரட்டி கோயிலுக்கு கொடுக்க என்று காசுவேண்டினார்களோ அதே இடத்திலுள்ள கோயிலுக்கு கந்தசஷ்டி விரதத்துக்கு வந்த இளைஞர்களை எல்லாம் சோதனையிட்டு கோயில் உண்டியலில் போட வைத்திருந்த காசை எல்லாம் பறித்து தங்களது பொக்கட்டில் போட்ட சம்பவமும் அன்றய தினம் நிகழ்ந்திருக்கின்றது.

எது எவ்வாறிருப்பினும் இந்நடவடிக்கைகள் எல்லாம் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு செய்யப்படும் செயற்பாடு என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்காது என்பது உண்மை.

# பேச்சுவார்த்தை

## வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்!

கடந்த வாரம் இலங்கை வந்திருந்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் நட்வொலிபேர்க் இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி ஆகியோருடன் விரிவாகவும், ஆழமாகவும் உரையாடியதன் பின்னரேயே இந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் இம்முயற்சியில் வெறும் ஏற்பாட்டாளராகப் பணிபுரியப் போகிறாரா அல்லது மத்தியஸ்தராகப் பணி புரியப் போகிறாரா என்பது இன்னமும் தெளிவாகவில்லை. அரசும் எதிர்க்கட்சியும், இவர் ஏற்பாட்டாளராக இருந்து விட்டுப் போகட்டும். அதற்கு மேல் மூக்கை நுழைக்கக் கூடாது என எதிர்பார்க்கின்றன.

தமிழர் தரப்பிலோ எதிர்பார்ப்பு வேறு விதமாக இருக்கின்றது. விடுதலைப் புலிகளாக இருந்தாலென்ன, அவர்களுடன் அணுகுமுறை விடயத்தில் முரண்பட்டு நிற்கும் தமிழ்க்குழுக்களாக இருந்தாலென்ன, தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்தாலென்ன எல்லோரதும் எதிர்பார்ப்பு தமிழர் மனங்களைப் பிரதிபலித்து மூன்றாந்தரப்பு மத்தியஸ்தராக நோர்வே வெளி விவாகார அமைச்சர் பணியாற்ற வேண்டும் என்றே அமைந்துள்ளது.

அந்த அளவுக்கு இலங்கை அரசு தமிழர்களின் நம்பிக்கையை இழந்துபோய் நிற்கிறது. எந்தவிதமான அவமானங்களுக்கும் அஞ்சாத கும்பலாகவே இலங்கை அரசு தமிழர்கள் விடயத்தில் செயல்பட்டு வந்திருக்கிறது.

ஒவ்வொரு நாடும் தத்தமது நாட்டுக்கென பொதுவான ஒரு கொள்கையைக் கொண்டு செயல்படுவது வழமை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வரினும் இக்கொள்கையை முன்னெடுப்பதில் தடங்கல் நேரா வண்ணமே நடைமுறைத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

அதேபோல் அரசியலமைப்பில் எந்தவிமாகச் சொல்லப்பட்ட போதிலும் இலங்கை அரசின் கொள்கை எப்போதும் இனவாதமாகவே இருந்து வருகிறது. "தனிச்சிங்கள பௌத்த நாடு" என்ற எழுதாத கொள்கையை அமுல்படுத்துவதிலேயே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் போட்டியிட்டிருக்கின்றன.

இலங்கையில் இனவாதம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. உத்தியோகபூர்வமாக இதற்கு அறுபத்தைந்து வருட வரலாறு உண்டு.

சட்டவாக்கச் சபையில் சுதந்திரத்தை இலங்கை பெறாத காலத்திலேயே - தனிச்சிங்களவர்களைக் கொண்டு 1936ல் அமைக்கப்பட்ட மந்திரிசபை சிங்கள அரசியல்வாதிகளின் மனப்போக்குக்கும் பண்புக்கும் உத்தியோகபூர்வ ஆரம்பமாகும்.

சாதாரண மக்கள் தமிழர்கள் சிங்களவர்கள் என்று பிரித்துப் பார்க்காமல் கூடி வாழ்ந்த காலத்திலேயே இத்தகைய ஒரு விஷ விதையை விதைத்தவர்கள் சிங்கள அரசியல்வாதிகள் தாம். இதன் அடியொற்றல் சுதந்திர இலங்கையில் பதவி மோகத்துக்காக மலையகத் தமிழர்களில் குடியுரிமையை அழித்தது. அவர்களை நாடற்றவர்களாக்கி வைத்தது.

இது இனவாத நோக்கிற் செய்யப்பட்டதல்ல. பதவி பிடிக்கும் நோக்கத்துக்காகவே செய்யப்பட்டது. துரதிருஷ்டவசமாக மலையகத் தமிழர்கள் பாதிக்கப்பட்டு விட்டார்கள் என்று வர்க்க முலாம் பூசி மழுப்புபவர்கள் இன்றும் இருக்கத் தான் செய்கிறார்கள். ஆனால், இன்று அவர்களுக்கு நாளை எங்களுக்கு" என்று செல்வநாயகம் அன்றே கூறியது எவ்வளவு நிதர்சனமானது என்பதை இன்று தமிழர்கள் உணர்ந்துள்ளார்கள்.

1944ல் அன்றைய பின்வாங்கு உறுப்பினராக இருந்து "பௌத்த சிங்கள நாடு" என்ற கோஷத்தை சட்டவாக்கச் சபையிலே முன்வைத்த பெருமை பின்னாளில் இனவாதிகளால் தலைவரெனக் கொண்டாடப்பட்ட ஜே.ஆர். ஜயவர்த்தானவையே சாரும். அந்த வேளை எவர் காதிலும் விழாமற் போன இக்கோரிக்கையை மக்கள் மயப்படுத்தி சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு சென்று அவர்களையும் இனவாதிகளாக மாற்றி இலங்கையின் அமைதியான வாழ்வுக்கு வேட்டு வைத்த சிறப்பு இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்காவுக்குச் சொந்தமாகும். தமது சொகுசுக்காக நாட்டைப் படுகுழியில் வீழ்த்தியவர்களைத் தாம் தங்கள் தலைவர்களென்று அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை சிங்கள மக்களுக்கு.

அனைத்திலும் வல்லவரெனக் காட்டிக் கொண்ட ஜே.ஆர். ஜயவர்த்தனவும், இன்றைய பிரதமராக இருக்கின்ற சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கூட தமக்குக் கிடைத்த பலத்தைப் புதிய அரசியல் யாப்பை எழுதி தமிழர்களை அடக்கி விடவே பயன்படுத்தினார் என்பதை மறந்து விடுவதற்கில்லை.

இன்றைய ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும், நேர்மையானவர்கள் என அவர்கள் கட்சி சார்ந்தோரும் அண்டிப் பிழைக்கும் ஒரு சில தமிழர்களும் கூறிக் கொண்டாலும் கூட தமிழர்கள் மத்தியில் இவர்கள் நேர்மாறான கணிப்புக்கே உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கருத்திலிருத்திப் பார்த்தால் "ஏற்பாட்டாளர்" பாத்திரம் போதும் ஏனையவற்றை நாங்களே பேசித் தீர்ப்போம்" என்ற கருத்தை அரசும், எதிர்க் கட்சியும் கொண்டிருந்தாலும் கூட தமிழ் மக்கள் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தைக் கோருவதன் நியாயம் புரியும்.

ஏற்பாட்டாளர் பாத்திரத்துடன் நோர்வேப் பிரதிநிதி தனது பணியைச் சுருக்கிக் கொள்ள முனைந்தால் அவரது நல்ல முயற்சி ஆரம்பத்திலேயே கருகிப் போகும் வாய்ப்பு இருக்கிறது.

மிகுந்த பிரயத்தனங்களின் பலனாக எழுதப்பட்ட பல ஒப்பந்தங்கள் இலகுவாகவே கிழித்தெறியப்பட்ட வரலாறு எமக்குண்டு. இலங்கை இந்திய ஒப்பந்தத்தைக் கூடத் தருணம் பார்த்துக் கைவிட்ட வரலாறு இலகுவில் மறந்து விடமுடியாத ஒன்று.

இதற்கிடையில் சில சிங்கள இனவாத அமைப்புகளும், பிக்குகள் அணிகளும் நோர்வே அரசின் நல்லெண்ணத்துக்கு எதிராகக் கிளம்பத் தொடங்கியுள்ளன என்பதும் நோக்கத்தக்கது. உரிய நடவடிக்கையை அரசு எடுக்கத் தயங்கினால் அரசு மனதார விரும்பினாலும் கூட பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலை ஏற்படக்கூடும்.

இதயத்தைத் திறந்து நியாயத்தைப் பேசி பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு அரசுக்கு மாத்திரமல்ல தமிழ்த் தரப்புக்கும் உண்டு.

சரியாக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நாம் தவறினால் "இலங்கையைக் காப்பாற்றுவதற்கு வேறுவழியிருப்பதாகத் தோன்றவில்லை.

— திரிபுரன்

நன்றி - நூலகத்திட்டம்



# விலை போகும் நம்பிக்கைகள்!


சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதில் தமக்கு மறுக்க முடியாத பங்களிப்பு உண்டு என்று நிறுவுவதில் பொதுஜன ஐக்கிய முன்னணியோடு அப்பிக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளிடையே போட்டா போட்டி ஏற்பட்டது ஒன்றும் புதிய விடயமல்ல.

முக்கியமாக இன்றைய இலங்கை அரசியலில் தன்னை ஒரு பலமான கை என இனங்காட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அமைச்சர் அஷ்ரஃப் நெஞ்சு நிமிர்த்திக் கூறிக் கொண்டிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளைப் பகிரங்கமாகப் பகைத்து வரும் அமைச்சர் செய்யலாம் என்ற சிறு பிள்ளைத்தனமான, மட்டமான சிந்தனைகளை அரசியல்வாதிகள் எப்போது தான் கைவிடப் போகிறார்களோ என்று சுயமாகச் சிந்திக்கக் கூடிய சமூகம் அங்கலாய்க்கிறது.

ஆனால், மேற்கூறப்பட்ட நிகழ்வில் இருந்து அறியக் கூடிய அதிசயமான உண்மை என்னவென்றால், எம்.எச்.-முஹம்மத் எம்.பி. செய்தால், அது சமூகத் துரோகம். இலங்கை முஸ்லிம்களின் அங்கீகாரம் பெற்ற, ஒரேயொரு தலைவர் என்று தன்னைத் தானே ஏற்றிப் போற்றும் அமைச்சர் அஷ்ரஃப் செய்தால் மட்டும், அது சமூகப்பற்று. எந்த வகையில் இது நியாயமாகி விடும்? தனது தலைவர் பதவியையும், பதவியேற்ற உடன் தான் அக்கரைப்பற்றுக்கு எம்.பி. பதவி வழங்க வேண்டும் என்று, தலைவரின் ஒரு பக்கச் சிந்தனையில் ஊறியிருக்கிறது.

1994ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், மு. காவிற்குக் கிடைத்த தேசியப் பட்டியல் எம்.பியில் ஒன்றையாவது, அக்கரைப்பற்றிற்குத் தர வேண்டும் என்று, அன்றைய அக்கரைப்பற்று முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழு, தலைவரிடம் வந்து மன்றாடியும், அந்த எம்.பி. பதவி வழங்கப்பட்டதோ அசித பெரேராவிற்கே. காரணம் தலைவர்க்கும், காலஞ்சென்ற சாணக்க அமரதுங்கவிற்கும் இடையில் இருந்த இரகசிய ஒப்பந்த(?)மாம். இந்த அசித பெரேரா,





அஷ்ரஃப், வட- கிழக்கில் எஞ்சியுள்ள முஸ்லிம்களின் எதிர்காலத்தைக் கிஞ்சித்தேனும் எண்ணிப் பார்க்கவில்லை என்றே தோன்றுகின்றது. இன்னும் இன்றைய அரசு நிலைப்பதற்குத் தானே நாற்றங்கால் என்றும், சிங்கள அரசின் பாதி தனது முஸ்லிம் காங்கிரசே என்றும் முழங்கிச் சிங்கள மக்களது அதிருப்தியையும் பெற்றுக் கொண்டார். தமிழர்களிடத்தில் இவரது செல்வாக்குக் குறைய மற்றொரு காரணியாக அமைந்தது தீர்வுப் பொதி. இந்தத் தீர்வுப் பொதியில் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அம்சங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்த போதிலும் கூடத் தனது ஆதரவைத் தொடர்ந்தும் தீர்வுப் பொதிக்கும், அரசுக்கும் வழங்கி வந்துள்ளார் அமைச்சர் அஷ்ரஃப்.

சிங்கள மக்களின் அதிருப்தியைச் சரி செய்யவே, அமைச்சரின் தீகவாபி பூ வைத்து வணங்கிய விவகாரம் அமைந்தது. இந்த நிகழ்வு இவருக்கு, முஸ்லிம்களிடம் இருந்த கொஞ்ச நஞ்ச மதிப்பையும் குறைத்து விட்டிருந்தது.

1989ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் வாக்கு வேட்டையில், இதே அமைச்சர் அஷ்ரஃப் ஈடுபட்ட போது - அன்றைய ஐ.தே.கவிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்த நேரம் எம்.எச்.முஹம்மத் எம்.பி. அவர்கள் விஹாரையொன்றுக்குச் சென்று பூ வைத்ததாகவும், இப்படியான முஸ்லிம் தலைவர்கள் அரசியலுக்காக இஸ்லாத்தையே விற்கின்றனர் என்றும், வரிந்து கட்டிக் கொண்டு அதை அரசியல் ஆக்கியவர் இந்த அஷ்ரஃப் தான். ஆனால், இதே அஷ்ரஃப் அவர்கள், 1998ம் ஆண்டு செய்த காரியம் என்ன? சிங்களச் சமூகத்தில், தனக்கிருக்கும் கசப்பைச் சப்பைக் கட்டுக் கட்டிச் சரிசெய்வதற்காக, ஒரு வெள்ளிக்கிழமை தீகவாபி விஹாரைக்குச் சென்று, பூ வைத்து வணங்கியிருக்கின்றார். அன்று அமைச்சரின் பிறந்த தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வுக்குப் பின், அமைச்சர் அவர்கள் முஸ்லிம்களின் காதில் பூச்சுற்றுவதை, ஒரு கலையாகவே கொண்டவர் என்பதை உணர முடிந்தது. மக்களை மடையர்களாக்கி, அவர்களின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு அரசியல்வாதிகள் தமது வசதிக்காக எதையும் அரசியல் பலத்தையும் இரையாக வைத்து அப்பாவி முஸ்லிம்களின் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டிருக்கும் அமைச்சரின் திறமையை என்னென்பது !

0 0 0

மலை போல் எதிர்ப்பு. வந்தாலும், தளராத மு.கா. தலைவர் அமைச்சர் அஷ்ரஃப், சேகு இஸ்ஸதீன் எம்.பி.யிடம் மட்டும் அடிக்கடி ஆட்டம் காணுவது ஏனென்று புரியாத புதிராகவே உள்ளது.

அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட சேகு இஸ்ஸதீன் அவர்கள், மு.கா.வின் முதல் தவிசாளரும், காங்கிரசை வளர்ப்பதில் முன்னின்று உழைத்தவருமாவார். கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாட்டால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

சேகு இஸ்ஸதீன் எம்.பி.யாவதற்கு முன்னர் இருந்தே, அமைச்சர் அஷ்ரஃபிற்கு அவரிடம் ஒரு எச்சரிக்கை இருந்து கொண்டே வந்திருக்கிறது. சேகு இஸ்ஸதீனின் ஆதரவாளர்களை என்ன விலை கொடுத்தும் வாங்குவதில், அமைச்சர் மிகப் பெரிய ஆர்வம் காட்டி வந்துள்ளார். 1989ம் ஆண்டின் பொதுத் தேர்தலில், சில நூறு வாக்குகளினாலேயே, பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் தவறவிட்ட சேகு இஸ்ஸதீன், அது நடந்து 10 வருடங்களின் பின்பு, ஐ.தே.க. தேசியப் பட்டியல் மூலம் அவருக்கு எம்.பி. பதவி கிடைத்திருக்கின்றது.

அக்கரைப்பற்று மக்கள், அரசியல் அநாதைகள் என்பதை அடிக்கடி ஒத்துக் கொள்வதாக அவையடங்கும் அமைச்சர், இதுவரை தன்னிடம் இருந்த மூன்று தேசியப் பட்டியல் எம்.பி. பதவியில் ஒன்றையாவது அக்கரைப்பற்றிற்கு வழங்க முனையவில்லை. ஆனால், 9 பெப். 2000 அன்று, சேகு இஸ்ஸதீன் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்த அடுத்த கணமே, அக்கரைப்பற்றிற்கு மு.கா. சார்பில் ஒரு எம்.பி பதவி தருவதாக அமைச்சர் கருணை கொண்டிருக்கிறார்.

கடந்த 06 வருடங்களாக உதிக்காத கற்பனை, ஞான சூனியமான அமைச்சருக்குத் திடீரென உதித்ததன் காரணி யாது? அதுவும் சேகு இஸ்ஸதீன் சந்திரிகா அம்மையாரின் தூரத்து உறவுக்காரர் என்பதும், ஈண்டு குறிப்பிடத்தக்கது. தலைவர் அடிக்கடி செய்து கொள்ளும் இரகசிய(?) ஒப்பந்தங்கள் என்னவென்பது இன்னும் அவிழ்க்கப்பட முடியாத கேள்வி முடிச்சொன்றாகவே உள்ளது.

பாராளுமன்றம் கலைவதற்கு இன்னும் ஒரு சில மாதங்களே உள்ள நிலையில், அசித பெரேராவை இராஜினாமாச் செய்ய வைத்துவிட்டு, அதை மண்ணின் மைந்தன் அதாஉல்லாவிற்கு வழங்கும் அமைச்சருக்கு, அக்கரைப்பற்று மண்ணின் மீது பொங்கி வழியும் திடீர்ப் பாசத்தின் உள் நோக்கம் என்ன? இந்தக் கண் துடைப்பு நடவடிக்கையின் எதிர் விளைவுகள் எவை? - அமைச்சரும், அவர் சார்ந்தவர்களும் பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது.

என்னதான் சொன்னாலும், ஒரு எம்.பி. பதவியாவது கிடைக்காதா என, மனப்பால் குடித்துக் கொண்டிருந்த, அக்கரைப்பற்று மக்களுக்கு இன்று இரண்டு எம்.பி. பதவிகள் கிடைத்துள்ளன. இது உண்மையிலேயே ஒரு அழியாத வரலாறே.

சேகு இஸ்ஸத்தீன் எம்.பியாகி பாராளுமன்றத்தில் முதற் பேச்சை நடாத்தியாகியும் விட்டது.

அந்தப் பேச்சில் தனது தலைவருக்குச் சற்றும் தான் சளைத்தவரல்ல என்று நிரூபித்து விட்டார் அவர்.

தமிழ் மக்களுடைய அதிகாரப் பகிர்வுக்கான அடிப்படைகள் எதையுமே கொண்டிருக்காத தீர்வுப் பொதியை முன் வைத்திருக்கும் ஜனாதிபதி இனப்பிரச்சினையை நியாயமாகவே தீர்த்து வைப்பார் என்று தனக்குக் கொடுத்த அமைச்சர் பதவிக்குப் பிரதியுபகாரமாக மேடைகளில் முழங்கி வரும் அஷ்ரஃப் போல இஸ்ஸத்தீனும் தனக்கு பாராளுமன்றப் பதவி கொடுத்த ரணிலுக்கு நன்றிக்கடனாக இனப்பிரச்சினையை நியாயமாகத் தீர்க்கக் கூடிய ஒரே ஒரு தலைவர் ரணில் தான் என்று பாராளுமன்றத்தில் வெளுத்துக் கட்டியிருக்கிறார்.

செய்நன்றி மறவாச் செம்மல்கள் . வாழ்க உங்கள் பணி!

— பதுறுஸ்ஸமானி

# 'பயங்கரவாதிகளுடனா பேசப் போகின்றீர்கள்?'

## சண்டே ரைம்ஸ் எழுப்புகிற கேள்வி?

".....பயங்கரவாதிகளுடனான பேச்சுவார்த்தை முறைமை மீண்டும் தொடங்கி விட்டது. எப்போதும் போலவே இது அற்புதமான ஒரு யோசனையாக வரவேற்பும் பெற்றுவிட்டது... ஒரு போதும் பரீட்சிக்கப்படாத இந்த அற்புத யோசனையை முன்னெடுக்க சமாதான ஏஜண்டுகள் தயாராகி விட்டன..." புலிகளுக்குப் பல விதங்களில் உதவி புரிந்த என்.ஜி.ஓக்கள் மூலம் உதவி புரிந்து வருகின்ற நோர்வே தான் இதில் இன்று முன்வரிசையில் நிற்கின்றது... இவ்வாறு புலிப்பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த உதவி புரிகின்றவர்கள் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூட அழைப்பது இல்லை...

.... மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு எவ்வாறு பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம். இத்தகைய பயங்கரவாதம் நிலவிய ஏனைய நாடுகளின் தீர்விற்கு வழி சமைத்த பேச்சுவார்த்தை முறைமை இங்கும் சரிவராதா எனச் சிலர் கேட்கின்றனர். அது பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளும் நபர்களின் குண ஆளுமைகளில் தங்கியுள்ளது. நெல்சன் மண்டேலாவுடன், யசீர் அரபாத்துடன், ஜெரி அடம்ஸ்சுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம். ஹிட்லருடன், பொல்பொட்டுடன் இவ்வாறு பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியுமா? அவ்வகையில் பேச்சுவார்த்தைகளில் தீர்வு எட்டப்பட்டு சமாதானம் கண்ட நாடுகளைப் போல் முற்றுமுழுதான இராணுவ பலத்தின் மூலமாகவே சமாதானம் கண்ட நாடுகளும் உள்ளன தானே."

இங்கு மேற்கூறப்பட்ட வரிகள் சிங்கள வீரவிதானவின் சுவரொட்டியிலோ அல்லது அதன் அறிக்கை ஒன்றில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டதோ அன்றில் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கத்தின் வெளியீடுகளில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட வரிகளோ அல்ல. தன்னை நடுநிலை பத்திரிகையாக காட்டிக் கொள்ளும் சண்டே ரைம்சின் முக்கியமான பக்கத்தில் வாசகர்களின் அவதானிப்பை இலகுவில் பெறக்கூடிய ஒரு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு கட்டுரையின் சில பகுதிகளே இது.

அக்கட்டுரையில் மேலும் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. "...இரு தசாப்தங்களிற்கு முன் மாவட்ட அபிவிருத்திச் சபை கொண்டு வரப்பட்டது. பின் திம்புக் கோட்பாடு அதன் பின் மாகாண சபை, இறுதியில் இன்று பிராந்திய சபை, இதுவும் பயங்கரவாதிகளால் தோற்கடிக்கப்பட்டு மறுக்கப்பட்டபின் அடுத்தது ஈழப்பொதியா கொண்டு வரப் போகின்றீர்கள்? பயங்கரவாதிகள் ஒவ்வொரு முறையும் பேச்சுவார்த்தையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பலம்பெற்று அதனை முறித்துக் கொண்டு வெளியேறியபின் அடுத்தமுறை பேச்சுவார்த்தைக்குரிய தீர்வுத் திட்டமாக வைக்கும் ஒவ்வொரு யோசனையும் அவர்களின் தமிழ் ஈழ இலக்கை அடைய ஏதுவான படிக்கற்களாகவே இருக்கின்றன. ஈற்றில் அது தமிழ் ஈழப் பொதியாகவே பரிணாமம் அடையும். உண்மையில் தமிழ் ஈழம் என்பது கூட ஒரு பொய்யான இலக்குத் தான். அவர்களின் உண்மையான இலக்கு முழுநாட்டையும் கைப்பற்றுவதே. அதற்கு ஏற்றாப் போலவே தென்பகுதி எங்கும் தமிழர் விஸ்தரிப்பும் நடைபெறுகிறது. அதிகார பீடத்தைக் கைப்பற்றலும் நடைபெறுகிறது. முழுநாட்டையும் பீதிக்குள் வைத்திருப்பதும், நடைபெறுகின்றது... நாம் (சிங்களவர்கள்) செய்ய வேண்டியது இனி என்னவெனில், சரணாகதி அடைவது ஒன்றே..."

ஒரு பானைச்சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல் சிங்கள தீவிர இனவாத சிந்தனை எந்தளவிற்கு தேசியப் பத்திரிகைகளை பீடித்துள்ளது என்பதற்கு இக்கட்டுரையே நல்ல உதாரணம். இதே பத்திரிகையில் இவ்வார ஆசிரியத் தலையங்கமும் பேச்சுவார்த்தை நல்லதுதான். ஆனால், புலிகள் நன்மை அடைந்து விடக்கூடாது (அதாவது தமிழ் மக்கள்...!) எனக் கூறி இருந்தது. அது மட்டுமன்றி கும்பகர்ண என்ற பெயரின் கீழ் எழுதப்படும் பத்தியிலும் (இப்பெயரில் சம்பிக்க ரணவக்கவே எழுதுவதாக கூறப்படுகின்றது) இதே போக்குப் பற்றியும், தமிழ் விஸ்தரிப்பு வாதம் பற்றியும் சிங்கள மக்கள் எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

சந்திரிக்கா அரசு ஆட்சியில் யுத்தம் செய்ய தொடங்கிய காலத்தில் அது அதனை சமாதான யுத்தம் என அழைக்கும்போது இத்தேசிய பத்திரிகைகள் மட்டுமன்றி முற்போக்கு சிங்கள ஏடுகள் என அழைக்கப்படும் 'ராவய', 'யுக்திய' போன்ற மாற்றுப் பத்திரிகைகளும் கூட, அதனை ஆமோதித்தன. ஆமாம் சாமி போட்டன. ஆனால், அவர்களால் தொடர்ந்து அப்படிச் சொல்ல முடியாமல் போகும் அளவிற்கு அரசியல் நிலைமைகளும், யுத்த நிலைமைகளும் மாறிப்போக இன்று சண்டே ரைம்ஸ், டெய்லி மிரர் போன்ற பத்திரிகைகள் அவற்றைத் தொடர்ந்து செய்கின்றன. அத்துடன் தீவிரபாசிசப் போக்குடைய இனவாத கருத்துக்களுக்கும் மிக இலகுவாக இடம்கொடுக்கத் தலைப்பட்டுள்ளன. இதன் போக்கு தீவிர சிங்கள இனவாதப் பத்திரிகைகளிடம் செல்லாது இத்தகைய தேசியப் பத்திரிகைகளை நாடி வரும் மக்களிடமும் அத்தகைய தீவிர சிங்கள இனவாதத்தைப் பரப்புகின்ற போக்காக அமையும். முக்கியமாக படித்த மத்திய தர வர்க்க மக்களிடம் இது போய்ச் சேர இனவாதம், பாரிய இன அழிப்பிற்குரிய கருத்துநிலை கள அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்து விடும். சிங்கள இனத்தினை வெறியூட்டப்பட்ட சிந்திக்கும் தன்மையற்ற ஒரு சமூகமாக மாற்றியமைக்கும்.

இத்தேசியப் பத்திரிகைகள் ஐயோ சமாதானம் வேண்டும். யுத்தம் கொடூரம் என்று கூறுகின்ற சில நாட்களும் வருவதுண்டு. அது எப்போது எனில், புலிகளால் யாதேனும் ஒரு முகாமோ, பிரதேசமோ கைப்பற்றப்பட்டு ஆயிரக்கணக்கில் சிங்கள இராணுவத்தினர் கொல்லப்படும் போது மட்டுமே இவ்வாறு கூச்சலிடுவர். ஆயினும், ஒரு சில வாரங்களில் மீண்டும் இராணுவ வெற்றி பற்றி அதீத நம்பிக்கை கொண்டு சமாதானம் பேச்சுவார்த்தையினால் மட்டுமா பெற முடியும் எனத் தர்க்கம் செய்வர். இது இன்னொரு வகையில் தமிழ் மக்கள் புலிகளின் இராணுவ வெற்றியே தம் சமாதான தேடல்களை வலுப்படுத்த உதவும் காரணி எனவும் நம்ப வைக்கின்றது.

இருபக்கமும் எதிர் எதிர் முனைகளில் இருந்து கொண்டு இராணுவ வெற்றி மீதே அதிக நம்பிக்கை வைக்கும் கருத்தியல் வளர்ச்சி பெற்ற பின் சமாதானம் என்பது எந்தவிலை கொடுத்தும் எட்ட முடியாத ஒரு விடயமாகப் போக ஈற்றில் எஞ்சுவது இரண்டே - இரண்டு முடிவுகளில் ஒன்றாகத் தான் இருக்கும்.

ஒன்று தனிநாடு பிரிவது, இரண்டாவது முழு நாடும் எரிவது (இன்னுமொரு முறை?). இதுவே சண்டே ரைம்ஸ் போன்ற போலி நடுநிலைப்பத்திரிகைகளின் அரசியல் இலக்காகவும் இருக்கக் கூடுமோ?

-அ.ரஜீ

# இனத்திற்காக நாம் நிர்வாணம்

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமப் பயணத்தில் கிடைத்த ஒரு நிர்வாண அனுபவம்!

அம்பாறை - மஹஓய வீதி வழமையாக காலை 9.00 மணியளவில் தான் திறக்கப்படும். இதனால் விடியற்காலையில் நித்திரை விட்டு எழுந்திருக்கும் அவசரம் எவருக்கும் இருக்கவில்லை. பயணம் முக்கியமானது என்றாலும் நான் பாயிலேயே படுத்துக் கிடந்தேன்.

### வெடிச்சத்தம் கேட்காமல் கழிந்தது நேற்றைய இரவு

வார்த்தைகளால் கூறமுடியா விட்டாலும் இங்கு கழித்த அனைத்து காலைப் பொழுதுகளிலும் பீதியினால் பெருமூச்சு விடாமல் இருந்ததில்லை....!

இன்று தான் இறுதி நாள். இன்னும் சிறிது நேரத்தில் அந்தப் பயம், பீதி, கொடுமை அனைத்தை-யும் இங்கு விட்டு விட்டு நாம் புறப்படப் போகின்றோம். எம்முடன் இருந்த கிறிஸ்தவ பாதிரியார் தமது தனிப்பட்ட வேலைகளுக்காக எம்முடன் கொழும்புக்குப் பயணமாகிறார்.

### நுகலந்தவில் இருந்து நாம் காலை 10 மணிக்குப் புறப்பட்டோம்

'இந்த வாகனம் இல்லா விட்டால் நாம் எத்தனை மணிக்குப் புறப்பட முடியுமோ?' என எம்முடன் பயணித்துக் கொண்டிருந்த பயணி ஒருவர் வினவ ஆரம்பித்தார்.

'செக் பொயின்ட்களில் பல மணிநேரம் எங்களை வைத்துச் சோதனை இடுகிறார்கள். எங்களது கஸ்டங்கள் தான் அவர்களுக்கு விளங்குவதில்லையே விளங்கி-னாலும் அவர்களால் என்ன தான் செய்ய முடியும்.'

கடந்த சில நாட்களாக நாம் இந்த மோசமான நிலையை அனுபவித்திருந்தோம். சோதனைச் சாவடிகளில் இருந்த பலர் கோபத்துடனேயே காணப்பட்டனர். அங்கிருந்த சில பொலிஸ் அதிகாரிகள் நேரடியாகவே தமது விசனங்களை வெளிப்படுத்தி இருந்தனர்.

'எமக்கு 'ஒன்றும் செய்ய முடியாது. எம்மால் இந்த வேலையை செய்யாமல் இருக்க முடியவில்லை'.

மக்கள் போக்குவரத்துச் செய்யும் பஸ்களில் குண்டு வைப்பதன் காரணமாக பாதுகாப்பு பிரிவு எடுத்திருந்த அவசர நடவடிக்கைகள் காரணமாக மக்கள் மட்டுமின்றி பாதுகாப்புப் பிரிவினரும் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருப்பதனைக் காண முடிகின்றது.

சாதாரண சோதனைகளை விடுத்து அனைவரும் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு வெவ்-வேறான சோதனை அறைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு சோதனை செய்யப்படுவதுடன், அவர்கள் தொடர்பான விபரங்களை எழுதவும் நேர்ந்துள்ளது.

கொழும்பில் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது தலைக்கவசம் அணிவது அவசியம் என்றாலும் இந்த சமூகத்தில் தலைக்கவசம் அணிவது தடை செய்யப்பட்டுள்ளது. துப்பாக்கிகளை தூக்கிக் கொண்டு நடமாடுவது தடையாயினும் புலிகளின் தாக்குதலை முறியடிக்க அதிகாரி-களின் ஆணையின் பேரில் துப்பாக்கியைச் சுமப்பது அவசியமாக்கப்பட்டுள்ளது.

'இந்நாட்டில் எமது வாழ்க்கையைப் பற்றி நினைவூட்ட வேண்டும் எனின் குறைந்தது ஒரு கிராமத்தில் 50 பேராவது மரணிக்க வேண்டும்' -என எம்முடன் இருந்த ஒருவர் கோணாகல சம்பவத்தை நினைவு கூர்ந்து குறிப்பிட்டார்.

நுகலந்தவில் இருந்து காலை 10 மணியளவில் புறப்பட்ட நாம் மஹஓயா காவலரணுக்கு வந்த பொழுது மணி 11 அளவில் இருக்கும். அனைத்துச் சோதனை சாவடிகளையும் விட இவ்விடத்தில் அதிக வாகன நெருக்கடியும், மக்களின் நெருக்கடியும் காணப்-பட்டது.

'ஏசி பஸ்களில் வந்தவர்கள் முன்னால் வாருங்கள்' - ஒரு பொலிஸ் அதிகாரி சத்தமிட்டார்.


'லொறிகளை வரிசையாக நிறுத்துங்கள்' - இன்னொருவர்.

'சிறிய வாகனங்களில் வந்தவர்கள் வீதிக்கு அப்பாலுள்ள வரிசைக்குச் செல்லுங்கள்' - இன்னொருவர் சத்தமிட்டார்.

சீக்கிரம் புறப்படலாம் என்ற எண்ணத்தில் நாம் அந்த வரிசைக்குச் சென்றோம். அவ்விடத்தில் வித்தியாசமான வேடத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் நின்று-கொண்டிருந்தார். (அவர் இலக்கத் தகட்டைக் கொண்டிருக்கவில்லை.) அவரின் உதவிக்கு அப்பாவியான ஒரு ஊர்காவல் படை வீரர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

'மேலோட்டமாக பைகளை சோதனையிடாமல், நன்கு சோதனையிடு' என்று அதிகாரி கூற ஊர்காவல் படையினனும் அவ்வாறே செய்தார்.

இதற்கிடையில் பொலிஸ் அதிகாரி பயணிகளின் விபரங்களை எழுதிக் கொண்டார். சிங்களம் தெரியாத முஸ்லிம் நபர்கள் பதிலளிக்க தவறும் போது அதிகாரி கோபமடைந்தார். அவ்விடத்தில் இருந்த முஸ்லிம் இளைஞனும், யுவதியும் பொலிஸ் அதிகாரிக்குப் பிரச்சினையாக இருந்தனர். அவர்களுக்கு சிங்களத்தில் பதிலளிக்க இயலாத நிலையில் ஒரு வயோதிபர் அவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தார்.



'இவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு செல்கிறார்கள்'

'எங்கே கடிதம்'

யுவதி கடிதத்தைக் கொடுத்தார்.

'எங்கே மற்றவரின் கடிதம்' இளைஞனிடம் கடிதம் இல்லை.

'கடிதம் இல்லாமல் எப்படி நேர்முகப் பரீட்சைக்குப் போவாய்?'

யுவதி அவ்விளைஞனின் தங்கையானபடியால் அவரின் பாதுகாப்புக்குத் தான் செல்வதாக வயோதிபர் மூலம் இளைஞர் தெளிவுபடுத்தினார்.

'அண்ணாவும் - தங்கையும் எங்களை ஏமாற்றி விட்டு கொழும்பில் கைவரிசையைக் காட்டவா போகிறீர்கள்' - என்றார் பொலிஸ் அதிகாரி.

இவ்வாறான இழிவான சொல்லாடல்கள் நிறைவுற்ற பின் அனைவரும் ஒரு அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

'உடைகளைக் கழற்றினால் மட்டும் போதாது குனியுங்கள் உள்ளே பார்க்க' ஒரே தடவையில் எம்மால் இந்தக் கூற்றை விளங்கிக் கொள்ள இயலவில்லை. பக்கத்திலிருந்த அப்பாவி ஊர்காவல் படைவீரன் குழப்பத்திலும் வெறுப்பிலும் ஆழ்ந்திருப்பது தெரிந்தது.

எழுதிக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு பொலிஸ் அதிகாரி அறைக்குள் நுழைந்தார். அவ்வேளை முஸ்லிம் இளைஞர் ஒருவர் அறைக்குள் இருந்தார். "கழட்டு கழட்டு. இதனையும் கழட்டு"

பொலிஸ் அதிகாரியின் ஆணை வெளியில் பலமாகக் கேட்டது.

'இப்பொழுது நன்கு குனி.....' அதன் பின் அவர் ஊர்காவல் படை வீரனுக்கு அறிவுறுத்தல் கொடுத்துக் கொண்டு கத்தும் குரலும் கேட்டது.

"எங்கே பார்த்துக் கொண்டி-ருக்கிறாய். இங்கே பார். இங்கே இப்படி உள்ளே நன்கு பார்க்க வேண்டும் புரிந்ததா?"

மீண்டும் வெளியே வந்த பொலிஸ் அதிகாரி புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு தனது வேலையைத் தொடர்ந்தார். வரிசையில் எனக்கு முன் உதய. இவர் இந்நாட்டு மனித உரிமைகள் துறையில் ஆர்வமிக்க ஓர் இளம் செயற்பாட்டாளர். அவரது விபரங்களை எழுதும் போது என் அருகில் இருந்த யுவதி அப்புத்த-கத்தின் தலைப்பைச் சுட்டிக் காட்டினார்.

'நாட்டில் பெயர்போன குற்றவாளிகளின் பெயர்ப்பட்டியல்' அந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு தாளிலும் இவ்வாறு அச்சிடப்பட்டு இருந்தது. மனித உரிமைகள் செயற்பாட்டாளர் தனது காற்சட்டையைத் தூக்கிக் கொண்டு அறைக்குள் நுழைய துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு ஊர்காவல் படை வீரர் பின் தொடர்ந்தார்.

அடுத்ததாக நான்.

முதலில் காற்சட்டையைக் கழற்றினேன்.

'இதனை மாட்ட இடமில்-லையா?' நான் கேட்டேன்.

'இல்லை கையில் வைத்தி-ருங்கள்'

காற்சட்டையுடன் கையைத் தூக்கிக் கொண்டு நான் சுவர் பக்கம் திரும்பினேன். சுவரில் புத்தர் சிலை ஒன்று. அதற்கு அருகில் இன்னும் இரண்டு படங்களும் ஒட்டப்-பட்டிருந்தன.

'ஐயா உள்ளாடையையும் கழட்டுங்கள்' ஊர்காவல் படை வீரன் குறிப்பிட்டான்.

நான் உணர்ச்சிகளை வெளிக்-காட்டிக் கொள்ளாது கழற்றினேன். சுவரில் வீற்றிருந்த புத்தபெருமான் என் நிர்வாணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். முன்பக்கம்

19

## பிம்பம் பிரதி பிம்பம்

உறுப்புகள்
பிரேதசங்களாக உள்வாங்கும்.
வெளிக்கிளம்பும்
உருவாக்கம்.

சலனங்களுக்கு முகமூடியாக
மறைக்கும் உத்தி
முகம்.

பதுங்குகுழி உடலில்
தவறும் உற்பத்திச் சிந்தனைகள்.

சிலிர்ப்பு,
வேதனைக் கொதிப்புக்களில் இறுக
மௌனம் பரவி அடங்கும்
உள்ளடக்கம்.

கனவின் வெற்றுச் சிலும்பல்கள்
அர்த்தமறுபட கோபத்தின்குமிழிகளால் -
சலசலக்கும் புணைவு.


மூடிகள் அகலவிரிய
உடலை எதிர்த்து
'சிதற' அடிப்ப வேண்டும்
பழமங்களை.

ஜெபா; 09.10.1999

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் பாடநூல்கள்
## ஒரு கருத்தோட்டம்



ஒரு காலத்தில் பாட ஏற்பாட்டை அரசாங்கமே தீர்மானித்தது. பாட ஏற்பாடு வழிகாட்டலுக்கேற்ப பலதரப்பட்ட அறிஞர்கள் தமிழ்மொழி, புவியியல், சரித்திரம், குடியியல், அரசியல் போன்ற துறைசார்ந்த பாடநூல்களை தனிப்பட்ட முறையில் எழுதினார்கள். அவர்கள் வெளியிட்ட நூல்கள்பல சுன்னாகம் திருமகள் அழுத்தகம் போன்ற பிரசுரநிறுவனங்களால் வெளியிடப்பட்டன. அக்காலத்தில் பல பாடநூல் சபைகள் இவற்றைப்பரிசீலனை செய்து பாடசாலைகளில் பயன்படுத்த தேவையான அங்கீகாரத்தை வழங்கின. இவற்றை எழுதியவர்கள் தன்னார்வம் காரணமாகவும், ஈடுபாடு, அக்கறை, சமூக நோக்கு, தமிழ் மாணவர்களுக்கு சிறந்த நூல்களை வழங்க வேண்டும் என்ற உணர்வு அடிப்படையில் எழுதினர். தமிழ்ப் பாடநூல்களை தமிழ் அறிஞர்களே எழுதினர். அத்துடன் எஸ்.எப்.டி.சில்வா போன்ற அறிஞர்களின் ஆங்கில நூல்கள் தமிழாக்கம் செய்யப் பட்டன. அரசறிவியல் அறிஞர் பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் குடியியலும் அரசியலும் என்ற ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதி அந்நூலும் தமிழாக்கம் செய்யப்பட்டது. புலமையும் திறமையும் வாய்ந்த அரச அங்கீகாரம் பெற்றவர்களே மொழிபெயர்ப்பாளர்களாக இருந்தனர். மொத்தத்தில் இதில் குறிப்பிடத்தக்க அம்சம் இவர்கள் அரசால் பாடநூல் எழுதும் பதவிகளில் அமர்த்தப்பட்டவர்கள் அன்று. பண ஊக்குவிப்புகளுக்காக அவர்கள் இப்பாடநூல் பணியில் ஈடுபட்டார்கள் என்றும் கூறமுடியாது. இதனால் அவர்களுடைய எழுத்துப்பணி அப்பழுக்கற்றதாக அமைந்தது. மற்றொரு முக்கிய அம்சம் 1950 - 60களில் தான் முதன் முதலாக உயர்வகுப்புகளில் (க.பொ.த. உ/த - க.பொ.த. சா/த) தமிழ் சிங்கள மொழிகளில் இப்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அதற்கு முன்னர் இவ்வகுப்புகளில் ஆங்கில அரசு உயர்தரமான ஆங்கில படிப்பறிவினை விரும்பியமையால் அதற்கேற்றவாறான பாடநூல் அக்காலத்தில் வெளியிடப்பட்டன. அத்துடன் சில சந்தர்ப்பங்களில் ஆங்கில நாட்டில் பயன்படுத்தப்பட்ட பாடநூல்களும் எமது நாட்டில் பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாரங்களையும் காண முடியும்.

1950 - 60களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலை கல்வி பற்றிய அனுபவம் உடையவர்களிடம் கேட்ட போது, உயர்வகுப்பு தமிழ்ப் பாடநூல் அப்போது முதன் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இன்று பாடநூல்கள் பற்றி கூறப்படும் முறைப்பாடுகள் அக்காலத்தில் ஒருபோதும் எழுந்ததில்லை என பெருமையுடன் கூறுகின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் பேராசிரியர் ஏ.ஜே. வில்சனின் அரசியல் நூல் ஒன்றில் தரப்பட்டிருந்த சில கருத்துக்கள் அப்போதைய அரசாங்கத்துக்கு ஒத்துவராததன் காரணமாக அந்நூல் தடைசெய்யப்பட்டதாகவும் அறிகிறோம்.

இப்பின்புலத்தை வைத்து நோக்குமிடத்து இன்று 30 - 50 ஆண்டு காலத்தின் பின் நூற்பதிப்பில் நிச்சயமாக ஏனைய துறைகள் போன்று பல முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். 50களின் கல்வி முறை இன்றைய அல்லது 1990களில் கல்விமுறை என்று எடுத்துப்பார்த்தால் அக்காலக்கல்வி தரத்தில் கூடியிருந்தது. இப்போது தராதரங்கள் வீழ்ச்சியடைந்து விட்டன என்ற கருத்து பலவலாக பலராலும் முன்வைக்கப்படுகின்றது.. ஆனால், இது ஆழ்ந்த பரிசீலனையின் பின்னர் கூறப்பட்ட முடிவல்ல. உண்மையில் அக்கால (1940கள்) பாடசாலைக் கல்வியைவிட இக்கால கல்வி முறையில் பல முன்னேற்றங்கள் உள்ளன என்பதற்கான பல ஆதாரங்களை தரமுடியும் என பேராசிரியர் சோ. சந்திரசேகரன் கூறுகிறார். அவர் கூறுகின்ற கல்வித்துறை முன்னேற்றங்கள் பற்றி வாதங்களை மறுப்பது கடினமாயினும் அம்முன்னேற்றத்திற்கு சமாந்தரமான முன்னேற்றங்கள் பாடநூல் தயாரிப்பிலும் இருந்திருந்தால் அவர் கூறுவதை ஏற்றுக் கொள்ளலாம். இவ்வாறு பாடநூல்கள் பற்றிய ஒப்பீடாய்வு, விமர்சனம், கண்டனம் என்பவற்றில் பெரும் முக்கியத்துவம் ஒன்றுண்டு. பாடசாலைக் கல்வி என்றெடுத்தால் பாடநூல்கள் அதற்கு அடிப்படையானவை என்பதை மறுக்க முடியாது. இன்றைய கல்வி நிலைமையில் பாடநூல்கள் இல்லாத ஒரு கல்விமுறை என்பதை கற்பனைகூடச் செய்ய முடியாது.



நவீன உலகில் ஏற்பட்டுள்ள தொழிநுட்ப புரட்சியின் விளைவாக கணனிகளும், செயற்கைக் கிரக தொடர்புகளும் இன்று வகுப்பறைகளை ஆக்கிரமித்து வருகின்றன. இலங்கை பின்தங்கிய நாடென்றாலும் இவை படிப்படியாக வரத்தான் போகின்றன. இவை மாணவர்கள் எவ்வாறு கற்பார்கள், எவ்வாறு ஆசிரியர்கள் கற்பித்தல் பணியை செய்யப் போகிறார்கள் என்பவற்றை நிர்ணயித்து வருகின்றன.

இதேபோன்றதொரு புரட்சி பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மேலைநாடுகளில் தோன்றியது. அதன் விளைவாகத் தான் அச்சிடப்பட்ட நூல்கள் வெளிவந்தன. அச்சுத்தொழில் எனும் புரட்சியானது கற்றல், கற்பித்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலை நாடுகள் இப்புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையிலேயே பாடசாலை அமைப்பை மறுசீரமைப்பு செய்தன. (1600 - 1650) சில நாடுகள் இத்தொழில் நுட்பத்தை ஏற்க மறுத்து கல்வியில் பின் தங்கின. சீனா அச்சுத்தொழில் நுட்பத்தை பல நூற்றாண்டுகளாக பயன்படுத்திவந்தாலும், பாடசாலைகளில் பாடநூலை அறிமுகம் செய்யவிரும்பவில்லை. ஏனெனில், அக்காலத்து கல்விமான்களாக இருந்த குருமார்களுக்கு இந்த பாடநூல் அவர்களுடைய மேலாட்சிக்கு சவாலாக அமைந்து விடும் என எண்ணினர். ஏனெனில் அச்சுத்தொழில் நுட்பமானது மாணவர்கள் ஆசிரியரின் உதவியின்றி பாடநூல்களின் ஊடாக அறிவைப்பெற புதிய வாய்ப்புகளை வழங்கியது. இன்றும் கூட ஆசிரியர்கள் வருகை தராவிட்டாலும், மாணவர்கள் பாடநூல்கள், பயிற்சி நூல்கள் என்பவற்றை பயன்படுத்தி சுயகற்றலைச் செய்து கொள்ள முடியும். எனவே பாடநூல் என்பது ஒரு பாடத்தில் தெரிவு செய்யப்பட்ட அறிவுத் தொகுதியைக் கொண்டது. மட்டுமல்ல மாணவர்களுக்கு சுயகற்றல் அனுபவத்தின் ஊடாக புதிய கற்றல் திறன்களை வழங்கும் ஆற்றல் உடையது. பாடநூலை விரும்பாத சீனநாட்டு கொன்பியூசிய அறிஞர்கள் கல்வியில் கையெழுத்துக் கலைக்கே (Calligraphic) பெரும் முக்கியத்துவம் வழங்கினர். சீன கலாசாரத்தில் ஒரு பிரதான பண்பாடாக அமைந்த இவ்வெழுத்துக் கலையுடன் அச்சிடப்பட்ட பாடநூல் பொருத்தமற்றதாக இருந்தது. இதேபோன்ற பாரம்பரியங்களைக் கொண்ட ஜப்பானிய பாடசாலைகள் பாடநூல்களை வினைத்திறனுடன் பயன்படுத்தின.

நவீன பாடசாலையின் தந்தை எனக்கருதப்படும் ஜோன் கொமினீயஸ் (1592 - 1670) ஐரோப்பிய கல்வி முறையின் புரட்சிக்கு அடிகோலியவர். இவரே அச்சிடப்பட்ட பாடநூலைக் கண்டுபிடித்து பாடசாலைகளில் அறிமுகம் செய்தவர். கல்வி வரலாற்றில் பாடநூல்களின் அறிமுகம் ஒரு மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவர உதவியதை இக்குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் கல்வித்துறைத் தலைவர்கள் மிக விரைவில் சில விடயங்களைப் புரிந்து கொண்டனர்.

**வே. சண்முகராஜா**

1. மேலைநாட்டுப் பாணியிலான ஏட்டுக்கல்வி பாடசாலை முறையை மாற்றுவது கடினம். அதாவது பாடசாலை அமைப்பு, பாட ஏற்பாடு என்பவற்றில் அடிப்படையான மாற்றங்களை - ஒரு சுதந்திர நாடு உருவாக்கும் தேசிய இலட்சியங்களுக்கு இசைவான ஒரு கல்வி முறையை உருவாக்குவதிலுள்ள சிரமங்களைப் புரிந்து கொண்டனர். அவ்வப்போது தமக்கு புதிதாகக் கிடைத்த அரச அதிகாரங்களைக் கொண்டு பல மாற்றங்களை அவர்கள் பரிந்துரைத்தார்கள். அப்பரிந்துரைகளுக்கும், அவை எதிர்நோக்கிய முட்டுக் கட்டைகளுக்கும், தோல்விகளுக்கும் ஏராளமான உதாரணங்கள் உண்டு.

2. இந்நிலையில் அவர்கள் பாட ஏற்பாட்டு மாற்றங்கள் ஒரு புறம் இருக்க நாட்டின் சகல பின் தங்கிய பிரிவினர்களின் பாடசாலைக்கல்வி வாய்ப்புகளை விரிவு செய்யும் பணியில், ஈடுபட்டனர். கல்வியில் சமவாய்ப்பு, இலவசக்கல்வி, தாய்மொழி பயிற்று மொழி போன்ற விடயங்களில் அக்கறை செலுத்தினர். இந்நிலையில் தான் அரசாங்கம் பாடநூல் தயாரிப்பில் நேரடியாக ஈடுபடத்தொடங்கியது. கல்வியை சனநாயகப் படுத்தும் நோக்கை நிறைவு செய்யும் பணிக்கே முக்கிய முன்னுரிமை வழங்கப்பட்டது. ஒருமைப்பாடுடைய தேசிய கல்வி முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கும் அரசு தரப்பில் வலுப்பெற்றது. அத்துடன் பின் தங்கிய பிரிவினர் சகலரையும் மலிவான பாடநூல்கள் சென்றடைய வேண்டும் என்பதும் ஒரு தேவையாயிற்று. பாட ஏற்பாடு, பாடப்பொருள், பாடநூல் என்பவற்றில் அடிப்படை ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்பது 1970களில் முதன்மை பெற்றிருக்க சோசலிச கொள்கைகளுக்கு ஏற்புடையதாகவும் இருந்தது. இலாப நோக்குடன் மட்டுமே தனியார் செயற்படுவர் என்று கருதப்பட்டமையால் அவர்களிடம் புனிதமான கல்விப்பணியை, குறிப்பாகப் பாடநூல் பணியை ஒப்புவிக்கக் கூடாது என்ற நிலைப்பாடு அக்கால கட்டத்தில் நியாயமானதாகவே இருந்தது. மேலும் அரசாங்கத்தின் இவ்வாறான பாடநூல் கொள்கை பல பிரிவினராலும் வரவேற்கப்பட்டது. தூரப்பிரதேச, கஸ்டப்பிரதேச, சேரிப்புற, தோட்டப்புற பாடசாலைகளில் இருந்து உயர்தரமான நகர்புற, மற்றும் மேட்டுக்குடியினரின் பாடசாலைகள் அனைத்தும் ஒரே பாடநூலைப் பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கை வரவேற்கத்தக்கதாகவே இருந்தது. பாடசாலைகளுக்கிடையேயும், கல்வியிலும், காணப்பட்ட பல அசமத்துவ அம்சங்களை நீக்குவதாகவும் இது அமைந்தது. இவ்வாறு இச்சீர்திருத்தமும் மத்திய அரசின் ஈடுபாடும் பொது நன்மைக்கே என்பதால் அதற்கு அதிக எதிர்ப்புகளும் இருக்கவில்லை. இதன் மற்றொரு வளர்ச்சிக் கட்டமாக ஜே.ஆர்.ஜயவர்த்தன காலத்தில் இலவசப் பாடநூல்களை வழங்கும் திட்டமும் கொண்டு வரப்பட்டது.

பாடஏற்பாடுகளை தயாரித்தல், பாடநூல் எழுதுதல், போன்ற பணிகளைச் செய்ய பல புதிய அமைப்புகளும் கல்வி அமைச்சில் ஏற்படுத்தப்பட்டன. ஏறத்தாழ இருதசாப்த காலமாக இவ்வமைப்புகள் பாடநூல், தயாரிப்பில் ஏகபோக உரிமை கொண்டிருந்தன. ஆயினும், தனிப்பட்டவர்கள் தமது சொந்த முயற்சியில் பாடத்திட்டத்தை ஒட்டிய பல பயிற்சி நூல்களையும் வழி காட்டல் நூல்களையும் தயாரித்து வெளியிட்டனர். இவை யாவும் பாடநூல் பற்றிய ஒரு சௌஜன்னியமான நிலைப்பாட்டை விரிவான முறையில் எடுத்துக் கூறிய போதிலும் பாடநூல் பற்றிய கதை இத்துடன் முற்றுப்பெறுவதற்கில்லை.

காலப்போக்கில் பாடநூல் தயாரிப்பில் அரசின் ஏகபோகம் பற்றி பலரும் கேளவி எழுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1980களில் உலகளாவிய ரீதியில் மத்திய அரசுகளின் திறமையின்மை, நிதிவிரயம், தாமதம், ஈடுபாடின்மை பற்றி பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மக்களுடைய கல்வித்தேவைகள் உட்பட அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் ஆற்றல் அரசாங்க நிறுவனங்களிடம் இல்லையென்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அரச நிறுவனம் என்றாலே வினைத்திறன் அற்றது. பெரும் நட்டங்களை ஏற்படுத்துவது என்ற கருத்துப்பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமூகத்தில் அரசாங்-

19

### தமிழ்ப்பாடநூல் பற்றி சில தமிழ் கல்வியாளரின் கருத்துக்கள்

"தென்னாசியா பிராந்திய நாடுகளில், பாடசாலைக் கல்விமூலம் தம்மீது பெரும்பான்மைக் கலாசாரம் திணிக்கப்படுவதாக பின்தங்கிய சமூக மக்கள் கவலை கொண்டுள்ளனர்"

**பேராசிரியர்: சோ. சந்திரசேகரன்**

"சிங்கள கருத்தேற்றம் கல்வியில் நுழைக்கப்பட்டதால் தேசிய இணக்கம் தேய்ந்து மறைந்தது"

**பேராசிரியர்: வ. ஆறுமுகம்**

"இலங்கையில் இனவாதம் பாடநூல்களிலிருந்தே தொடக்கம் பெறுகின்றது"

**கலாநிதி: துரை மனோகரன்**

"இலங்கையில் இனங்களுக்கிடையே உண்மையிலேயே இன ஐக்கியம் ஏற்பட வேண்டுமானால் பாடநூல்களில் சிறுபான்மை இனத்தவரது பண்பாடு, பாரம்பரியம், பற்றிய தவகல்கள் பொருத்தமான வகையில் இடம்பெறல் அவசியமாகும்".

**விரிவுரையாளர்: து. இராஜேந்திரம்**

எழுத்தாளர் குழுவில் இடம்பெறுபவர்கள் தமிழ் மக்களின் மொழி, பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கைகள், நடத்தைகள் பற்றி தெளிவான அறிவும், நிபுணத்துவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

**விரிவுரையாளர்: மா. சின்னத்தம்பி**

"அரசின் பாடநூல்கள் கொள்கைகளினால் தமிழரின் தனித்துவம், இன அடையாளம், பண்பாடு மூடிமறைக்கப்படுகிறது"

**பேராசிரியர்: சோ. சந்திரசேகரன்**

"தமிழ் மாணவர்களின் கல்விக்கு சாவு மணியடிக்கும் முயற்சி"

**உதவிக்கல்விப்பணிப்பாளர் ந. சந்திரகாந்தன்.**

நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தத்தின் கொடுமை இது தான்!

## அங்கவீனமுற்ற படைவீரர் சங்கத் தலைவர் தயாரத்ன

"விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள போர்க் கைதிகள் 15 பேர் கடந்த பெப்ரவரி 10ம் திகதி முதல், தம்மை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்கள். இந்த விடயம் தொடர்பாக அரசு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக காணாமல் போனோர் படைவீரர் சங்கம், அங்கவீனமுற்ற படைவீரர் சங்கம் என்பன பலத்த விசனம் தெரிவித்துள்ளன. இவ்விடயம் தொடர்பாக அங்கவீனமுற்ற படைவீரர் சங்கத்தின் தலைவர் தயாரத்ன அவர்கள் வழங்கிய நேர்காணல் கீழே தரப்படுகின்றது.

தயாரத்ன அவர்கள் கமாண்டோ றெஜிமென்ட்டின் படைவீரராக செயற்பட்டவர். 1985ல் அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதி தாக்குதலில் இடது கையை இழந்த இவர், தற்போது அங்கவீனமுற்ற படைவீரர் சங்கத்தின் தலைவராக செயற்படுகின்றார்."

**✓ அங்கவீனமுற்ற படையினர் சங்கத்தின் தோற்றம் பற்றி ஏதேனும் கூற முடியுமா?**

எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 6 வருடங்களாகின்றன. நாம் அன்று, இவ்வாறானதொரு யுத்த சூழ்நிலையில் பெருமளவான படையினர் அங்கவீனமுற்றுள்ள நிலையில், அவர்களின் உரிமைகளுக்காகவும், அரசு இவ்வாறானதொரு நிலைமைக்குள்ளான பின் எமக்குக் கிடைக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் சிற்சில பிரச்சினைகள் ஏற்படும் என எமக்கு விளங்கியதினாலும் 1994ல் சிறிய குழுவொன்றை அமைத்து இந்தச் சங்கத்தை ஆரம்பித்தோம்.

இன்று ஆயிரத்துக்கு அதிகமான உறுப்பினர்கள் எமது சங்கத்தில் உள்ளனர். உறுப்பினராகும் நோக்கத்தில் பலர் உள்ளனர். 20 மாவட்டங்களில் எமது சங்கத்தின் கிளைகள் உள்ளன. இந்த கிளைகளில் அனைத்துப் பிரதேசங்களிலும் எமது ஒரு பிரதிநிதியை நாம் நியமித்துள்ளோம்.

**✓ இதுவரை எவ்வாறான செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபட்டு வருகிறீர்கள்?**

99 ம் ஆண்டு வரையில் நாம் எமது உரிமைகள் மற்றும் எமக்கு கிடைக்கவேண்டிய நலன்கள் தொடர்பாக செயற்பட்டு வந்தோம்.

99 லிருந்து நாம் இந்த மோசமான யுத்தத்தை நிறுத்துவதற்கு எம்மால் இயன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஏனெனில், இந்த யுத்தம், ஒரு யுத்தமாக நடைபெறுகின்றதா என்பதை எம்மை விட பொதுமக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இந்த யுத்தத்தை வெல்ல முடியாத நிலையே தற்போது தோன்றியுள்ளது. இதனால், நாம் இந்த யுத்தத்தை நிறுத்தி சமாதான வழியில் அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இந்த யுத்தத்தினால் பாதிக்கப்படுவதும் நாங்களே. அங்கவீனர்களாகுவதும் நாங்களே. 48ல் சுதந்திரம் கிடைத்தது தொடக்கம் இன்று வரை எமது அரசியல் தலைவர்கள் செய்த தவறுகளினால், இன்று இந்தப் பிரச்சினை பயங்கரமானதொரு யுத்தமாக மாறியுள்ளது. எனவே, அங்கவீனமுற்ற படையினர் என்ற வகையில் இந்த யுத்தத்தை நிறுத்த எம்மால் இயன்ற வழிகளை எடுக்கவிடுக்கிறோம்.

இங்குள்ள அரசியல்வாதிகள், மற்றும் உயர்குழாத்தோரை விட எமக்கு சமாதானம் பற்றிப் பேச அதிக உரிமையுண்டு என நான் நினைக்கின்றேன். இந்த உரிமையினால் சமாதானத்தை வலியுறுத்த எம்மால் முடியும் என நினைக்கிறேன். இந்த அடிப்படையில் நாம் ஓராண்டு திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். அத்திட்டத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் அம்சமும் அடங்கியுள்ளது. அத்துடன் கடிதப் பரிமாற்றங்களை மேற்கொள்ளுதல் , புலிகளின் அங்கவீனர்களை சந்தித்தல் போன்ற திட்டங்களை வைத்துள்ளோம். புலிகளின் கருத்துக்களை எண்ணங்களை தென்னிலங்கை மக்கள் இதுவரை நன்கு அறியாது உள்ளனர். அரசியல்வாதிகளும் இந்த விடயத்தில் பொய் தான் கூறுகிறார்கள். எனவே சமாதானத்தை ஏற்படுத்தும் இந்தக் காரியத்தை எம்மால் செய்ய முடியும். புலிகள் எமது எண்ணங்களைப் பற்றி தெளிவுற்றார்களாயின், எந்தத் தரப்பினையும் விட எம்மை அதிகம் நம்புவார்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

**✓ சமாதானத்தினை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க முடியும் என நம்புகிறீர்களா?**

ஆம். உறுதியாக நம்புகின்றோம். எமது வாழ்வு பறிக்கப்படும்போது, பெற்றோர்கள் தமது பிள்ளைகளை யுத்தித்தில் பறி கொடுக்கும் போது, உரிய முறையை கையாளாமல் யுத்தம் செய்யப்படும் போது நாம் எவ்வாறு தலையிடாமல் இருப்பது? சிலர் யுத்தத்தை நிறுத்த வேண்டாம், சமாதானம் வேண்டாம் என்று சுவரொட்டி ஒட்டிப் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். ஆனால், சுவரொட்டி ஒட்டும் இவர்களா யுத்த களத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். மாறாக, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாம் யுத்த களத்திற்கு அனுப்பப்படுகின்றார்கள். அப்படியாயின் எமக்கு ஏன் அழுத்தம் கொடுக்க இயலாது?

இந்த யுத்தத்தினால் அங்கவீனமானவர்கள் இலட்சக்கணக்கில் உள்ளனர். சமாதானத்திற்காகவென்றால் இன்னும் இலட்சக்கணக்காவர்களை எம்மால் திரட்ட முடியும். எனினும், எவரும் எம்மிடம் வந்து இவ்விடயம் பற்றிக் கதைத்ததில்லை. ஆதரவு கோரியதில்லை.


**✓ அங்கவீனமுற்றுள்ள படையினர் தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் திருப்தியளிக்கக் கூடியவையா?**

உண்மையில், அங்கவீனமுற்ற, காணாமல் போன, இறந்த படைவீரர்கள் தொடர்பாக அரசு அக்கறை காட்டவில்லை என முழுமையாகக் கூறமுடியாது. எந்த முறையிலாவது அரசாங்கம் அக்கறை செலுத்தியே வருகின்றது. இது ஒருவகையில் அரசாங்கத்தின் தலையாய கடமை என்றே கூறவேண்டும். எமது தொழில் நாட்டில் பெருமைக்குரிய சிறந்த தொழில். எனினும், நானொரு உதாரணம் கூறுகின்றேன். இராணுவத்தில் ஒருவர் இறந்து விட்டால் எவ்வளவு கொடுப்பனவினை அரசாங்கம் செய்கின்றது? மிகச் சொற்பமான கொடுப்பனவே வழங்கப்படுகின்றது. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மந்திரிமார்களுக்கும் பல லட்சத்திற்கு காப்புறுதி செய்கிறார்கள். இந்த காப்புறுதியை அரசாங்கமே செலுத்துகின்றது.

வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்படுவதாக கூறப்படுகின்ற போதிலும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. ஓய்வூதியம் கிடைக்கின்றது. நட்டஈடு கிடைக்கின்றது. ஆனால், நாம் கூறுவது என்னவென்றால் எமக்கு கிடைக்கும் ஊதியத்தில் எந்தவித ஸ்திரத்தன்மையும் கிடையாது. நாளை சமாதானம் மலர்ந்தால் எமக்கான அனைத்து சலுகைகளும் நிறுத்தப்பட்டுவிடும். இதனால் நாம் எமது ஊதியங்களை ஸ்திரப்படுத்துமாறு கோரிக்கை விடுத்து புதிய திட்டமொன்றைச் சமர்ப்பித்துள்ளோம்.

**✓ தற்போதைய யுத்தச் சூழல் பற்றி தங்கள் கருத்தென்ன?**

இன்று நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் யுத்தம் ஒருபோதும் வெற்றியைத் தராது என்றே கூறவேண்டியுள்ளது. யுத்தம் பற்றிய பூரண அறிவற்றவர்கள் தலையிடும் போது யுத்தத்தின் நோக்கம் சீர்குலைக்கப்பட்டு விடுகின்றது. இந்த முறையில் யுத்தம் செய்து வென்ற நாடுகள் என்று உலகில் எதுவும் இல்லை. எத்தனையோ நாடுகள் 10,15 வருடங்களாக பலதரப்பட்ட கெரில்லா அமைப்புகளுடன் போரிட்டாலும் இறுதியில் சமாதான வழியையே நாடின. இந்த வகையில் ஒரு கெரில்லா அமைப்புடன் போரிடும்போது சம்பிரதாயமான மரபு போர்முறைகளைக் கையாள இயலாது. ஆகவே யுத்தத்திற்கு அரசியல் தீர்வு அவசியம் என்றே நான் கருதுகின்றேன். அனைவரும் அரசியல் தீர்வுக்கே ஒத்துழைக்க வேண்டும். எதிர்க் கட்சிகளும், அரசியல் தீர்வுக்கே ஆதரவளிக்க வேண்டும். தமிழ்க் கட்சிகளைப் பாருங்கள். தமிழ் மக்களுக்காக அவர்கள் என்ன தான் செய்கிறார்கள். கொழும்பில் இருந்து கொண்டு ஆடம்பர வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். சரியானதோ, பிழையானதோ எல்லாவற்றுக்கும் கையை உயர்த்துகிறார்கள். தமிழ் மக்களுக்காக பேச அவர்கள் முன் வருகிறார்கள் இல்லை.




**✓ புலிகள் இயக்கத்தினரின் காவலில் இருக்கும் படையினர் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் நிலை பற்றி....?**

புலிகள் இதற்கு முன்னரும் பல முறை படையினரை விடுதலை செய்துள்ளனர். ஆனால், அரசு இது பற்றிப் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை. புலிகள் இயக்கம் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு இயக்கம். அவ்வாறெனில், ஏன் அவர்களுடன் தொடர்புகள் வைக்கிறார்கள் இல்லை. புலிகள் இயக்கம் இந்த நாட்டில் அரசியல் விடயங்களில் தவிர்க்கப்பட முடியாத ஓர் இயக்கம் என்பதையும் மறந்து விடலாகாது. அவர்கள் போர்க் கைதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கியுள்ளனர். ஆனால், அரச தரப்பில் உரிய அவதானம் இதுவரையிலும் செலுத்தப்படவில்லை. புலிகள் எமது படைவீரர்களை முன்பு விடுதலை செய்தனர். அதற்கும் அரசு தரப்பில் எந்தவித அக்கறையும் செலுத்தப்படவில்லை எனலாம்.

**✓ அரசாங்கம் இவ்வாறு அக்கறையற்று இருப்பதன் காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்?**

இவர்களெல்லாம் வறிய பெற்றோரின் பிள்ளைகள் என்பதினால் அரசாங்கம் அக்கறை காட்டாது இருக்கின்றதோ என்னவோ தெரியவில்லை. எவருக்கும் இது பற்றி அக்கறையில்லை எனலாம். இது தான் யுத்தத்தின் கொடுமை. நாம் இதனால் தான் சமாதானத்தை ஏற்படுத்த அதிக ஆவல் கொண்டுள்ளோம். அரசுக்கு, எதிர்க்கட்சிக்கு, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு, தமிழ் அமைப்புகளுக்கு சமாதான வழிக்கு வாருங்கள் என அழுத்தம் கொடுக்க விரும்புகிறோம். விடுதலைப் புலிகள் உண்ணாவிரதம் இருக்கும் படைவீரர்களை பார்வையிட அனுமதித்துள்ள இந்தச் சந்தர்ப்பம் அரசுக்கு நல்லதொரு வாய்ப்பு எனலாம். அரசு சரியான அக்கறையை இந்த விடயத்தில் செலுத்த வேண்டும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**✓ உங்களது சங்கம் இவ்விடயத்தில் எவ்வாறான தலையீடுகளை மேற்கொண்டுள்ளது?**

நாம் இவ்விடயம் பற்றி பரந்தளவில் பிரச்சாரங்களைச் செய்கின்றோம். தொடர்பூடகங்கள் மூலமாக இவ்விடயம் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுகிறோம். நாம் அரசுக்கு இவ்விடயம் தொடர்பாக சிறந்த சமிக்ஞையை வெளிப்படுத்துங்கள் என்றே கூற விரும்புகின்றோம். அரசு பெற்றோர்களை, தொடர்பூடகவியலாளர்களை படைவீரர்களை பார்வையிடச் செல்ல அனுமதித்தால் அது சிறந்ததொரு சமிக்ஞையாகக் கொள்ளப்படும். இப்பொழுது கூட அரசு அதிகம் தாமதித்து விட்டது என்றே தோன்றுகின்றது. படைவீரர்கள் இறந்தாலும் அவர்களால் பொறுப்பு கூற இயலாது. அந்தப் படைவீரர்கள் பதினைந்து பேரும் எந்த முறையில் உண்ணாவிரதம் இருக்கின்றனர் எனவும் எமக்குத் தெரியாது. எனவே அரசு கிரமமான முறையில் இவ்விடயத்தில் அவதானம் செலுத்த வேண்டும் என்பதையே கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

— ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்



# நீரும் நெருப்பும்

1998 ஜூலை மாதத்தில் இந்திய குஜராத்தி, மகாராஷ்டிரா, மாநிலங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது ஒரு நாடகம்.

'நதுராம் கோட்சே பேசுகிறேன்' என்ற பெயரில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்தை, உடனடியாகத் தடை செய்யுமாறு கோரிப் பலத்த ஆர்ப்பாட்டங்களும், தாக்குதல்களும் நடைபெற்றன.

காந்தியை இழிவுபடுத்துவதாகவும், அவரது கொலையை நியாயப்படுத்துவதாகவும் இந்த நாடகம் இருக்கிறது, என்பதே அன்றைய ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதான குற்றச்சாட்டாக இருந்தது.

மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி, இந்த நாடகம் மேடை யேற்றப்படுவதற்கு எதிரான தடை மகாராஷ்டிரா அரசாங்கத்தால் விதிக்கப்பட்டது.

இப்போது உத்தரப் பிரதேச அரசாங்கம், தீபா மேத்தாவின் 'வோட்டர்' (தண்ணீர்) என்ற படத்திற்கான படப்பிடிப்புகளை, வாரணாசியில் (கங்கையோரம்) நடாத்துவதற்கு அனுமதி மறுத்துள்ளது.



படம் தயாரிக்கப்படுவதற்கான சகல அனுமதிகளையும், படத்தின் சகல வசனங்களும் உரிய அதிகாரிகளுக்குக் காட்டப்பட்டுப் பெறப்பட்ட பின்னரே படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டது என்ற போதும், ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பிற்குப் பயந்து இதை மாநில அரசாங்கம் தடை செய்திருக்கின்றது.

'ஃபயர்' என்ற ஒருபாலுறவுப் (லெஸ்பியன்) படத்தினைத் தயாரித்துப் புகழ் பெற்ற படப்பிடிப்பாளரான தீபா மேத்தா அவர்களின் இந்தப் படம், இந்தியப் பெண்களை அவமானப்படுத்துவதாகவும், இந்தியாவின் நற்பெயரைக் களங்கப்படுத்துவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

'நதுராம் கோட்சே பேசுகிறேன்' அல்லது 'காந்தி' என்று அழைக்கப்பட்ட, மேலே குறிப்பிட்ட நாடகத் தடைக்கும், இப்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள 'வோட்டர்' தடைக்கும் இடையில் உள்ள ஒற்றுமை இரண்டிலும் பீ. ஜே. பீ. அரசின் முக்கிய பங்காளி அமைப்புக்களான, சிவசேனையும், ஆர்ப்பாட்ட இயக்கமும் சம்பந்தப்பட்டிருப்பது தான். ஆனால் ஒரு வித்தியாசம்.

நாடகத்தினைத் தடை செய்வதற்கான அன்றைய கோரிக்கையைத் தீவிரமாக எதிர்த்தவர்களும், அந்த நாடகத்தில் காந்தியை இழிவுபடுத்துவதாக எதுவும் இல்லை என்றும், சாட்சி சொன்னவர்களும் அதற்குப் பரிந்து பேசியவர்களுமான சிவசேனையினர் தான் இன்று, 'வோட்டர்' படத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற ஆர்ப்பாட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னைய நாடகம் காந்திஜியை அவமானப்படுத்துவதாகவும், கோட்சேயை நியாயப்படுத்துவதாகவும் அமையவில்லை என்று, அதன் தயாரிப்பாளர் டல்வி கூறிய போதும், அப்படி அமைந்திருந்தால் கூடத் தப்பில்லை என்று கருதும் நிலைமையே சிவசேனை அமைப்பினரிடம் இருந்தது. அன்று அவர்கள் இந்த நாடகத்திற்குப் பரிந்து பேசினாலும், அந்தப் பேச்சு 'வெளிப்பாட்டுச் சுதந்திரம்' மீதான அச்சுறுத்தலுக்கு எதிரான நியாயப்பாட்டில் இருந்து பேசப்படவில்லை. பதிலாகத் தமது, இந்து வெறித்தனத்திற்கு எதிரானவர்களால் இத் தடைக் கோரிக்கை எழுப்பப்பட்டது என்பதற்காகவே பேசப்பட்டது.

இப்போதோ, சிவசேனையினர் இந்தப் படம் இந்தியாவையும், இந்தியப் பெண்களையும் அவமானப்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர்.

தீபாவின் இப் புதிய திரைப்படத்தின் கதை 1930 இல் வாரணாசியில் உள்ள விதவாசிரமத்தில் தங்கியிருந்த ஒரு இளம் விதவைப் பெண்ணை மையமாக வைத்துப் பின்னப்பட்டுள்ளது. இவ்விளம் விதவை, தன் மீது ஏற்பட்ட பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள நடாத்தும் போராட்டங்களையும், அவள் காந்திஜியின் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் இணைந்து கொள்வதையும் அடிப்படையாகக் கொண்டு அக் கதை உருவாக்கப்பட்டிருந்தது.

பால்ய வயதுத் திருமணமும், இளம் விதவையாதலும் ஏற்படுத்திய சமூகக் கொடுமைகளை இப் படத்தில் சித்திரிக்கத் திட்டமிட்டிருந்தார் தீபா மேத்தா. உண்மையில் இந்துத்துவத்தின், இந்த வெறித்தனமான பெண் மீதான கொடுமையை அம்பலப்படுத்துவதாக இந்தப் படம் அமைந்து விடும் என்ற அச்சமே சிவசேனை, ஆர். எஸ். எஸ். போன்ற இந்துத் தீவிர வெறி அமைப்புக்களின் எதிர்ப்புக்கான காரணமாகும்.

விதவைகளை, விபச்சாரிகளாகச் சித்திரிப்பதாக இப் படம் அமையப் போகிறது என்றும், வாரணாசியில் இப் படத்தைத் தயாரிக்க அனுமதிப்பது அதன் புனிதத் தன்மையையே கெடுத்து விடும் என்றும் ஆர். எஸ். எஸ். போன்ற இந்து வெறி அமைப்புக்கள் எச்சரிக்கின்றன.

திரைப்படப் படப்பிடிப்பு தொடங்கவிருந்த முதல் நாளன்று அதாவது ஜனவரி 31ம் திகதியன்று படத் தயாரிப்புக்காகப் போடப்பட்டிருந்த ஷெட்களையும், பிற விலையுயர்ந்த பொருட்களையும் இந்து வெறிக் கும்பல் ஒன்று தீயிட்டு எரித்தது.

இள வயதுத் திருமணம் என்பது - இள வயதுச் சிறுமிகளை வயதான ஆண்களுக்கு மண முடித்து வைப்பது - இப்போதும் இந்தியாவின் பல பாகங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. 30களில் இந்த நிகழ்வு மிகச் சாதாரணமாக நிலவியதுடன், கணவனை இழந்த இளம் விதவைகள், சமூகத்திலிருந்து ஒதுக்கப் பட்டவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டனர். அவர்கள் வாரணாசியிலுள்ள விதவையர் மடங்களில் தமது எஞ்சிய காலத்தைக் கழித்து வந்தனர். தலை சிரைக்கப்பட்ட நிலையில் இவ்வாறு வாழ்ந்து வந்த, இளம் விதவைகள் விபசாரத்திற்கு வற்புறுத்தப்படுவது 30களில் நடைமுறையில் இருந்தது என்று இப் படம் கூறுவதாக இப் படத்தை விமர்சிப்பவர்கள் கூறுகின்றார்கள்.

கடந்த கால வரலாறுகளை மூடி மறைப்பதும், இந்துத்துவம் எப்போதும் ஒரு புனிதமான தன்மையைக் கொண்டதாக இருந்து வந்தது என்று நிறுவுவதும் இன்றைய இந்துவெளி அமைப்புகளின் இருப்புக்கு அவசியமான ஒன்றாக உள்ளது. அதனால் தான், இதனை மறுக்கின்ற, இந்துத்துவத்தின் 'புனிதத்' தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிற படைப்புகள் மீது இந்த அமைப்புகள் கடுங் கோபம் கொள்கின்றன.

இந்தியக் கலாசாரம், பண்பாடு, அதன் பழமையும், புனிதத்துவமும் என்ற பெயரால் தொடர்ந்து பெண்கள் அடிமைகளாக வைக்கப்பட்டிருப்பது பற்றி இவர்கள் யாரும் அக்கறைப்படுவதில்லை.



தீபாவின் ஃபயர் படமும் சரி, அதன் பின் அவர் தயாரித்த 'ஏர்த்' படமும் சரி பெண்கள் குறித்து எழுப்பிய கேள்விகள் பற்றி எந்த அக்கறையையும் காட்டாத, இந்த இந்து வெறியர்கள் பெண் நிலை சார்ந்த விமர்சனத்தினைத் தாக்குவதிலேயே குறியாக உள்ளனர்.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், பொதுவாகவே இது போன்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடப்பது போல, இந்தப் படத்தின் வசனங்களையோ, தீபா இதை எவ்வாறு படம் பிடிக்க உத்தேசித்துள்ளார் என்பது பற்றியோ இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் யாரும் அறியார் என்பது தான். அவர்களில் ஒருவரேனும் திரைக் கதையைப் படித்தவர்கள் அல்ல. எப்படிச் சல்மான் ருஷ்டியின் சாத்தானின் வேதங்கள் என்ற நாவல் தடை செய்யப்பட்டதோ, எப்படி தஸ்லிமா நஸ்ரீனின் 'லஜ்ஜா ' என்ற நாவல் தடை செய்யப்பட்டதோ அதே போன்ற கும்பல் மனோபாவமும், அரசியல்வாதிகளின் பதவி வெறியும் தான் இந்தத் திரைப்பட விடயத்திலும் செயற்பட்டிருக்கின்றது.

படப்பிடிப்பை எதித்தவர்களைக் கட்டுப்படுத்தப் பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அதிகாரத்தில் இருக்கும் பீ. ஜே. பீ. அரசாங்கத்தின் ஆதரவாளர்களான ஆர். எஸ். எஸ்., சிவசேனையின் பின்னணியுடன் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடந்ததால் அதைத் தடுக்க முடியவில்லை.



" வர்ணாசி மக்கள், இந்தப் படத் தயாரிப்பை எதிர்த்துத் தம் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருப்பார்கள் என்றால், இப் படப்பிடிப்பை எம்மால் அனுமதிக்க முடியாது " என்று முதலமைச்சர் ராம் பிரகாஷ் அறிவித்துள்ளார்.

ஆனால், உண்மையில் படத் தயாரிப்பை எதிர்த்தவர்கள் யார், அதற்கான பின்னணி என்ன என்பது முதலமைச்சருக்குத் தெரியாத விடயம் அல்ல.

படத்துக்காகவே தனது தலை முடியை மொட்டை அடித்துக் கொண்ட பிரபல நடிகை ஷபானா ஆஸ்மி, அக்ஷெ கன்னா, நந்திதா தாஸ் போன்றவர்கள் இப் படத்தில் நடிக்கிறார்கள்.

ஜனவரி 31ம் திகதிய ஆர்ப்பாட்டத்தில், பாரதீய ஜனதாக் கட்சியின் பல தலைவர்கள் முன்னின்று நடாத்தினார்கள் என்று அங்கிருந்து வந்த செய்திகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட, கிட்டத்தட்ட 500 பேர் அடங்கிய கும்பலுக்குத் தலைமை தாங்கிய முக்கிய தலைவர்களில் ஒருவராகப் பா. ஜ. கவின் அகில இந்தியப் பெண்கள் அமைப்புத் தலைவி இருந்திருக்கிறார் என்பது, இந்தத் தடையின் பின்னால் உள்ளவர்கள் யார் என்பதைத் தெளிவுபடுத்தப் போதுமானதாகும்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல், ஆர். எஸ். எஸ். இயக்கத்தில் அரசாங்க ஊழியர்களும் சேர்ந்து கொள்ளலாம் என்று வாஜ்பாய் அறிவித்தது. அதற்கு மேலும் அழகூட்டுமாப் போல், அதுவும் ஒரு சமுதாய அமைப்புத் தான் என்று அறிவித்தார், தமிழக முதல்வர் கருணாநிதி.

இந்துத்துவத்திற்கும், பார்ப்னீயத்திற்கும் பல்லக்குத் தூக்கப் பெரியாரின் சீடர்கள் என்று பெருமையடிப்பவர்களும் புறப்பட்டு விட்டார்கள்.

எந்தப் பால்ய மணத்தை எதிர்த்துத் தன் ஆயுள் உள்ளளவும், சளைக்காமல் பெரியார் போராடினாரோ, அதை நியாயப்படுத்த விளையும் பா. ஜ. கவுக்குக் கருணாநிதி பல்லக்குத் தூக்குவது தான் இந்த நூற்றாண்டின் முதலாவது பெரும் துயரம் !

— அரவிந்

நன்றி - நூலகத்திட்டம்



ஹன்டி பேரின்பநாயகம் :

# விட்டுச் சென்ற விழுமியங்கள்!

(சென்ற இதழின் தொடர்ச்சி)


### 1924 – 34 காலப்பகுதி பற்றிய ஆய்வு

அந்த விழுமியங்களை வாலிபர் காங்கிரஸ் இயங்கிய காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்து மக்கள் அவர்களின் இலட்சியங்கள் சாதனைகள் ஆகியவற்றின் பின்னணியில் நோக்குதல் வேண்டும். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மாத்திரமல்லாமல், நாடு முழுவதிலுமே கல்வித்துறைக்கும், பொது வாழ்க்கைக்கும் அவர் ஆற்றிய அளப்பரிய சேவைக்காகவும் நாம் அவரை நினைவுகூரக் கடமைப்பட்டவர்கள். பல்வேறுபட்ட பொது விடயங்கள் தொடர்பாக அவர் ஆற்றிய பணிகளை இங்கு நினைவுகூர முற்படவில்லை. வாலிபர் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் என்ற வகையிலும் அந்தப் பதவி வாயிலாக வரலாற்றில் அவருக்கு வழங்கப்பட வேண்டிய ஸ்தானம் பற்றியுமே இன்று கவனஞ் செலுத்துகிறேன். ஆரம்பத்தில் மாணவர் காங்கிரஸ் என்று பெயரிடப்பட்டிருந்த வாலிபர் காங்கிரஸ் 1924ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஒரு தசாப்தத்துக்கும் மேலாக தமிழ் மக்களின் அரசியல், கலாசார வாழ்வில் வலுமிக்க ஒரு சக்தியாக அது விளங்கியது. இந்தியாவில் தோன்றிய காந்திய தேசிய இயக்கத்தின் செல்வாக்கு, யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய தாக்கம் வாலிபர் காங்கிரசுக்கு உந்து சக்தியாக அமைந்ததெனலாம். அந்த அளவுக்கு இந்திய தேசிய காங்கிரசும், காந்தியும் யாழ்ப்பாண மக்களைக் கவர்ந்திருந்தனர்.

1924இல் ஹன்டி பேரின்பநாயகம் பீ. ஏ. பரீட்சை எழுதிய பின்னர், யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். இதற்கு முன்னர், அவரும், சில நண்பர்களும் சேர்ந்து தேசிய சுதந்திரத்திற்கென்று ஒரு இயக்கத்தைத் தொடங்கத் திட்டமிட்டனர். இதன் பயனாக 1924 டிசெம்பர் மாதத்தில் மாணவர் காங்கிரஸ் உதயமாயிற்று. ஆரம்பத்திலிருந்தே மாணவர் காங்கிரஸ் நாடளாவிய வீச்சுடையதாகவும், எந்த வகையான குறுகிய நோக்கங்களையும் கடந்ததாகவும், தேசிய ஐக்கியம், அரசியல் சுதந்திரம் முழு இலங்கையிலும் சமூக, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை வரித்ததாகவும் விளங்கியது. நாட்டின் சகல இனங்கள், வகுப்புகள், சாதிகளிலிருந்தும் இளைஞர்களை அணைத்துக் கொள்ள அறிவுபூர்வமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1924இல் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் காங்கிரசின் நோக்கங்கள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டன.

அவையாவன :

காங்கிரஸானது தாய் நாட்டின் மேம்பாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்தல் வேண்டும். மத அல்லது சாதி, அடிப்படையில் எத்தகைய வேறுபாடும் காண்பிக்கப்படலாகாது: வருடாந்தக் கூட்டங்களில் சகல சாதிகள் கோட்பாடுகளைச் சேர்ந்தவர்களும் பிரதிநிதித்துவம் பெறல் வேண்டும். குறுகிய கட்சி சார்பான பிரச்சினைகள் எழுப்பப்படலாகாது! தீண்டாமையெனும் சாபக்கேட்டை நீக்கவும் உறுப்பினர்கள் முன்வரவேண்டும். தேசிய இலக்கியம் கலை, இசை ஆகியவற்றைக் கற்கவும், தேசிய மொழிகளில் புனைகதை, வரலாறு, பெரியார் சரிதைகள், விஞ்ஞான நூல்கள் ஆகியவற்றை எழுதி-வெளியிடவும், உறுப்பினர்கள் முயலுதல் வேண்டும். காந்திய வழியைப் பின்பற்றி வெளிநாட்டுப் பொருள்களைப் புறக்கணித்து, முடிந்தவரை உள்நாட்டு உற்பத்திகளையே ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மேற்சொன்ன தீர்மானத்தில் ஆடை அணிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படாவிட்டாலும் தேசிய உடை அதிலும் குறிப்பாகக் கதராடையை அணிதல் வேண்டுமென்பது மறைமுகமாகப் பெறப்பட்டது. வாலிபர் காங்கிரசின் பல உறுப்பினர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தேசிய உடைகளையே அணிந்தனர். ஏனையோர் முடிந்தவரை அடிக்கடி அவற்றை அணிந்தனர். தென் புலத்திலே ஆங்கிலம் கற்ற வர்க்கத்தினரில் ஒரு சிலரைத் தவிர்ந்த, ஏனையோர் மத்தியிலே சமூக, கலாசார, மொழி சார்ந்த மறுமலர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் 1956ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் ஏற்பட்டன. அப்போது கூடப் பொது மக்களின் பார்வைக்காகவே அவை பயன்படுத்தப்பட்டன. இந்த வர்க்கத்தினால் பலர் பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு போல, அரசியல் நோக்கங்களுக்காகத் தேசியவாதிகளாகவும், தனிப்பட்ட வாழ்க்கையில், மேற்குலக மோகிகளாகவும் இரட்டை வேடம் பூண்டனர். யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான மக்கள் மத்தியிலே இத்தகைய 1956ஆம் ஆண்டோ, அதனை அடியொற்றிய தேசிய உடை, பாற்சோறு பரிமாறுதல் போன்ற 'எழுச்சி'க்கு அவசியமேற்படவில்லை. படாடோபமற்ற, போலித்தனமற்ற, உண்மையான, மறுமலர்ச்சி 1920களிலேயே யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருந்தது. இந்தப் பெரியார்களிற் சிலர் 1921 இல் மகாத்மா காந்தியின் தலைமையில் நடைபெற்ற 'விதேசித் துணி எதிர்ப்பு' இயக்கத்தின் வசப்பட்டு மாணவர்களாக இருந்த போதே மேற்கத்திய ஆடை, அணிகளைக் கைவிட்டனர்.


ஹன்டி பேரின்பநாயகம்

ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த மறக்க முடியாத சம்பவம் ஒன்றை ஒருமுறை சொன்னார். 1922 ஆம் ஆண்டில் லண்டன் இன்டர் ஆர்ட்ஸ் பரீட்சையில் சித்தியடைந்த அவர், யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாச் சொற்பொழிவை நிகழ்த்தும் வாய்ப்பைப் பெற்றார். அந்த ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னோடியான, மட்டக்களப்புச் செமினரியின் நூற்றாண்டாகவும் அமைந்தது. ஹன்டி தேசிய உடையே அணிவேன் என்று பிடிவாதமாக நின்றார். அதிபர் பிக்கெல் அவர்களோ, சூட்டும், ரையும் அணிய வேண்டுமென்று வற்புறுத்தினார். பிக்கெல் அவர்கள் மீது ஹன்டிக்கு மிகுந்த மதிப்பும், பற்றுதலும் இருந்தபோதும் இந்த விடயத்தில் மசிய மறுத்து விட்டார். வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்திலேயே, அவர் தமது கோட்பாடுகளில் பற்றுறுதி கொண்டவராக விளங்கினார். தன்முடிவை மாற்றுவதென்பது அவருக்குத் துன்பம் தருவதாய் இருந்தது. ஈற்றில் சொற்பொழிவு ஆற்றும் கௌரவம் லைமன் குலதுங்கம் அவர்களுக்குக் கிடைத்தது. ஹன்டி தம் வாழ்நாளில் பெரும் பகுதியில் தேசிய உடையே அணிந்தவர் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

காங்கிரஸின் வருடாந்தக் கூட்டங்கள், குடாநாட்டின் வெவ்வேறு பாகங்களில், மூன்று நாளைக்கு மேல் நடைபெறும். 1924ஆம் ஆண்டுக் கூட்டங்கள் யாழ்ப்பாண நகரத்தில் நடைபெற்றன. 1925, 1926, 1927ஆம் ஆண்டுகளில் கீரிமலையிலும், 1929ஆண்டில் காங்கேசன்துறையிலும், 1930இல் திருநெல்வேலியிலும் நடந்தேறின. 1931ஆம் ஆண்டில் நடைபெற்ற ஏழாவது வருடாந்த நிகழ்ச்சி கோலகலமானதாக அமைந்தது. அந்த ஆண்டிலே தான் பகிஷ்கரிப்பு நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண முற்றவெளியில் விசேடமாக அமைத்த பந்தலில் அந்த வருடத்தின் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டு விழாவில் சிறப்பு பேச்சாளராகவும், தலைவராகவும் அழைக்கப்பட்டிருந்த ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்யாய அவர்கள், தட்டாரத் தெருச் சந்தியில் இருந்து, மாநாடு நடைபெறவிருந்த மைதானத்துக்கு மூன்று வெண் புரவி பூட்டிய வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டார். அந்த வாகனத்தின் முன்னே, பல்வேறு வாத்தியக் குழுவினரும், கதராடையும், காந்திக் குல்லாயும் அணிந்த இளைஞர்களும் அணிவகுத்துச் சென்றார்கள். நாட்டின் சகல சமூகத் தலைவர்களினதும், ஐக்கியத்தைக் குறிக்கும் வகையில் சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்களைக் கொண்டமைந்த காங்கிரஸ் கொடிகளை அவர்கள் தாங்கிச் சென்றார்கள். மற்றெந்த வருடாந்த மாநாட்டிலும் காணாத அளவு தொகையான மக்கள், 1931ஆம் ஆண்டு நிகழ்ச்சிகள் 'வந்தே மாதரம்' என்ற கீதத்துடனும், பாரதியாரின் சுதந்திரப் பாடல்களுடனும் ஆரம்பமாயின.

இந்த மாநாட்டிலே தான் மாணவர் காங்கிரஸ், வாலிபர் காங்கிரஸ் என்னும் பெயர் - மாற்றம் பெற்றது. 1931இல் யாழ்ப்பாண மக்களின் எண்ணப் போக்கினை உருவாக்குவதில், வாலிபர் காங்கிரஸ் உச்ச நிலையை எய்தியது. 1932,1933 ஆகிய ஆண்டுகளிலும் மாநாடுகள் நடத்தப்பட்டன. 1934ஆம் ஆண்டு மாநாடு தான் கடைசியாக நடைபெற்ற மாபெரும் வைபவம். அதன் பிறகு 1940களின் முற்கூறுவரை மாநாடுகளிலும், கூட்டங்களிலும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்பட்டன.

வாலிபர் காங்கிரசின் வருடாந்த மாநாடுகளிலும், கூட்டங்களிலும் புகழ் பூத்த அறிஞர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், கலைத்துறைப் பெரியார்கள் உரையாற்றினார்கள். இவர்களில், இந்தியாவில் இருந்து வந்த மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, ராஜாஜி, சத்தியமூர்த்தி, கல்யாணசுந்தர முதலியார், கமலா சட்டோபாத்யாய ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அநேகமாக எல்லா மாநாடுகளிலும், எதிர்காலத்தில் அரசியல் தலைவர்களாகப் பரிணமித்த சிங்கள வாலிபர்கள், சமூகமளித்தும், உரையாற்றியும் சிறப்பித்தார்கள். டீ. பீ. ஜயதிலக, பி. டீ. எஸ். குலரத்ன, ஜீ. கே. டபிள்யூ. பெரேரா, பிரான்சிஸ் டீ சொய்ஸா, சீ. ஈ. கொரியா, எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க, எஸ். டபிள்யூ. தசநாயக்க ஆகியோர் இவர்களில் அடங்குவார். பின்னைய ஆண்டுகளில் இடதுசாரி இயக்கத்தைச் சார்ந்த முக்கியமான பிரமுகர்களான என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டீ சில்வா, லெஸ்லி குணவர்தன, கெலினா பெரேரா ஆகியோரும், பிறரும் வாலிபர் காங்கிரஸ் மேடைகளில் உரையாற்றியதுடன், ஹன்டியுடனும், அவரது சகாக்களுடனும் அன்னியோன்னியமாகக் கூடிப் பழகினார்கள். தமிழ் மக்களில் குறிப்பிடத்தக்க அறிஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டிருந்த பெரியார்கள் ஆகியோரும் இம் மாநாடுகளில் பங்கு கொண்டார்கள். இந்தப் பட்டியல் மிக நீண்டதென்பதால் இங்கு அதனைத் தவிர்த்துக் கொள்கிறேன்.

### யாழ்ப்பாணத்தில் மகாத்மா காந்தி

வாலிபர் காங்கிரசே 1927இல் மகாத்மா காந்தியை இலங்கைக்கு வரவழைத்தது. காந்தி அவர்கள் வாலிபர் காங்கிரசின் அழைப்பை ஏற்றுக் கொண்டதை அறிந்ததும், தென்புலத்தில் அவரை வரவேற்கும் பணியை மூத்தவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். யாழ்ப்பாணத்திலே ஹன்டியும், வாலிபர் காங்கிரசுமே காந்தியின் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்ட முதலாவது பொதுக் கூட்டமாக அந்த விஜயம் அமைந்தது. அதனை நேரிற்கண்டவர்கள் அவ்வளவு தொகையான மக்கள் அதற்கு முன்னர் திரண்டதில்லை என்றார்கள். பிரபலஸ்தர்கள் பலர் பிரிவினைகளையும், பக்கச்சார்பான அரசியல்-நோக்கங்களையும் மறந்து உற்சாகமாக ஒன்று சேர்ந்து காந்தியை வரவேற்றார்கள். அத்தகைய ஒரு காட்சியை அதற்குப் பின் பல தசாப்த காலத்துக்கு எவரும் கண்டதில்லை.

1927நவம்பர் 26ஆம் திகதி மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாண ரயிலில் தேசாதிபதியின் விசேட பெட்டி பொருத்தி அழைத்து வரப்பெற்ற மகாத்மாவை, ரயில் நிலையத்துக்கு வெளியே வெள்ளம் போல் திரண்டு நின்ற மக்கள் கூட்டம் உற்சாகமாக வரவேற்றது. கொழும்பில் அவர் ஆற்றிய பிரியாவிடை உரையில் "யாழ்ப்பாணம் செல்லும் போது ஏதோ வித்தியாசமான ஓர் இடத்துக்குப் போவது போன்ற உணர்வு எனக்கு உண்டாகிறது' என்று சொன்னார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதற்கூட்டத்திலே "யாழ்ப்பாணம் வந்ததன் பின்னர் நான் இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவின் ஒரு பகுதியில் இருப்பதாகவே உணர்கிறேன். உங்கள் முகங்களோ, மொழியோ எனக்கு அந்நியமானவையாகப்படவில்லை" என்றார். தமது உரையில் சாதி, மது ஒழிப்பு, கலாசார மறுமலர்ச்சி, இந்து - கிறிஸ்தவ உறவு உலக மதபோகர்களில் இயேசுவின் இடம், இனவாதம், மேல்நாட்டு மோகம், தேசியவாதம் போன்ற அன்றைய பிரச்சினைகளைத் தொட்டுப் பேசினார். என்றாலும், இந்தியாவில் பட்டினியால் வருந்திய கோடிக் கணக்கான மக்கள் பற்றியே அவர் விசேடமாகக் குறிப்பிட்டார். "சிறுவர்களிடமும், சிறுமியர்களிடமும் நான் பெற்ற பணமெல்லாம் முதியோர்களிடமும், அறிவாளிகளிடமும் பெற்றமைப் பார்க்கிலும் அதிக பயன்தருமென்பதை நான் அறிவேன். உங்கள் பணம் அப்பழுக்கற்ற மனத்தூய்மையுடன் வந்திருக்கிறது: அவ்வாறே மாசற்ற மனத்தினரான லட்சோப லட்சம் மக்களில், ஒரு சிலரை அது சென்றடையும். அவர்கள் சூது வாது அறியாதவர்கள். ஏனென்றால், அது அவர்கள் வேண்டுமென்றே அளித்த தொன்றல்ல: அதுவே அவர்களின் இயல்பு. அன்றைய சமய, சம்வாதங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் "மக்கள் ஒருவரோடு ஒருவர் இணங்கி இருப்பதன் மூலமாக, மேன் மக்களாக வேண்டுமென்பதே சகல மதங்களினதும் நோக்கமாகும். இவ்வாறு நிகழுமானால் இந்த உலகம், வாழ்வதற்கு மிக உகந்த இடமாக அமையும்.

எல்லோரும் சகிப்புணர்வுடையவர்களாக வாழ வேண்டுமென்பதே என் அவா. அதற்காகவே நான் பாடுபடுகிறேன். நான் கனவில் காணும் இரு மதத்தையே வளர்க்குமென எதிர்பார்க்கவில்லை. அதாவது முழுமையாக இந்து மதத்தையோ, முழுமையாகக் கிறீஸ்தவ மதத்தையோ, முழுமையாக இஸ்லாத்தையோ வளர்க்க வேண்டுமென எதிர்பார்க்கவில்லை. மாறாக, எல்லா மதங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து, முழுமையான சகிப்புத் தன்மையைப் பிரதிபலிக்க வேண்டும்.

### கனவுகளும் காட்சிகளும்.

காந்திஜி மறைந்த 25ஆவது ஆண்டு நினைவுக் கூட்டத்தில் உரையாற்றிய ஹன்டி "அன்று காந்திஜி அரசியலில் ஈடுபட்டிருந்தார். இலங்கையில் நாமும் அவ்வாறே ஈடுபட்டோம். இன்று இலங்கையும், இந்தியாவும் அரசியலில் மூழ்கியுள்ளன. ஆனால், அன்றைய அரசியலுக்கும், இன்றைய அரசியலுக்கும் வேறுபாடு உண்டு. அன்றைய அரசியல் அபிலாஷைகளை அடிநாதமாகக் கொண்டிருந்தது. கனவுகளும், தரிசனங்களும், அன்று விஸ்வரூபம் பெற்றிருந்தன. இன்றைய அரசியலோ பக்கச் சார்புடையதாயும் எல்லா விடயங்களையும் தலையிடுவதாயும் காணப்படுகிறது. அத்துடன் கீழ்த்தரமானதாயும், கொடுமை மிக்கதாயும் நடைபெறுகிறது. சுந்திரமடைந்த பின்னர் இரண்டு நாடுகளிலும், நிகழ்ந்த சம்பவங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன" என்றார்.

1969ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களை வரவேற்று உரையாற்றிய ஹன்டி பெருமதிப்புக்குரிய நாராயணன் அவர்களுடன் தன் பெயரும், சேர்த்துக் கொள்ளப்பட்டமைக்காக மன்னிப்புக் கோரிய பின்னர் "நாம் கனவுகளும் காட்சிகளும் எம் நாடுகளின் விடுதலை பற்றியதாயும் அதன் பயனாக எம்மக்கள் அனுபவிக்கப்போகும் சுபீட்சம் பற்றியதாயும் அமைந்திருந்தன" என்றார்.

- மீதி அடுத்த இதழில்

சாந்தசீலன் கதிர்காமர்
தமிழில் காவலூர் ராஜதுரை

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டக்களப்பு: தந்தையால் குதறப்பட்ட ஒரு சிட்டுக்குருவியின் கதை!

மனித சமுதாயமே வெட்கித் தலைகுனியும்படியான ஒரு சம்பவம் அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றுள்ளது.

ஏழு வயதே நிரம்பிய ஒரு சிறுமியை, அவளது தந்தையே பாலியல் வல்லுறவு புரிந்ததான அந்த சம்பவம், இங்குள்ள மக்களிடையே பரபரப்பையும், கோபத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட புன்னைச்சோலை என்ற இடத்தில் வசித்து வந்த சங்கரப்பிள்ளை ராஜா என்ற 37 வயது குடும்பஸ்தர், பிரதிபா என்ற தனது 7 வயது மகளை அடிக்கடி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தி வந்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 14ம் திகதி, பிரஸ்தாப தந்தை இந்த கொடூர செயலில் ஈடுபட்டபோது, சிறுமியின் அலறல் கேட்டு அங்கு விரைந்த அயலவர்கள், அந்தத் தந்தையை நையப்புடைத்து, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்தச் சிறுமி, கடந்த பல மாதங்களாக தந்தையால் தான் இவ்வாறு துன்புறுத்தப்பட்டு வந்ததாகவும், ஒரு தடவை தனது தாய்கூட இச்சம்பவத்தை நேரில் பார்க்க நேர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார். சுமார் 9 மாதங்களுக்கு முன்னர் மகளுடனான தனது கணவனின் இந்த துர்நடத்தையை நேரில் கண்ட மனைவி, இதுபற்றி கணவனிடம் ஆட்சேபனை தெரிவித்த போது அந்த மனைவி கடுமையாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நடைபெற்று சில நாட்களின் பின்னர் திடீர் என்று அந்த மனைவி மரணம் அடைந்துள்ளார். (அந்த மனைவியின் மரணத்தில் கூட இங்குள்ள சில அமைப்புக்களால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது)

சிறுமியின் வாக்குமூலத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட அந்தச் சிறுமியின் தந்தையாகிய சங்கரப்பிள்ளை ராஜா தற்போது மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நாம் மேலே படித்தது இங்குள்ள ஊடகங்களில் எல்லாம் வெளியிடப்பட்ட அதிர்ச்சியான பரபரப்பான ஒரு சம்பவம்.

ஆனால் இந்தச் சம்பவத்திற்கு ஒரு மறுபக்கமும் இருக்கின்றது.

அதுதான் இந்தச் சிறுமிக்கான நீதி, சிறுமியின் எதிர்காலம் என்பவற்றோடு இம்மாதிரியான வன்முறைகள் பற்றிய எமது சமுதாயத்தின் பார்வை என்பன இந்த சிறுமியைப் பரிசோதித்தவரும், இச்சம்பவம் பற்றிய விசாரணையை மேற்கொண்டவருமான, மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் ஞானக்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்தச் சிறுமி மீது அவளது தந்தையால் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான இந்தச் செயலானது, எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாததும், மனித வாழ்வின் வரையறைகளுக்குள் அடங்காததுமான ஒரு செயல் என்று தெரிவித்தார்.

உலகமும் உண்மையும் தெரியாத நிலையில் இருந்த 7 வயதுச் சிறுமி பெருமளவில் உளவியல் பாதிப்பு அடைந்துள்ளதுடன், அவள் இப்பொழுது எந்த ஒரு ஆணைக் கண்டாலும் பயப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளாள்.

அவளது மனதின் ஆழத்தில் ஆண்வர்க்கம் மீதான வெறுப்பு வேரூன்றிக் காணப்படுகின்றது. ஒரு குழந்தையின் மனது 'ஈரசீமெந்து' போன்றது. அதில் பதியும் எந்தவொரு நிகழ்ச்சியும் இலகுவில் அழிக்கப்பட முடியாததாகி விடும்.

இக்குழந்தைக்கு ஏற்பட்ட உடல் ரீதியான பாதிப்பை விட அவளுக்கேற்பட்ட உளரீதியான பாதிப்பு தான், எதிர்காலத்தில் அவளது வாழ்க்கைக்கு பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்று டொக்டர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டும். இந்தக் கொடூரச் செயலை செய்த குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும். அத்தோடு இனிமேல் எமது சமூகத்தில் இம்மாதிரியான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்ற உறுதியுடன் இங்குள்ள பெண்கள் அமைப்புக்கள் செயலார்வம் காண்பித்து வருவதையும் இங்கு காண முடிகின்றது.



குறிப்பிட்ட இந்த விடயத்தில் இங்குள்ள பெண் உரிமை அமைப்புக்களின் ஈடுபாட்டையும் இந்த விடயத்தில் அவர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் பார்க்கும் போது, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு கிடைக்க வேண்டிய நீதிக்கான பாதையை நோக்கி இந்தப் பிரச்சினை சென்று கொண்டிருக்கின்றது என்ற திருப்தி இங்குள்ள மக்கள் மனதில் தற்போது ஏற்பட்டு வருகின்றது.

பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிராக குரல் எழுப்பி வரும் மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த பெண்நிலைவாதி வாசுகி ஜெய்சங்கர் அவர்கள் இச்சம்பவம் பற்றி கருத்து தெரிவிக்கையில்:

'இந்த உலகத்தின் பார்வையில், பெண் என்ற மானிடப் பிறப்புக்கள் உடலுறவிற்கான ஒரு கருவியாகவே கருதப்பட்டு வருகின்றார்கள். அந்தப் பெண்ணானவள் சிறுமியாக இருந்தாலும் அல்லது வயது வந்தவளாக இருந்தாலும், இம்மாதிரியான ஆண்களின் கண்களுக்கு அவள் உடலுறவிற்கு மட்டுமே பயன்படக்கூடிய ஒரு கருவியாகவே தெரிகின்றாள்.

இந்தச் சம்பவத்தில் அந்தச் சிறுமியின் வயதோ அல்லது மகள் என்ற உறவு முறையோ அந்தத் தந்தையால் கருத்தில் கொள்ளப்படவில்லை. அந்தச் சிறுமியின் வேதனை, அந்த சிறுமியின் அச்சநிலை என்பனவும் அவளது தந்தையால் நோக்கப்படவில்லை. தனது இச்சைகளை தீர்த்துக் கொள்ளும் ஒரு கருவியாகவே அந்த சிறுமி கருதப்பட்டிருக்கின்றாள்.

அதே நேரத்தில், இப்படியான தமது வக்கிரங்களுக்கு வடிகாலாக சிறுமிகளை இலகுவில் அணுக முடியும் என்பதும், இப்படியான சம்பவம் பற்றி வெளியே கூறும் அளவிற்கு இந்த விடயம் பற்றிய அறிவு முதிர்ச்சி அவர்களுக்கு இல்லாது இருப்பதும் சாதகமாக அமைந்து விடுகின்றன.

இந்தச் சிறுமி சம்பந்தப்பட்ட இந்தச் சம்பவத்தை ஒரு சுவையான, பரபரப்பான நிகழ்வாக நோக்குவதை விடுத்து இந்தச் சம்பவத்தை பரிதாபத்திற்குரிய ஒரு நிகழ்வாக அனுதாபத்துடன் நோக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் பற்றிய சம்பவங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பத்திரிகைகள், ஊடகங்களின் பங்கு பற்றி தனது ஆதங்கத்தை தெரிவித்த மற்றொரு பெண் உரிமை ஆர்வலர் ஒருவர்,

இப்படியான சம்பவங்கள் பற்றி சில பத்திரிகைகள் மிகைப்படுத்தி நிகழ்ச்சிகளை ருசிபட விபரித்து எழுதுவதனால் உண்மையின் தாற்பரியங்கள் சில சமயங்களில் வெளிவருவதில்லை. பாதிக்கப்பட்ட சிறுமியின் வேதனைகள் வெளியே தெரிவது இல்லை.

அதேவேளை இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெற்றதும், பத்திரிகைகள் உடனடியாக அவற்றை செய்தியாக வெளியிடுவதுடன் மட்டும் தமது பொறுப்புக்களை முடித்துவிடாது பாதிக்கப்பட்ட நபரது எதிர்காலம் தொடர்பாகவும், குற்றத்திற்கான தண்டனையை உறுதி செய்யும்படியாகவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச் சம்பவம் பற்றிய கருத்துக்கள், கண்டனங்கள் பலவாறாக அமைந்திருந்தாலும், குற்றவாளிக்குக் கிடைக்கப்படக்கூடியதாக தெரிவிக்கப்படும் தண்டனை பற்றி சற்று சந்தேகத்துடனேயே நோக்க வேண்டி இருக்கின்றது.

மட்டக்களப்பில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற இதேபோன்ற ஒரு சம்பவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் தேங்கிய நிலையே இவ்வாறு சந்தேகத்தை தோற்று விக்கின்றது.

1998ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி கிருஷாந்தினி என்ற 4 வயது சிறுமி அவளது சொந்த தந்தையான முத்துலிங்கம் என்பவரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற போது, அந்தச் சிறுமியின் தாயார் மத்திய கிழக்கு நாடொன்றில் பணி புரிந்து கொண்டிருந்தார்.

சிறுமி மீதான அவளது தந்தையின் வல்லுறவு வெளியே உலகிற்கு தெரிந்ததைத் தொடர்ந்து அந்த தந்தை 28.03.98ம் திகதி ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சிறுமியின் வாக்குமூலம் சிறுமியைப் பரிசோதித்த வைத்தியரின் மருத்துவ சான்றிதழ், சிறுமியின் உறவினரது சாட்சிகள் என்பன இந்த வழக்கு விசாரணையில் குற்றவாளிக்கு எதிராக இருந்தன.

கடைசியாக 16.11.98ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் தனது மகள் மீதான பாலியல் வல்லுறவு குற்றத்தை தான் மேற்கொண்டதாக அந்தத் தந்தையும் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இந்தக் குற்றம் நிருபணமானது. ஆனால் மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த குற்றவாளியின் மனைவி, அதாவது பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், நாடு திரும்பியதும் குற்றவாளியான முத்துலிங்கத்தை 24.02.99ம் திகதி பிணையில் எடுத்துள்ளார்.

தற்பொழுது அந்தக் குற்றவாளியும், அவன் மனைவியும் பாதிக்கப்பட்ட அந்த சிறுமியும் ஒன்றாக வசித்து வருகின்றனர்.

குழந்தை மீதான தந்தையின் பாலியல் வல்லுறவு பற்றிய குற்றத்திற்கு எதிரான தண்டனை, இது சம்பந்தமான குற்றவியலில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதும், அந்த தண்டனையை குறிப்பிட்ட அந்தக் குற்றவாளி அடைந்திருக்கின்றானா என்பதும் இந்தச் சம்பவத்தில் ஒரு புறமிருக்க பாதிப்புக்குள்ளானவரும் பாதிப்புக்குள்ளாக்கிய நபரும் மீண்டும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழலில் வாழ்வதற்கு சட்டம் எந்த வரையறைக்குள் அனுமதித்திருக்கின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது. அத்தோடு எமது சட்டமும் சமூகமும் பாதிக்கப்பட்ட இந்த சிறுமிக்கு எப்படியான நீதி வழங்கியுள்ளது?

ஒரு குறிப்பிட்ட குற்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட நபருடன் அதே குற்றத்தை மறுபடியும் அதே சிறுமிக்கு இழைக்கக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ள இந்த நிலை எந்த அளவிற்கு நியாயம் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

இன்றைக்கு சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு குற்றத்தின் அதே வடிவிலான குற்றம் தற்போது வேறு ஒரு சிறுமிக்கு இழைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சிறுமியைப் பொறுத்தவரை நாம் போற்றும் எமது சட்டமும், நீதியும், இவளுக்கு என்ன செய்யப் போகின்றன?

— சுரஞ்சினி நிராஜ் டேவிட்

நன்றி - நூலகத்திட்டம்



# நக்சல்பாரி புரட்சியாளர் இரவீந்திரன் படுகொலையும் பொலிசின் கட்டுக்கதையும்

புரட்சிகர-சனநாயக இயக்கங்களை ஒடுக்க ஆந்திரப் பொலிஸாரால் கையாளப்படும் "போலி மோதல் நாடகத்தை" தமிழகத்திலும் மீண்டும் துவக்கி வைத்திருக்கிறார், கருணாநிதி. கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி தருமபுரி மாவட்டத்தில் தமிழகப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் இரவீந்திரனின் படுகொலை, இதன் தொடக்கமாக அமைந்துள்ளது.

ooo

"கடந்த டிசம்பரில் மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த மூன்று தலைவர்கள் ஆந்திரப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நக்சலைட் இயக்கத்தினர் தருமபுரி மாவட்டத்தில் இரண்டு அரசுப் பேருந்துகளை 26.12.99 அன்று தீயிட்டுக் கொளுத்தினர். இச்சம்பவம் தொடர்பாக நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்த இரவீந்திரனைத் தேடிக் கொண்டிருந்தோம். இரவீந்திரனும், வேறு சில நக்சலைட்டுகளும் பெருங்காடு கிராமப் பகுதியில் சுற்றிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைக்கவே, பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையும் அக்கிராமத்தைச் சுற்றி வளைத்து, இரவீந்திரனைப் பிடிக்க முனைந்தோம். பொலிஸிடமிருந்து அவர்கள் தப்பி ஓட முயன்ற பொழுது, இரவீந்திரன் பொலிசை நோக்கிச் சுட்டார். பொலிஸார் திருப்பிச் சுட்டதில், இரவீந்திரன் இறந்து போனார். சென்னையைச் சேர்ந்த சிவக்குமார் பொலிஸாரிடம் பிடிபட்டான். வேறு இருவர் காட்டுக்குள் புகுந்து தப்பிவிட்டனர். இதுதான் நடந்த உண்மை என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யச் சென்ற மனித உரிமைக் குழுவினர், தர்மபுரி மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் கந்தசாமியிடம், "இரவீந்திரனின் முழங்காலுக்கு கீழே சுட்டு, இரவீந்திரனைப் பிடிக்க பொலிஸார் ஏன் முயலவில்லை?" என்று கேட்ட பொழுது, அவர், "இரவீந்திரன் (ஒருவிதமாக) உட்கார்ந்து கொண்டு பொலிஸை நோக்கிச் சுட்டதால், அவரின் முழங்காலுக்குக் கீழே சுட முடியவில்லை" என்று கூறியிருக்கிறார்.

"இரவீந்திரனைப் பிடிப்பதற்கு பெருங்காடு கிராம மக்கள் முழு ஒத்துழைப்பு கொடுத்ததாகவும், பொலிஸாரின் முழு நடவடிக்கையும் மக்களின் கண்முன்னே நடந்ததாகவும்" பொலிஸ் கூறுகிறது "பெருங்காடு மற்றும் சாஸ்திரமுட்லு கிராம மக்கள் கொடுத்த உடைகளை அணிந்து கொண்டு, கிராமத்துவாசிகள் போல் தான் பொலிஸார் தேடுதல் வேட்டை நடத்தினர். இறந்து போன நபரை 'இவன்தான் இரவீந்திரன்' என்று கிராம மக்கள் தான் பொலிஸாரிடம் உறுதிப்படுத்தியதாக ஜூனியர் விகடன் எழுதுகிறது.



ஆர்.எஸ்.எஸ்.இன் ஊது குழலான இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் வெளியிடும் தமிழன் எக்ஸ்பிரஸ் "தர்மபுரியில் பத்து மனித வெடிகுண்டுகள் அலைந்து திரிவதாகவும்", "நக்சலைட்டுகள் ஆந்திர முதல்வரைக் குறி வைத்திருப்பது விசாரணையின்போது தெரிய வந்ததாகவும்" வதந்திகளையே செய்திகளாக வெளியிட்டது.

ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைப் பேராசிரியையாகப் பணியாற்றி வரும் இரவீந்திரனின் மனைவி நிர்மலாவை, "மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த தீவிரவாதி: அவர் ஆந்திராவில் தலைமறைவாக இயங்கிக் கொண்டிருக்கிறார்" என்று பரப்பப்பட்ட வதந்திதான் இரவீந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக தமிழகப் பத்திரிகைகளும் பொலிஸும் அள்ளித் தெளித்த அவதூறுகளிலேயே, கீழ்த்தரமானதும், வெட்கக்கேடானதும் ஆகும்.

உண்மையைத் திரித்தும், ஆதாரமற்ற பொய்க் குற்றச்சாட்டுகள், அவதூறுகளை அள்ளி வீசுவதன் மூலமும் பொலிஸும் தமிழகப் பத்திரிகைகளும், "நக்சலைட் இரவீந்திரனும், அவனது சகாக்களும் சமூக விரோதிகள்: பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உள்ளிட்ட பல்வேறு தேசவிரோத பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்பு கொண்டவர்கள்: எந்தவொரு நாசவேலைக்கும் அஞ்சாதவர்கள்: சில ஆண்டுகளாக அமைதியாக இருந்த தர்மபுரி மாவட்டம் மீண்டும் இவர்களின் பிடியில் சிக்கிக் கொண்டு விட்டது. எனவே, பொலிஸார் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட, நக்சலைட்டுகளின் தலைவனான இரவீந்திரனை, தங்களின் பாதுகாப்புக் கருதி சுட்டுக் கொன்றது நியாயமானதுதான்" என்ற கருத்தை தமிழக மக்களின் மனதில் விதைக்க முயலுகின்றன.

நக்சல்பாரி புரட்சியாளர் இரவீந்திரன், உழவர் உழைப்பாளர் மாமன்றம் எனும் அமைப்பின் கீழ், கடந்த ஆறாண்டுகளாக, தருமபுரி மாவட்டத்திலுள்ள பெருங்காடு, நத்தம், அமதன் கோட்டை, வெள்ளாளப்பட்டி உள்ளிட்ட சில கிராமங்களில் அரசியல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். அவர், பூதிப்பட்டி கிராம மக்களை ஆட்டிப் படைத்து வரும் கந்து வட்டிச் சுரண்டல் பேர்வழிகளை எதிர்த்தும், காடுகளில் ஆடு மாடுகளை மேய்க்க "வரி" என்ற பெயரில் வனத்துறை அதிகாரிகள் அக்கிராம மக்களிடம் இலஞ்சம் வாங்கி வருவதையும் அம்பலப்படுத்தியும் பிரசுரங்கள் போட்டு, இவர்களை எதிர்த்துப் போராடுமாறு அக்கிராம மக்களிடம் பிரச்சாரம் செய்திருக்கிறார்.

இது ஒரு புறமிருக்க, 1993ஆம் ஆண்டு முத்தமிழ் முதல்வன் என்ற பொலிஸ் அதிகாரி (துணை ஆய்வாளர்) இரவீந்திரனைச் சட்ட விரோதமாகக் கைது செய்து, சேலம் மைய சிறைச்சாலையில் அடைத்தார். இரவீந்திரன் சக கைதிகளைத் திரட்டி, சிறையில் நிலவிய மனிதத் தன்மையற்ற நிலையை எதிர்த்துப் போராடினார். அதே பொலிஸ் அதிகாரி, எரையூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொழுது, ஒரு சிறுவனை எரித்துக் கொன்றதை அம்பலப்படுத்தி இரவீந்திரன் வழக்குத் தொடுத்தார்.

இரவீந்திரனும், அவர் சார்ந்த உழவர் உழைப்பாளர் மாமன்றம் ஆங்காங்கே துண்டு துண்டாக பொதுவான அரசியல் பிரச்சாரப் பணிகளைச் செய்து வந்த போதே, ஆந்திராவின் தெலுங்கானா பகுதியில் மக்கள் போர்க் குழுவினர் கொரில்லா படைகளை அமைத்துச் செயல்பட்டு வருவதைப் போல, தருமபுரி பகுதியை மாற்றி விட வேண்டும் என்றும் விரும்பினார்.

ஆந்திராவின் தெலுங்கானா பகுதி, கம்யூனிஸ்டுகளின் தலைமையில் வீரஞ்செறிந்த ஆயுதப் போராட்டங்களை நடத்திய வரலாற்றுப் பாரம்பரியம் கொண்டது. தெலுங்கானா போராட்டத்தையும், சிறீகாகுளம் உழவர் எழுச்சியையும் அரசு ஒடுக்கிவிட்ட போதிலும், தெலுங்கானா பகுதியில் மலைவாழ் மக்களும், நக்சல்பாரி இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்து வருகின்றனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நக்சல்பாரி இயக்கம் தருமபுரி பகுதியில் செல்வாக்குடன் இருப்பதாகக் கூறப்பட்ட பொழுதுகூட, அவ்வியக்கம் பெருந்திரளான மக்களைத் தன் பின்னே அணி திரட்டியிருக்கவில்லை. மக்களை அரசியல்படுத்தி, அமைப்பாக்கி, ஆயுதம் ஏந்தச் செய்வதற்குப் பதிலாக, நக்சல்பாரி இயக்கம் "அழித்தொழிப்பு நடவடிக்கை"யை நம்பியே செயல்பட்டதால், பெருவாரியான மக்களிடமிருந்து இயக்கம் தனிமைப்பட்டு நின்றதால், தேவாரம் கும்பலால் நக்சல்பாரி தோழர்களை எளிதாகக் கொன்றொழிக்க முடிந்தது.

இரவீந்திரனும் அவரது சக தோழர்களும், மக்கள் போர்க்குழு தலைவர்களை ஆந்திர அரசு கொன்றொழித்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில், இரண்டு அரசு பேருந்துகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். தருமபுரி பகுதியில், மக்களை அரசியல்படுத்துவதற்கு முன்பாகவே, மக்கள் மத்தியில் வலுவான அமைப்புகளைக் கட்டுவதற்கு முன்பாகவே, ஆந்திராவில் நடப்பதைப் போல, 'அரசு சொத்துக்களை நாசப்படுத்துவது' போன்ற தனிநபர் சாகசவாத நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கிய செயலானது, எவ்வித எதிர்ப்புமின்றி தருமபுரி பகுதியில் மீண்டும் அரசு பயங்கரவாதத்தை தமிழக அரசு கட்டவிழ்த்து விடுவதற்கு வாய்ப்பாக அமைந்து விட்டது.

கருணாநிதி அரசும் தமிழகப் பொலிஸும் இரவீந்திரனைச் சட்ட விரோதமாகக் கைது செய்து, சித்திரவதை செய்து, சுட்டுக் கொன்றுவிட்டு, மோதலில் இறந்து விட்டதாகக் கதையளக்கின்றன. தீவிரவாதப் பீதியூட்டி, இப்பச்சைப் படுகொலையை நியாயப்படுத்த முயலுகின்றன.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தற்பொழுது சேலம் மைய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள சிவா கொடுத்துள்ள உறுதிமொழித் தாளில் (affidavit) "நாங்கள் நால்வரும் (இறந்து போன இரவீந்திரன், ராமச்சந்திரன், குமார் மற்றும் சிவா) பிரச்சாரம் செய்வதற்காக, 6.1.2000 அன்று இரவு 7.00 மணிக்கு பெருங்காடு பள்ளத்திற்குச் சென்றோம். மறுநாள் காலை 11.30 மணியளவில் அதிரடிப் படையைச் சேர்ந்த 25 பொலிஸார் எங்களைச் சுற்றி வளைத்தனர். மற்ற இருவரும் தப்பித்து ஓடிவிட நானும், இரவீந்திரனும் பொலிஸிடம் அகப்பட்டுக் கொண்டோம். பொலிஸார் அதே இடத்திலேயே எங்களை "பூட்ஸ்" காலால் மிதித்தும், துப்பாக்கிக் கட்டையால் அடித்தும் சித்திரவதை செய்தனர். பின்னர் மதியம் இரண்டு மணி அளவில் எங்கள் கைகளைப் பின்புறமாகவும், கண்களையும் கட்டிவிட்டு இழுத்துச் சென்றனர்."



"7.1.2000 இரவு தொடங்கி 9.1.2000 காலை வரை கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையிலேயே வைத்து சித்திரவதை செய்யப்பட்டோம். பின்னர், 10.1.2000 அன்று காலையில், நாங்கள் இருவரும் பெருங்காடு பள்ளம் கிராமத்தின் ஊர்க் கவுண்டர் வீட்டருகே கொண்டு வரப்பட்டோம். எங்களை பொலிஸார் ஓடச் சொன்னதற்கு மறுத்துவிட்டோம். சிறிது நேரம் கழித்து ஐந்து முறை துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. அன்று இரவு ஏழு மணி வரை, நான் கண்கள் கட்டப்பட்ட நிலையில் அந்தக் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்தேன். அதன் பின்னர், மாரண்டஹள்ளி பொலிஸ் நிலையத்திற்கு நான் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு தான், இரவீந்திரன் சடலத்தைப் பார்த்தேன்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

வலது கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் நாடு மாநில தலைமைக் கமிட்டியின் உறுப்பினர் தேவபேரின்பன், "எங்கள் கட்சி வழியாக நாங்கள் விசாரித்ததில், இரவீந்திரனை ஆள்காட்டி மூலம் மோப்பம் பிடித்து விட்ட பொலிஸார், இரவீந்திரனையும் சிவாவையும் 10.1.2000 அன்று காலையில் பெருங்காட்டில் வைத்துப் பிடித்தனர். இரவீந்திரனை இயக்கத்தின் முக்கிய புள்ளியாகக் கருதிய பொலிஸ், அவரது கதையை முடித்துவிட்டு, சிவாவை பொலிஸ் காவலில் வைத்துக் கொண்டனர். இப்பொழுது இரவீந்திரனைக் கடைந்தெடுத்த சமூக விரோதியாக, கிரிமினலாகக் காட்டுவதற்காகப் பொய் வழக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இறந்து போன இரவீந்திரனின் கையில் காணப்படும் துப்பாக்கிகூட பொலிஸாரால் திணிக்கப்பட்டதாக இருக்கலாம்" என்று மனித உரிமைக் குழுவினரிடம் கூறியுள்ளார்.

பொலிஸார் தங்களது இந்த நடவடிக்கை பெருங்காடு கிராம மக்களின் கண்முன்னே நடந்ததாகக் கூறுகின்றனர். ஆனால், அந்தக் கிராம மக்கள் நடந்தத உண்மையை எவ்விதப் பயமோ, தயக்கமோயின்றி வெளி உலகுக்குத் தெரிவிக்க முடியாதபடி, பெருங்காட்டில் பொலிஸ் அவுட் போஸ்ட் அமைக்கப்பட்டு, அந்தக் கிராமம் திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மனித உரிமைக் குழுவினரைக் கூட அந்தக் கிராம மக்களிடம் தனியாகப் பேச பொலிஸ் அனுமதிக்கவில்லை. "அந்தக் கிராமத்தில் விநோதமான மௌனம் நிலவுகிறது: பொலிஸ் சொல்லிக் கொடுத்ததையே அந்தக் கிராம மக்கள் எங்களிடம் கூறினாலும், அவர்களால் இரவீந்திரன் மீது கொண்டிருந்த அன்பையும், மரியாதையையும் முழுமையாக மறைக்க முடியவில்லை" என மனித உரிமைக் குழுவினர், தங்களது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இரவீந்திரனின் உடம்பில் இரு துப்பாக்கிக் குண்டு காயங்கள் உள்ளன. ஒன்று, சிறியதாக வலது மார்பிலும், இடது பக்க முதுகில் பெரிய குண்டுக் காயமும் காணப்படுகிறது. குண்டுக் காயங்கள் தவிர, அவரது வலது தொடையில் காணப்பட்ட தடியடிக் காயமும், உடைக்கப்பட்ட வலது மணிக்கட்டு, கால் மூட்டுக்களும் பொலிஸ் சித்திரவதை செய்திருப்பதற்கு அடையாளமாக இருந்தன. இம்மோதல் படுகொலையைக் கேள்விக்குள்ளாக்கி, இரவீந்திரனின் மனைவி நிர்மலா சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு விசாரணையில் உள்ளது.

ஒவ்வொரு மோதல் படுகொலையும் மனிதப் படுகொலையாகக் கருதப்பட்டு, சம்மந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்கிறது குற்றவியல் சட்டம். ஆனால் கருணாநிதி அரசோ, இரவீந்திரனைக் கொன்ற பொலிஸாருக்கு 20,000 ரூபாய் வெகுமதியாகக் கொடுத்துள்ளது. இப்படி, தாங்களே ஏற்றுக் கொண்ட சட்டத்தை மீறுகின்ற ஆட்சியில், பொலிஸாரை வாடகைக் கொலைகாரர்களாக வளர்த்துவிடும் ஆட்சியில், "இரவீந்திரனின் படுகொலைக்கு நீதி கிடைக்குமா?" எனக் கேட்கும் பொழுதே, "இன்னும், எத்தனை இரவீந்திரனைப் பலிகேட்பார்கள்?" என்றும் கேட்டுப் பாருங்கள். அப்பொழுதுதான், போலி மோதல் படுகொலைகள் மூலம் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களை ஒழித்துக் கட்டுவதைக் கொள்கையாகக் கடைபிடித்து வரும் இந்த 'மக்களாட்சி' யின் இலட்சணம் அம்பலத்துக்கு வரும்!


. சுப்பு

நன்றி: புதிய ஜனநாயகம்

நன்றி - நூலகத்திட்டம்



# கனடாத் தமிழரின் முக்கோணச் சோகக் கதை: மதம், சாதியம், தொடர்பு ஊடகம்


சக்கரவர்த்தி

*சிறுகதைகள் மூலம் சரிநிகர் வாசகர்களுக்கு மிகவும் பரிச்சியமான சக்கரவர்த்தியுடனான நேர்காணல் ஒன்றை கனடாவின் வார இதழான முழக்கம் (17.12.99) வெளியிட்டிருந்தது. புலம் பெயர்ந்த சூழலில் சாதியம், மேலாதிக்கம், மதம் என்பன தமிழர் வாழ்வில் பெரும் இடுக்கண்களாக இருப்பதைத் தீவிரமாக தனது நேர்காணலில் விமர்சிக்கிறார் சக்கரவர்த்தி. அவர் ஒரு கவிஞர். யுத்த சன்னியாசம் (1994 நான்காவது பரிமாணம் வெளியீடு) எனும் அவரது கவிதைத் தொகுப்பு ஏற்கெனவே வெளியாகி உள்ளது. யுத்தத்தைத் தின்போம்(1999 அருவி வெளியீடு) எனும் கவிதைத் தொகுதியிலும் அவரது விமர்சனக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. மட்டக்களப்பைச் சேர்ந்த தேத்தாத்தீவில் பிறந்து புலம் பெயர்ந்து இப்போது கனடாவில் வாழ்கிற சக்கரவர்த்தியின் நேர்காணலின் சில பகுதிகளை நன்றியுடன் மறுபிரசுரம் செய்கிறோம்.*

*சக்கரவர்த்தியை நேர் கண்டவர் எழுத்தாளரும், கவிஞருமான கலைவாணி இராஜகுமாரன்.*

**நான் அறிந்த அளவில் சாதிப்பிரச்சினை என்பது அல்லது சாதி குறித்துப் பேசப்படுதல் என்பது புலம்பெயர்ந்த நாடுகளில் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இருந்தும் சாதி ஆதிக்கம் பற்றிய 'பின்னென்ன உயர்குல வேளாளன்' என்கிற உங்கள் கவிதை முகிழ்த்த பின்னணி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?**

மதத்தின் பெயராலும் மதம் சார் சடங்குகளின் பெயராலும் சாதியம் சீவித்துக் கொண்டு தான் இருக்கிறது. சாதியமும் மதமும் கலவி கொள்ளும் இரு பாம்புகள் போல் இறுக்கப் பிணைந்தவை. குழந்தை பிறந்து 31ம் நாள் துடக்கு கழிப்பதற்கு சலூன் கடைக்கு போய் அம்பட்டர் வேண்டும் எனக் கேட்போர் தொகை கனடாவில் இப்போது கூடிக் கொண்டே போகிறது. பெண் பூப்படைந்த சடங்குக்கு பாளை விரித்து வெள்ளை கட்ட வண்ணார் இல்லையே எனக் கவலைப்பட்ட என் சொந்தக்காரார்கள் இங்கு தான் இருக்கின்றார்கள்.

தென்புலோலியூர் பூதலிங்கம் என எதற்காகப் பெயர் வைக்கின்றார்கள்? யோசித்துப் பாருங்கள், நான் அந்த சாதிக்காரன் அல்ல என எமக்கு சூட்சுமமாய் சொல்லத்தானே. தெரிந்த நண்பருடன் தெரியாத நண்பர் வந்து முற்போக்கு விசயம் எதையும் பேசிவிட்டால், இவர் கட்டாயம் அந்த சாதிக்கார ஆள் தான் என பேசிக் கொள்வோரை நீங்கள் சந்திக்கவில்லையா?

'தம்பி நீர் அளவெட்டியில் எந்தப் பக்கம்? ' எனப் புருவம் உயர்த்தும் பெரிய மனிதர்களை நீங்கள் அறிந்ததில்லையா? வசதியாகி விட்டவர்களைப் பார்த்து 'உவனோட அப்பன் தான் ஊரில எனக்கு சிரைக்கிறவன்' என்கின்ற சின்னப்புத்தி பெரிய மனிதர்களை நீங்கள் சந்தித்துக் கொண்டதில்லையா?

'15ம் மாடியில் எளிய சாதி நாய் இருக்கிறது' எனச் சொல்லி 14ம் மாடியில் இருந்த வீட்டைக் காலி செய்து கொண்டு போனவர்களை நீங்கள் கேள்விப்பட்டதே இல்லையா? இவர்கள் எல்லோரையும் நான் சந்தித்திருக்கிறேன்.

இத்தனையும் எதற்கு? கடந்த வருடம், பெப்பிரவரி மாதத்தில், அறையுள் பூட்டி வைத்து சித்திரவதை செய்யப்பட்ட இரு பெண் பிள்ளைகளைப் பற்றி சகல தொடர்பு சாதனங்களும் பரபரப்பாய் கவலைப்பட்டுக் கொண்டிருக்க கனேடிய தமிழ் பெண்கள் சமூக சேவைகள் அமைப்பைச் சேர்ந்த பொறுப்புள்ள பெண்மணியான கரீனா மகேந்திரா, 17.2.1999 திகதி, National Post என்கின்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு 'சாதி குறைவான மக்களிடம் இப்படி நடப்பதுண்டு. அவர்கள் தான் படிக்காதவர்கள்' எனப் பேட்டி கொடுக்கவில்லையா? இவ்விடயத்தை கண்டித்து சகல தமிழ் தொடர்பு சாதனங்களுக்கும் அறிவித்தல் செய்தும் ஒரு சில பத்திரிகை தவிர மற்றைய வெள்ளாளமயப் பத்திரிகை எதுவும் கண்டு கொள்ளவில்லை என்பதை எல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

எதைக் கொண்டு சாதீயம் குறைவாக உள்ளது எனச் சொல்கின்றீர்கள்? அப்படி இருப்பின் உயர்குல வேளாளன் ஏன் இன்னோர் உயர்குல வேளாளச்சியை பத்திரிகையில் தேடிக் கொண்டிருக்கின்றான்? இந்த முட்டாள்கள் தான் இப்படி இருக்கின்றார்கள் என்றால் இவர்களை விடப் பெரும் முட்டாள்களும் இருக்கின்றார்கள்.

கட்டாயப்படுத்தி முடிவெட்டும் தொழிலை பரம்பரைத் தொழிலாகச் செய்யப் பணிக்கப்பட்ட சமூகத்தில் இருந்து இங்கு கனடா வந்த ஒருவர் அதே தொழிலை இங்கும் செய்ய, அவரது உறவினர்களாலேயே அவர் தீண்டத் தகாதவர் ஆக்கப்பட்டதும், உறவினர்களுக்குள் சமூக அந்தஸ்த்தை ஏற்படுத்திக் கொண்ட மற்ற உறவினர் வீட்டுக் கொண்டாட்டங்களில் இவரை அவமதிப்பதும் இங்குள்ள தமிழர் கூட்டுறவு இல்லத்தில் தான் நடந்து கொண்டிருக்கிறது. 'தாழ்த்தப்பட்டவர்'களுக்குள்ளேயே எளிய பிரிவொன்றை ஏற்படுத்தும் கொடுமை கலந்த முட்டாள்தனமும் இங்கு தான் நடந்து கொண்டிருக்கிறது.

கலை பற்றிய மதீப்பீடும் கலை இலக்கியம் பற்றிய விமர்சனமும் தான் இந்த சமூகத்திடம் இல்லை என நினைக்காதீர்கள். நேரிய சிந்தனைகளும் சமூக உறவுகளும் கூடத்தான் இச் சமூகத்து மக்களிடம் இல்லாமல் இருக்கிறது. இம்மக்களுடன் கதைப்பதைக் காட்டிலும் கஞ்சா குடிப்பதுவும் தற்கொலை செய்து கொள்வதும் பெருமை என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. ஆனாலும் முடியவில்லை. அதனால் தான் கோபப்பட்டு கவிதை எழுத வேண்டி வருகிறது.

**ஒரு சமூகத்தை வழி நடத்த வேண்டிய பத்திரிகைகள். இன்னமும் சிவந்தநிற. அழகான. உயர்குல வாழ்க்கைத் துணைகளைத் தேடும் விளம்பரங்களைப் பிரசுரித்து. அழுக்குண்டு வாழும் பூச்சிகளாக இருப்பது குறித்து உங்கள் கருத்தென்ன?**

பாவம் பத்திரிகைகள், என்ன செய்ய முடியும் இதற்கு? அவை தான் விளம்பரத்துக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அறிவித்துக் கொள்கின்றனவே. அது மட்டுமல்லாமல் பத்திரிகையில் வரும் கதை, கவிதை, கட்டுரைகள் எல்லாம் பத்திரிகையின் எண்ணத்தை பிரதிபலிப்பன அல்ல என்று வேறு சில பத்திரிகைகள் அறிவித்துக் கொள்கின்றன. வேறு எது தான் பத்திரிகையின் எண்ணத்தைப் பிரதிபலிக்குமோ எனக்குத் தெரியாது. வியாபாரப் பத்திரிகைளை விட்டு விடுவோம். பிள்ளை குட்டிக்காரங்கள். கொள்கைக்காக வெளிவரும் பத்திரிகைகளே இவ்வாறு அறிவிப்பு விட்டால் அவர்களை யார் காப்பது?

கனடாவில் வெளிவருகிற முழக்கத்தையும், உலகத் தமிழரையும் எடுத்துக் கொள்வோமே. உலகத் தமிழர் பத்திரிகையை தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதி என்று கூடச் சொல்லலாம். இதையும் தாண்டி முழக்கம் இன்னுமோர்படி மேலே போய் பெண்ணியம், தலித்தியம், பெரியாரியம் எனப் பேசும் பத்திரிகை. இவ்விரு பத்திரிகைகளும் அழகுப் பெண்ணின் கவர்ச்சிப் படங்களை விளம்பரத்தில் பயன்படுத்தவில்லையா? பெண் போராளிகளை உலகத் தொடர்பு சாதனங்கள் பிரமிப்புடன் விசாரித்துக் கொண்டிருக்க உலகத் தமிழர் பத்திரிகையும் முழக்கமும் பெண்களை அழகுப் பொருளாய் பார்ப்பது அழகாகவா இருக்கிறது? இது பெண்ணடிமையின் வடிவம் இல்லையா? பெண்ணைப் போகமாக எண்ணும் ஆணாதிக்க சமூகத்தின் மனோபாவம் தானே இது.

அனைத்துலகப் பெண்கள் தினத்துக்கு வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் ஒரு பக்கம் ஆயுதம் தூக்கி ஓங்கி நிமிர்ந்த தமிழ் புதுமைப் பெண், அதன் மறுபக்கம் இப்பெண்ணுக்கு நேர்மாறாய் நால்வகை குணம் காட்டி ஒரு வகை மார்க்கமாய், செயற்கையாய் புன்னகைத்து 15 கிலோ தங்கத்தையும் பட்டுப் புடவையையும் அணிந்து நிற்கும் இரு விளம்பரப் பெண்கள். உபதேசம் யாருக்கு?

எனக்குத் தெரிந்து கனடாவில் நாத்தீகம் பேசும் ஒரே பத்திரிகை முழக்கம் தான். ஆனாலும் இப்பத்திரிகையிலும் 'அகண்ட சாயி பஜனைக்கான' அறிவித்தலும் வருகிறது.

**மேன்மையானவை அல்லது மகத்துவம் பொருந்தியவை எனக் காலாகாலமாகக் கருதி வரப்படுகின்றவற்றில் கைவைப்பதை அல்லது கேள்விக்குட்படுத்துவதை எங்களுடைய சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. அந்த வகையில் ஆறுமுகநாவலர் குறித்த உங்களுடைய குற்றச்சாட்டை பழமைவாதிகள் விரும்ப மாட்டார்கள். ஆதலால் அவ்வாறானவர்களுக்காக நீங்கள் ஆதாரபூர்வமான பதிலைத் தரவேண்டும்?**

எது மேன்மையானது எது மகத்துவமானது என்பது பற்றிய தெளிவு முதலில் நமக்கு இருக்க வேண்டும். ஆறுமுகநாவலர் மிகப்பெரிய பிற்போக்குவாதி என்பதை முதலில் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆண் நிலைவாதத்தையும், சாதியத்தையும், பிரதேச வாதத்தையும் சைவத்தின் பெயரால் பிரசங்கித்து தமிழர்களுக்கு மிகப் பெரிய பள்ளம் தோண்டியிருக்கின்றார் நாவலர்!

நம் சமூகத்து மக்கள் ஐம்பது ஆண்டுகள் பின்நோக்கி சிந்தித்துக் கொண்டிருப்பதற்கு நாவலர் தவிர வேறு யார் காரணம் என்று நினைக்கின்றீர்கள்?

உங்களுக்குத் தெரியுமா தமிழ்த் தேசியத்தின் முதல் துரோகி ஆறுமுகநாவலர் என்பது.

பறையும், பெண்ணும், பஞ்சமரும் அடி வாங்கப் பிறந்தவைகள் எனச் சொல்லியது மகத்துவமானதா? சைவ வேளாளர் அல்லாத எவரும் தமிழர் இல்லை எனும் வாதம் மேன்மையானதா? சைவ வேளாளரைத் தவிர மற்றைய தமிழீழத் தமிழர் எல்லாரும் யார்? மட்டக்களப்பாரும், திருமலை யாரும், வன்னியாரும் யார்?

யாழ். சமூகத்து சிறுபான்மை மக்களுக்கும் பெண்களுக்கும் நாவலர் இழைத்த தீங்கு மிகப் பெரியது.

நாவலரை உன்னதமானவர், மகோன்னதமானவர் எனப் போற்றுவோரும் அவருக்காக மார்கழி மாதத்தில் குரு பூசை செய்வோரும் சிங்கள பேரினவாதத்துக்கும், இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடவும் குரல் கொடுக்கவும் யோக்கியதை அற்றவர்கள். இன்று ஒரு அரசாங்கம் செய்வதை அன்று ஒரு தனி மனிதர் சிறுபான்மை மக்களுக்கும் பெண்களுக்கும் செய்திருக்கிறார்.

நாவலர் தமிழுக்கு நிறைய தொண்டு செய்தவர் என அனேகம் பேர் நினைத்திருக்கின்றார்கள். இந்த நினைப்பு உண்மையானது அல்ல. தமிழுக்கு அவர் எந்தத் தொண்டும் செய்ததில்லை. அவர் அதிகம் புத்தகங்களை பதிப்பித்தது உண்மை தான். அவை தமிழ் மொழியில் பதிப்பிக்கப்பட்டதும் உண்மை தான். ஆனால் அப்புத்தகங்கள் தமிழ் இலக்கியம் சார்ந்தவை இல்லை. சகல புத்தகங்களும் சமயம் வளர்க்கவும், வெள்ளாளமயமாக்கலுக்கும் எனவே பதிப்பிக்கப்பட்டவை. இவை தமிழ்த் தொண்டு செய்யப் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் தான் எனும் வாதம் வலுக்குமாயின் நாவலரைக் காட்டிலும் கிறிஸ்தவப் பாதிரிமார் ஏகப்பட்ட தமிழ்ப் புத்தகங்களை மதம் பரப்பப் பதிப்பித்து இருக்கின்றனர்.

இவர் தமிழுக்குத் தொண்டு மட்டும் தான் செய்யவில்லை என நீங்கள் நினைத்து விடக் கூடாது. தமிழர்க்கு பெரும் பாவமும் செய்திருக்கின்றார். இவருக்கு முற்பட்ட காலத்தில் நமக்கென தனியான கிராமியக் கடவுளரும், வழிபாட்டு முறைகளும் இருந்தன. அக்கடவுளரையும், அவ்வழிபாட்டு முறைகளையும் அழித்தொழித்து பிராமணியத்தையும், பிராமணியக் கடவுளரையும் புகுத்தியதும் இவர் தான்.

பைபிளை தமிழில் மொழி பெயர்த்தது ஆறுமுகநாவலர் என்கின்ற ஒரு தப்பான கருத்துக்கூட நம்மவர் மத்தியில் உண்டு. போர்த்துகேயர் காலத்திலேயே பைபிள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டது. அப்படி மொழி பெயர்க்கப்பட்டதை பேசிவல் பாதிரியார் தலைமையில் பல பேர் கொண்ட குழு ஒன்று திருத்தி அமைத்தது. அக்குழுவில் பங்கு கொண்ட பலரில் நாவலரும் ஒருவர் அவ்வளவே.

ஒரு பெண் இப்படித் தான் ஆடையணிய வேண்டும். இன்ன இன்ன இடங்களில் மட்டும் தான் அமர வேண்டும். இன்ன இன்னவைகள் மட்டும் தான் பேச வேண்டும் என அட்டவணை கூட போட்டு பெண்களை அடக்கி வைத்திருக்கின்றார். மாத விலக்கான பெண் எது எது தொட வேண்டும். இன்ன செய்ய வேண்டும் இன்ன இன்னவைகள் தான் அணிய வேண்டும் என ஒரு சானிட்டரி நப்கின் விற்பனையாளனின் கவலை எல்லாம் இந்தாள் ஏன் பட்டார்? அஃறிணையான பறை. மேளத்துடன் பெண்ணை ஒப்பிட்டு, அடிவாங்கப் பிறந்தவை எனச் சொன்ன இவரை துடைப்பம் கொண்டு ஏன் அக்காலப் பெண்கள் அடிக்காமல் போனார்கள் எனப் புரியவில்லை.

நாவலர் பற்றிய பிரமையை உடைப்பதற்கு ஆதாரபூர்வமான தகவல் கேட்கிறீர்கள் இல்லையா? நாவலர் பற்றிய ஆய்வு சார்ந்த கட்டுரைகளை வெளியிட்டு இருப்போர் அதிகம் பேர் உள்ளனர். உதாரணமாக பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்றோர் தமிழிலும், Dennis Hudson என்கிற அமெரிக்கர் ஆங்கிலத்திலும் நிறைய எழுதியிருக்கிறார்கள்.

இவர்களுடைய கட்டுரைகளைத் தேடிக் கண்டு பிடித்து படிக்க முடியாது போனால் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் 'தமிழ் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பு' என்கின்ற நூலைத் தேடிப்பிடித்து படித்துப் பாருங்கள். பன்நெடுங்கால பெரும் பிரமிப்பும் மாயையும் உடைந்து சிதறும்.

**கனடாவின் தமிழ்த் தொடர்பு ஊடகங்கள் பற்றிய உங்கள் கருத்து யாது?**

தொடர்பூடகங்கள் என்று எதைக் கேட்கின்றீர்கள்? ஐந்து வானொலிகளையும் 523 பத்திரிகைகளையும் தானே. இவற்றின் மீதும் எனக்கு அளவு கடந்த அதிருப்தி இருக்கிறது.

'விளம்பரம்' எனும் பத்திரிகையைத் தவிர மற்றையவை எவையும் தமது கடமையைச் செய்யவில்லை.

ஒரு பத்திரிகையை எடுத்துக் கொள்வோம். அது சார்ந்திருக்கும் சமூகத்திற்கு செய்ய வேண்டிய கடமை என்ன என்பதை அது முதலில் தெரிந்திருக்க வேண்டும். அதன் ஆசிரியருக்கும், அவர் சார்ந்த சமூகத்து மக்களுக்கும் அவரது கொள்கை என்னவென்று தெரிந்திருக்க வேண்டும். நம் யாருக்காவது எந்த பத்திரிகை ஆசிரியருடைய

நன்றி - நூலகத்திட்டம்



**இன்றுள்ள போக்குத் தொடருமானால் வெல்பெயார் பகவான், வருமானவரி பகவான், கிறெற்கஷியான்- (கனேடியப் பிரதமர்) பகவான், பமேலா அண்டர்சன் லீ அம்மன் என்று நம் மக்கள் மதத்தின் பெயராலும், 'பகவான்களின்' பெயராலும் தங்கள் மூட நம்பிக்கைக்கு விலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டி வரும்.**

கொள்கையாவது தெரியுமா? எந்த பத்திரிகை ஆசிரியரும் எங்கள் பத்திரிகையின் கொள்கை இது தான் என்று ஏன் இன்னும் எந்தவிதமான நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தவில்லை?

'இரண்டு வாரங்களாக தணியாத நிலையில் காணப்பட்ட வன்னிச் சமர், நேற்று முன் தினம் மீண்டும் ஆரம்பம்!' என்று கொட்டை எழுத்தில் தப்புத்தப்பாய் செய்தித் தலைப் பெழுதும் பத்திரிகை ஆசிரியரால் எப்படி நம்பகத் தன்மையை ஏற்படுத்த முடியும். வாசகரைக் காட்டிலும் பத்திரிகை ஆசிரியருக்கு மிகப்பெரிய தேடல் இருக்க வேண்டும். வாசகரைக் காட்டிலும் சிறிதளவேனும் பொது விடய அறிவு கூடுதலாய் இருக்க வேண்டும்.

தினமுரசையும், விகடனையும், குமுதத்தையும் தவிர வேறு எதை வாசிக்கின்றான் எமது பத்திரிக்கை-யாளன். மிக மோசமான கவலையென்னவென்றால் தமது பத்திரிகையையே இவர்கள் படிப்பதில்லை என்பது தான்.

ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு நிகராய் பல வேறுபட்ட தேசங்களில் விடுதலைப் போராட்டங்கள் நடக்கின்றன. அவை பற்றி எந்தப் பத்திரிகை அக்கறைப்படுகிறது? அந்த மக்களின் பிரச்சினை என்ன? அவர்களுக்கான தீர்வு என்ன என்று எந்தப் பத்திரிகையாவது கட்டுரை எழுதுகிறதா?

கடந்த மாதம் இந்திய விமானம் கடத்தப்பட்ட போது இந்திய அரசு கொடுத்த செய்திகளை அப்படியே பிரசுரித்த பத்திரிகைகள், அவர்கள் ஏன் கடத்தினார்கள்? காஷ்மீரிய மக்களின் பிரச்சினை என்ன, என்ற விஷயங்களை அக்கறையுடன் விசாரிக்க முற்படவில்லை என்பது கவலை-யல்லவா? கொசோவோ மீது வீசிய குண்டு நியாயம் என்பவர்கள், கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் கியுபெக் மக்களின் பிரச்சினையை ஆராய முற்படாது, கியுபெக் பிரியக் கூடாது என்பவர்களும், அமெரிக்க ஏகாதிபத்திய தொடர்பு சாதனங்கள் பரப்பும் ஆளுமைச் செய்திகளை அப்படியே உள்வாங்கி அதையே பிரசுரிப்பவர்கள், ஒலிபரப்புவர்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதையும் அது சார்ந்த செய்திகளை மிகைப்படுத்தி பிரசுரிப்பதையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. என்னால் என்ன? இது சம்பந்தப்பட்ட பகுத்தாய்வு ஒவ்வொரு வாசகருக்கும் ஏற்படுமாயின் பத்திரிகையைத் தொழிலாகக் கொண்டவர்க்கும், அது சார்ந்து வாழ்வோரதும் நிலைமை கவலைக்கிடம் தான்.

'சவப்பெட்டிக் கடைக்காரன் மாதிரித்தான் நம் தொழில். சாவு விழுந்தால் அவனுக்கு வியாபாரம். குண்டு வெடித்தாலும், யுத்தம் தொடர்ந்தாலும் தானே எமக்கு வியாபாரம்' எனச் சொன்ன பத்திரிகையாளனை என்னால் அடையாளம் காட்ட முடியும்.

இத்தனை அறிவும் வல்லமையும் நேர்மையும் கொண்ட பத்திரிகையாளர்கள் வாழும் சமூகத்தில் நாமும் இருக்கிறோம் என்பதை நினைத்து நீங்கள் பெருமை கொண்டாலும் சரி - துாக்குமாட்டிக் கொண்டாலும் சரி. 15 நாடுகளில் ஒரே நேரத்தில் பிரசுரமாகிக் கொண்டு தான் இருக்கும் எமது பத்திரிகைகள். ரொராண்டோவில் உள்ள சுப்பர் மார்கட்டில் 15 சதத்துக்கு 100கிராம் சீரகம் விற்பனை என்பதை ஐரோப்பாவில் உள்ளவரும் ஆபிரிக்காவில் உள்ளவரும் தெரிந்து கொள்வதற்காகத் தான் வெளி-யிடுகிறார்களோ என்று எனக்குத் தோன்றுகிறது.

பத்திரிகைக்காரன் நமக்கு ஆப்பு வைக்கின்-றான் என்றால் வானொலிக்காரன் இன்னும் கொஞ்சம் மேலே போய் சயனைட்டை அல்லவா நமக்கு விட்டமின் என்று ஊட்டி விடுகின்றான்.

'ஆமாம் அம்மா.... இல்லை அய்யா... மாவீரர்களை நாம் மதிக்க வேண்டும் அல்லவா... 'நன்றிகள்'.... 'வணக்கங்கள்.' இவை தவிர ஒரு ஒலிபரப்பாளன் வேறு என்ன பேசுகின்றான்? 'தென் இந்திய சினிமாப்பாடல்களும் தொலைபேசியும் கொஞ்சம் பாட்டிகளும், தாத்தாக்களும் இல்லாது போனால் எமது வானொலிகளின் நிலை என்ன?

அர்த்த ராத்திரியில் தொலைபேசி உரையாடல் பேசுகிறது. யாருடன்?

கணவனைப் பிரிந்து நெடும் காலமாய் தனித்திருக்கும் பெண்களுடன்! கணவனை நான்கு ஆண்டுகளாய் பிரிந்திருக்கும் நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை எப்படி கட்டுப்படுத்திக் கொண்டி-ருக்கிறீர்கள்?

வானலையில் வருகிறது கேள்வி.

இந்த ரேடியோக்காரனை நான்கு சனம் கூடும் தெருவில் வைத்து நையப்புடைத்தால் என்ன தவறு இருக்கிறது.?

மேலாடை அணியாமல் பெண்கள் பொது இடங்களில் நடமாடத் தடையில்லை எனும் சட்டம் அமுலாகிய அன்றைய இரவு, தொலை பேசி உரையாடல் வானலையில் வீடுகளின் வரவேற்பறைக்குள் வருகிறது...

'உங்களால் மேலாடை இன்றி தெருவில் நடமாட முடியுமா?'

கேள்வி வரவேற்பறையுள் வானலையில் வருகிறது. யாருக்கு? ஒரு இளம் தமிழச்சிக்கு!

முதியவர்களினதும் பெண்களினதும் தனிமையையும் - தேசம் பற்றிய கனவுகளையும் - நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுப் போகும் சோகத்தையும் - மன அழுத்தத்தங்களையும் வியாபாரம் ஆக்கி பணம் பண்ணுவதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. தனக்குத் தானேயும் தன் எஜமானர்களுக்கும் மண்வெட்டியால் முதுகு சொறிவதைப் பற்றியும் எனக்கு கவலையில்லை.

பெண்களின் தனிமை பற்றிய பயமும் - கனடா பற்றிய பிரமை உடைந்த வெறுப்பும் - கணவனின் ஆதிக்க மனோபாவத்தாலும் மனம் உடைந்த பெண்கள், யாரையோ பழிவாங்குகிறேன் பேர்வழி என்று - இவ் வானொலி அறிவிப்பாளர்களினால் பயன்படுத்தப்படுவது தான் இந் நூற்றாண்டில் என் முதற்கவலை.

வாய் ஜாலம் உள்ளவன் திறமையானவனா-கவும் நல்லவனாகவும் நேர்மையானவனாகவும் இருக்க வேண்டும் என்பது அவசியமா என்ன?

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு விளம்பரம்: எந்தப் பத்திரிகை என்பது சரியாய் ஞாபகம் இல்லை. விசயம் இதுதான். தாயகச் செய்திகள், தமிழகச் செய்திகள், வன்னிச் செய்திகள், கிழக்-கிலங்கைச் செய்திகள், மற்றும் இலங்கைச் செய்திகள் இவைகளை தாங்களே முந்தித் தருவோம். என்னும் தோரணையில் அது இருந்தது.

இவ் விளம்பரத்தைக் கொடுத்த வானொலிக்-காரன் எதைத் தாயகம் என்று சொல்கின்றான்? வன்னியும் திருமலையும் மட்டக்களப்பும் இந்த வானொலிக்காரனின் தாயகத்துள் வராதா? யாழ்ப்-பாணம் தாண்டி மற்றைய பிரதேசங்களில் நடப்பது விடுதலைப் போராட்டம் இல்-லையா? அல்லது கனடாவில் யாழ்ப்பாண மக்களைத் தவிர வேறு எந்தத் தமிழரும் இல்லையென நினைத்து விட்டானா? இவ் வானொ-லிக்காரன் தரும் செய்தியை கேட்டு நீங்களும் நானும் என்ன நன்மை அடைந்து விடப் போகிறோம் சொல்லுங்-கள்.


சக்கரவர்த்தி

மட்டக்களப்பார் நிகழ்ச்சி என்று ஒன்றை ஒலிபரப்பு-கிறார்கள். அந்த நிகழ்ச்சியைக் கேட்ட பிற்பாடு தான் மட்டக்களப்பு என்கின்ற பிரதேசம் செவ்வாய்க் கிரகத்தில் இருக்கிறது என்பது எனக்குத் தெரிந்தது. பின்னென்ன......?

எந்த பிரதேசத்துக்காரராவது பெண் சமைந்தால் இப்படித் தான் குலவை போடுவார்கள் - இங்குதான் மஞ்சள் பூசுவார்கள் என்று சொல்கிறார்களா? இதுவெல்லாம் ஒரு விசயமா?

போடியாரின் வயலில் வேளாண்மை வெட்ட ஏறாவூர் போய் முஸ்லீம்களைக் கூட்டி வருவார்கள் என்பதையும் செத்த வீட்டுக்கு அப்பம் சுட்டுக் கொண்டு போவோம் என்பதையும் மற்றைய தேசத்தவர் தெரிந்து கொள்வதால் மட்டக்களப்பார் என்ன நன்மை அடைந்து விடப் போகின்றனர்?

ஒல்லாந்தர் இலங்கைக்கு எப்போது வந்தனர்? கிறிஸ்தவம் எப்படிப் பரவியது? சைவம் எப்படி தளைத்தது என்று வேறு தகவல்கள்....

மட்டக்களப்பானுக்கு எவ்வளவு பிரச்சினைகள் உள்ளன...?

அவ்வப்போது ஆட்சிக்கு வருகின்ற ஆயுதக் குழுக்களின் தொல்லை, எல்லா நேரங்களிலும் நெருக்கடி கொடுக்கும் இராணுவம், இரு திசைகளில் இருந்தும் முஸ்லிம்களுக்கு எழும் நெருக்கடி, மேற்கு திசையில் தொடரும் சிங்களவர் ஆக்கிரமிப்பு, எழுவான்கரையில் உள்ளோர் ஆற்றைக் கடந்து படுவான்கரை போய் விவசாயம் செய்ய முடியாத நிலை, படுவான்கரையில் உள்ளோர் பாலம் கடந்து பிற இடம் செல்ல முடியாத கட்டுப்பாடுகள், அதிகரித்துக் கொண்டு போகும் விதவைகள் எண்ணிக்கை. இத்தனை பிரச்சினைகள் அவர்களுக்கு இருக்க - பெண் சமைவதுவும், வெற்றிலைக்கு சுண்ணாம்பு இல்லை என்பதுவுமா உன் கவலை?

மட்டக்களப்பான் மடையன் என்கின்ற கருத்து யாழ்ப்பாண மக்களிடம் பரவலாக உண்டு. இந்த நிகழ்ச்சியை கேட்ட பிற்பாடு எனக்குக் கூட அக் கருத்தில் உடன்பாடு தான்!

**கனடாவில் இன்றைய தமிழ் கலை இலக்கியம் பற்றியும் இலக்கியவாதிகள் பற்றியும் உங்கள் கருத்து என்ன?**

ஒரு விசயத்தை சொல்வதற்கு முன் உன்னுடைய மொழியை நீ கண்டு பிடி என சுந்தரராமசாமி சொல்கிறார்.

எமது கலைஞர்கள் எல்லோரும் தமது மொழி எதுவென்று தெரியாமல் எல்லோரும் சிவாஜி மகேந்திராவாகவே இருக்கிறார்கள். பிரதி வேறு, படைப்பு வேறு அல்லவா? பிரதி எடுப்பவர்கள் கலைஞர்கள் ஆகிவிட முடியாது... சிவாஜி மகேந்திராக்களால் புதிதாக எதையும் - சிறு சிறு மெல்லிய ஒரு அதிர்வைக் கூட புதிதாக எமது சமூகத்திற்குக் கொடுக்க முடியாது.

ஏற்கனவே ஆடிப்பாடப்பட்ட சினிமாப் பாடல்களை மட்டமான முறையில் பிரதிபண்ணி 'நவராகம்' என்றும் 'அதிசயராகம்' என்றும் அவற்றிற்குத் தலைப்பிட்டு தங்கள் கலைபற்றிய மதிப்பீட்டை நம் முன் வைக்கிறார்கள். இவர்களின் அட்டகாசம் தாங்காது மறுபக்கம் திரும்பினால் இலக்கியவாதிகளின் இம்சை.

முற்போக்கு இலக்கியம், தீவிர இலக்கியம். அந்த இசம், இந்த இசம் என்று தானும் தெளிவில்லாமல் மற்றவர்களையும் கிறுக்கர்-களாக்கும் இவர்கள் ஏன் யதார்த்தமாய் இருக்க மாட்டேன் என்கிறார்கள்?

கலை பற்றிய மதிப்பீடும் கலை இலக்கியம் பற்றிய விமர்சனமும் இல்லாத சமூகத்தில், கலைஞர் பற்றியும், இலக்கியவாதிகள் பற்றியும் பேசுவதை இத்தோடு நிறுத்திக் கொள்கிறேன்....

**இங்கு பல்கிப்பெருகும் கோயில்கள். மதம் பற்றிய தங்களின் கருத்து என்ன?**

மனதில் நிம்மதி இல்லையா? மனக் குழப்பங்களா? துாக்கமின்றி தவிக்கின்றீர்களா? நாடுங்கள் முருகன் கோயில். இது ஒரு கோயிலுக்கான விளம்பரமா? இல்லை சிட்டுக் குருவி லேகியம் விற்கும் காளிமுத்துவின் விளம்பரமா? என்ன இது? நாம் எங்கு கோய்க் கொண்டிருக்கிறோம்? கோயில்களை வியாபார நிலையமாக்கும் நிலையைக் கனடாவைத் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. மக்களின் அறியாமையையும் பலவீனத்தையும் பயன்படுத்தி காசு பண்ண ஒரு அளவு வேண்டாமா? இவர்களை இப்படியே விட்டீர்களானால் 'மாதவிடாய் சீரற்று இருக்கிறதா? வெள்ளை படுகிறதா? இந்திரிய வீரியமின்மையா? உடன் நாடுங்கள் ஐயப்பன் கோயில் . .. ஐயப்பன் கோயில். . . ஐயப்பன் கோயில்., . . ' என விளம்பரப்படுத்துவார்கள்.

ஜனவரி முதலாம் திகதியை எடுத்துக் கொள்ளுங்கள். யேசு சாமியின் பிறப்பை அடிப்-படையாய் வைத்து உரோமர்களால் கணிக்கப்பட்டது தானே ஜனவரி ஒன்றை புதுவருடமாக கொண்-டாடுவது. ஜனவரி ஒன்றுக்கும் இந்துக் கோயிலுக்-கும் என்ன சம்பந்தம். எதற்காக டிசம்பர் 31ம் திகதி 12 மணிக்கு விசேட பூசை செய்கிறாய் பிள்ளையார் கோயிலில்? கிறிஸ்துவ புத்தாண்டுக்கு பிள்ளையா-ருக்கு எதற்கைய்யா பாலாபிஷேகம்? மத நல்லிணக்கம் என இவர்கள் சொன்னால் சந்தோசப்-பட்டுக் கொள்கிறேன். அப்படியாயின் றமழான் பண்டிகைக்கு முருகனுக்கு சந்தனகாப்பு சாத்து-வாயா? வெசாக் பெருநாளுக்கு ஐயப்பனுக்கு இருமுடி கட்டுவாயா? மக்களின் அறியாமையை பயன்படுத்த ஒரு எல்லை இருக்கிறது.

பிராமணன் என்பவன் தீபத்தட்டில் விடும் தட்சணையையும், பகவானுக்கு படைக்கும் நைவேத்தியத்தையும் தவிர வேறு எதுவும் வீட்டுக்கு கொண்டு செல்லக்கூடாது எனத்தானே இவர்களின் வேதம் சொல்கிறது. வேதம் ஓதும் பிராமணன் Lexus (லெக்ஸஸ்-அதி சொகுசுக் கார்) ஓட்டுவது பாவம் என்பது என் வாதமல்ல. வேதப் பிரகாரம் பிராமணன் வாழ்வானேயாயின் அவனால் சைக்கிள் கூட ஓட்ட முடியாது. தரித்திரப் பிராமணனைத் தான் நாம் பார்க்க முடியும். கனடா பிராமணன் வேதப் பிரகாரம் வாழ்பவன் என்றா உங்களுக்கு தெரிகிறது? நம் மக்கள் அறியாமைக்காக மிக மிகப் பெரியவிலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எத்தனை பெரிய கவலை.

1998ம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் பனி கொட்டத் தொடங்கியது உங்களுக்கு தெரியும். பின் 1999 ஜனவரியில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு பெருத்த பனிப்புயல் வீசியதும் உங்களுக்குத் தெரியும்.

இக்காலகட்டத்தில் வந்த இந்த அறிவித்தலை நீங்கள் பார்க்கத் தவறியிருக்க மாட்டீர்கள்.

'பருவகாலத்தில் கொட்ட வேண்டிய 'ஸ்னோ' கொட்டத் தவறுகிறது. 'ஸ்னோ' கொட்ட வேண்டிய காலத்தில் கொட்டாது போனால் நாட்டில் பிணி பெருகும், பஞ்சம் படையெடுக்கும், அரசன் ஆண்டி-யாவான், மக்கள் அழிவார்கள்! ஆகவே 'ஸ்னோ பகவானுக்கு' யாகம் செய்ய வேண்டும். பக்த கோடிகள் தட்சணை பொருட்களுடன் கலந்து கொள்ள வேண்டுகிறோம். இன்ன கோயில், இத்தனை மணிக்கு, ஸ்னோபகவானுக்கு யாகம்.'

இதை உங்களால் ஜீரணிக்க முடிகிறதா?

இவற்றைத் தொடர்ந்து அனுமதித்தீர்க-ளேயானால் வெல்பெயார் (Welfare) பகவான், வருமானவரி பகவான், கிரெற்க்ஷியான்(Chrétian-கனேடியப் பிரதமர்) பகவான், பமேலா அண்டர்சன் லீ (Playboy Model) அம்மன் என்று போய்க் கொண்டே இருப்பார்கள். நம் மக்கள் மதத்தின் பெயராலும், 'பகவான்களின்' பெயராலும் தங்கள் மூடநம்பிக்-கைக்கு விலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியது தான்.

சில சமயங்களில் நம் கோயில்கள் மனிதாபி-மானமற்ற முறையிலும் நடந்து கொள்வது இன்னும் பெரிய கொடுமை. ஊனமுற்ற பெண் ஒருவர் சக்கர நாற்காலியுடன் கோயிலுக்குள் போக முற்பட அவரைத் தடுத்து நிறுத்தி கோயிலின் புனிதம் கெட்டு விடும் எனச் சொல்லி அவரை கோயிலுக்குள் அனுமதிக்க மறுத்ததையும் - அதை ஆமோதித்து கருத்து வெளியிட்ட நமது 'மீடியா மாபியா'வையும் என்ன சொல்வது?

உள்ளூர்காரர்களின் தொல்லை இப்படி என்றால் தமிழ் நாட்டில் இருந்து பாவம் போக்கவும் ஆசி வழங்கவும் வருகின்ற நாராயணி அம்மாக்களி-னதும், அர்க்காக்களினதும் அவஸ்தை இன்னொரு பக்கம். அம்மா என்று சொல்லிக் கொண்டு ஒரு ஆள் வருவார். ஒரு ஆசிக்கு 200 டொலர் வாங்குவார். விசா முடியா இந்தியா திரும்பி விடுவார். இந்த அம்மாவை நம்மூர் பத்திரிகை எல்லாம் அவதாரம் என்றும் மகான் என்றும் தங்கள் பத்திரிக்கையின் நோக்கம் இது தான் என்பது போல் கட்டுரை எழுதும்.

இவர்கள் இப்படி என்றால் சகோதரர்களின் அழிச்சாட்டியம் அடுத்த பக்கம். காது இல்லாத-வர்களுக்கு காதும் மூக்கு இல்லாதவர்களுக்கு மூக்கும், வாய் இல்லாதவர்களுக்கு வாயும், இன்றும் என்னவோ ஒன்று இல்லாதவர்களுக்கு அதுவும் கொடுப்பதற்காக இந்தியாவில் இருந்து பிளைட் பிடித்து கனடா வருகிறார்கள்.

இந்தப் பாவிகளிடம் சொல்லுங்களேன் இந்தியாவில் வயிறு உள்ளவர்களுக்கு ஒரு வாய் சோறு போட்டால் பரம்பரைக்கே புண்ணியம் சேரும் என்று. மண்டபத்திலும், தங்கச்சி மடத்திலும், கொட்டப்பட்டிலும், ராமேஸ்வரத்-திலும், வேதாரணியத்திலும் வாய்க்கும், வயிறுக்கும், பிணியிலும் பாவத்திலும் திண்டாடிக் கொண்டிருக்கிறது இன்னோர் ஈழத்தமிழ் கூட்டம் அந்த மக்களுக்கு ஆசி வழங்கப் போகாத அர்க்காக்கள்: நாராயணி அம்மாக்கள், வன்னிக்கு போக பாதை தெரியாத இந்த அவதாரங்கள் - சகல சௌபாக்கியங்களுடன் இருக்கும்-இருக்கும் கனடாத் தமிழருக்கு மட்டும் தான் ஆசி வழங்குமா? இது பற்றிய பதிலை அவதாரங்களை இறக்குமதி செய்யும் முதலாளிகள் தர வேண்டும்.

நம்மைச் சுற்றி அத்தனை விஞ்ஞான விந்தைகள் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கவனிக்காது இப்போதும் பிள்ளை பிறக்காததற்கு காண்டம் பார்க்கும் மக்களை விழிப்படைச் செய்ய உங்களாலும், என்னாலும் முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.

○

# கல்வெட்டுக்கள்

திருமாவளவன்

கடைசிக் கெடு கிடைத்தாயிற்று.

எப்படியும் இன்று எழுதிக் கொடுத்து விடவேணும். இல்லாட்டி அடுத்த சஞ்சிகைக்கு பிந்திப்போய் விடும்.

மண்டை இடிக்குது. நேற்று அடிச்ச பியரின் போதை இன்னும் இறங்கயில்லை. இரவு எப்பிடி வீட்டை வந்தனான் என்ற நினைப்புக் கூட அவனுக்கில்லை. நேற்றிரவு நிகழ்ந்தவற்றை நினைச்சு நினைச்சுப் பாக்கிறான். தொடக்கத்திலை கதைச்சதுகள் மட்டும் நினைவிலை இருக்கு. மீதி...

எழுதத் தொடங்கவேணும் என்ட நினைப்பு உறுத்துகிறது. மேசையைப் பாக்கிறான்.

வாரப்பத்திரிகைகள், இலக்கியச் சஞ்சிகைகள், எழுதி எழுதிக் கிழிச்ச காயிதக் கும்பல்கள் எண்டு இறைஞ்சு கிடக்குது மேசை. ஒழுங்காய் அடுக்கி வைக்க வேணுமெண்டு விருப்பந்தான். ஆனால் நேரமேது?

'என்ன மேசை இப்பிடி குப்பையாய் கிடக்குதே. அடுக்கி வைக்கக் கூடாதா' எண்டு யாராவது வீட்டுக்கு வருபவர்கள் கேட்டால் போதும் பெரிய தத்துவ விளக்கம் கிடைக்கும். ஒழுங்கை மீறுவது என்பதே என்ரை இயல்பு என்பான். வாயைக் கொடுத்தவர்களுக்கு போதும் போதும் என்றாகி விடும்.

இவன் இப்பெல்லாம் உலகறிஞ்ச சிறுகதை எழுத்தாளன். எங்கும் இவன்ரை பெயர் பிரசித்தம்.

ஆனால் இன்றைக்கு ஒரு வேறுபாடு. இப்ப எழுதப்போறது சிறுகதையல்ல. சஞ்சிகை ஒன்றிலை வந்த கட்டுரைக்கான எதிர்வினை. அப்பிடிக் கூடச் சொல்ல முடியாது. அந்தக் கட்டுரையாளனுக்கு கொடுக்கிற நெத்தி அடி. மரண அடி. இதோடை இனி அவன் பேனா தூக்கக் கூடாது. என்னத்தை எழுதிக் கிழிக்கிறான். ஆருக்கு வேணும் இவனின்டை தத்துவ விளக்கம். உலகத்தைக் குழப்புறான்.

முந்தி ஊரிலையெண்டால் என்ன செய்திருப்பன் தெரியுமே... இழுத்துக் கொண்டு போய் 'போஸ்ற்'றிலை கட்டி மண்டையிலை போட்டிருப்பன். இப்ப... இஞ்சை... ஏலாமல் கிடக்கு.

இவன்ரை கண்ணுகள் மிளகாய் பழம் போலை சிவத்துக் கிடக்கு. கோவம், நெருப்புப் பொறியாய் பறக்குது. கதிரையை இழுத்துப் போட்டு மேசைக்கு முன்னாலை இருக்கிறான். காத்திலை பேப்பர் படபடக்குது. பேனையைத் திறந்து வைச்ச கண் வாங்காமல் அதுகின்டை முனையைப் பாக்கிறான். இரண்டு...மூன்று... என்று நிமிசங்கள் கழியுது. பார்த்த கண் இமை கொட்டாமல் பார்த்தபடியே கிடக்கு. இப்ப கண்களை மூடுறான். இறுக... இறுகமூடி மனதை ஒருநிலைப்படுத்த முனைகிறான் போலை. நேரம் போனதே தெரியல்லை.

மூடியகண்கள் மூடியபடியே கிடக்கு. முகத்திலை மாறிமாறி ரேகைகள் ஓடுது. சிந்தனை ஓடுது.

நிஷ்டையிலை லயிச்சிருக்கிற ஒரு மகானைப் போலை...

இப்ப நெத்தியிலை வரிவரியாய் சுருக்கம் தெரியுது. முகம் மெல்லமெல்ல இறுகி விகாரமாகுது.

ஒரு பயங்கரக் கொலைகாரன்ரை முகம் போலை... வியர்த்துக் கொட்டுது.

கண்களைத் திறக்கிறான். கோபம் அனல் பறக்குது. இதழ் கோடியிலை ஒரு அசட்டுப் சிரிப்பு தொங்கி மறையுது.

இப்ப எல்லாம் முடிஞ்சுது.

எழுதத் தொடங்கிறான். வெகு இயல்பாய். லயம் தவறாத ஒரு குதிரையின்ரை நடை போலை எழுத்து ஓடுது. எல்லாம் பயிற்சி தான்...எழுத்தும் ஒரு வகையிலை பயிற்சி தானே.

இவன் எத்தினை பயிற்சிகளை தாண்டி வந்தவன். ஒன்றா...இரண்டா...

அன்றைக்கு அமாவாசை, மையிருட்டு, மேல்காத்திலை பேயிரைச்சலிட்டு குமுறுது கடல்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலை இருள்வெளி, தூர இரண்டொரு ஒளிப் பொட்டு. நேவிக்காரன்டை 'கண்போட்' டாயிருக்கலாம்.

திரும்பி தரையைப் பார்க்கிறான். இருள், இருளிலை ஒண்டும் தெரியல்லை. சனநடமாட்டமே இல்லாத இடம் போலை கிடக்கு. வெகு தூரத்துக்கு அப்பாலை வெளிச்சம் தெரியுமாப் போலயிருக்கு. குடிமனையாய் இருக்கலாம்.

இவையள் கரையிலை படகை இழுத்து விட்டிட்டு நடக்கத் தொடங்கினம். இவையள் என்டா ஒன்று, இவன். மற்றது இன்னும் மூன்று பேர். இவை மூன்று பேரும் இவனுக்குப் பயிற்சி கொடுக்கப் பணிக்கப் பட்டவையள்.

ஏதோ விஷேட பயிற்சிக்கெண்டு பொறுக்கி எடுத்த பன்னிரண்டு பேரிலை இவனும் ஒருத்தன்.

இவையளுக்கான ஆரம்பப் பயிற்சி மற்றும் வகுப்புகள் எல்லாம் ஏற்கனவே முடிஞ்சுது. இது கடசிப் பயிற்சி. இந்தப் பயிற்சி ஒவ்வொருத்தருக்கும் தனியத்தனிய நடக்குமெண்டு முன்னமே சொல்லியாச்சு. ஆனால் என்ன மாதிரியான பயிற்சி என்டு மட்டும் இன்னும் தெரியாது.

தூரத்திலை நாய்கள் குரைக்கக் கேட்குது. இது சாதாரண குரைப்பில்லை. எங்கையோ குகையுக்கை இருந்து எதிரொலிச்சு கேட்கிற மாதிரியான அவலக் குரைப்பு. ஒன்றோடை ஒன்று சண்டையிட்டு கடிபடுறது போன்ற தொனிப்பு.

முன்னாலை பெரியவன் நடக்கிறான். சத்தம் போடக்கூடாதெண்டு சைகை காட்டினவன். அவனுக்குப் பின்னாலை இன்னொருத்தன். இடையிலை இவன். பின்னாலை மற்றவன். ஒருவரும் சீருடை அணியவில்லை. மடிச்சு சண்டிக்கட்டு கட்டின சறமும் தொளதொளப்பான அரைக்கை சேட்டும் தான் உடுப்பு.

முன்னாலை போற பெரியவனிட்டை ஒரு சின்னப் பிஸ்டல். மற்ற இரண்டு பேரிட்டையும் ஏ.கே. 47 ரக துவக்கு. ஒருதன்டை தோளிலை ஒருரோல் மணிலா வடக்கயிறு.

இவனிட்டை ஒருநீட்டு வாள். நல்ல உருக்கு இரும்பிலை அடிச்சிருக்க வேணும். கெட்டியான வாள்.

நட்ஷத்திர வெளிச்சத்திலை 'பளிச்'சென்டு மின்னல் அடிக்குது. தடவிப் பார்த்தான். நல்ல கூர். புதுசாய் தீட்டியிருக்க வேணும்.

இவனுக்கு எல்லாமே புதிராய்க் கிடக்கு.

எங்கை போறம்... ஏன் போறம்... எதுவுமே மனதுக்கு பிடிபடமாட்டன் என்னுது.

இதுவரையிலை என்ன பயிற்சி என்டாகுதல் சொல்லி இருக்கலாம்... ஆனால் மூச்சு விடயில்லையே. ஏதேனும் பூடகமாய் என்டாலும் சொல்லியிருப்பினமோ.

கடைசி வகுப்பிலை சொன்ன வார்த்தைகளை ஒவ்வொரு வரியாய் நினைச்சுப் பார்க்கிறான். அது மீளமீள நினைவிலை ஊருது.

"நீங்கள் எங்கடை போராட்டத்திலை ஒரு உன்னதமான பணிக்காக பொறுக்கி எடுக்கப்பட்டு இருக்கிறியள். நீங்கள் ஒவ்வொருவரும் சராசரி மனுசரில்லை. உண்ணவும் உடுக்கவும் பிறந்த ஜடங்களில்லை. இந்த மண்ணின்டை புதல்வர்கள். இந்த மண்ணையும் மக்களையும் பாதுகாக்கப் பிறந்தவர்கள். நீங்கள் சத்திரியர். உங்களுக்கு ஆசாபாசங்கள் கிடையாது. உங்களுக்கு மரணங் கிடையாது. தலைவன் கட்டளை ஒன்றே தாரக மந்திரம். நாளை இந்த மண் போற்றுகின்ற உன்னதத்துக்கானவர்கள் நீங்கள்... காலம் உங்களை வாழவைக்கும். மண் உங்களை வீரமறவர் எனப் போற்றும்."

இதுகள் எல்லாம் எவ்வளவு உன்னதமான வார்த்தைகள்.

ஒவ்வொரு வார்த்தையும் அவனுள் ஊர்ந்து திரிகிறது. உடல் புல்லரிக்குது. இரத்த நாடிகள் புடைக்கிறது. மனம் புளகாங்கிதம் அடைகிறது. ஏதோ ஒரு பெரிய காரியத்துக்கு பயன்படப்போறம் என்ட நினைப்பு...

நெஞ்சை நிமிர்த்தி நடக்கிறான். திடீரெண்டு முன்னாலை நடந்தவன் நிக்கிறான். எல்லாற்றை நடையும் தடைப்படுகுது. கடற்கரையிலை இருந்து வெகுதூரம் வந்துவிட்டது போல மனசு சொல்லுது..

இது கடற்கரைக்கும் குடிமனைக்கும் நடுவேயான இடம். பக்கத்திலை ஒரு கொட்டில் குடிசை தெரியுது.


பெரியவன் இவை மூன்று பேரையும் நிற்கும் படி சைகை செய்துவிட்டு கொட்டில் பக்கம் நடக்கிறான்.

அங்கே தீக்குச்சி கிழித்து குப்பி விளக்கு கொழுத்தப்படுகிறது. மங்கல் வெளிச்சத்திலை பக்கத்திலை இன்னுமொரு ஆள் நிற்கிறது தெரியுது.

இவனுக்குள்ளை ஒருபக்கம் வியப்பு... பெருமிதம்... அடுத்தது என்ன என்ற தவிப்பு இன்னொரு பக்கம் பயம். இப்படி போக்குக் காட்டிவிட்டு தனியக் கூட்டிவந்து தட்டிப்போடுவினமோ என்ற பயம்.

நினைக்க நினைக்க நெஞ்சு திடுக்குறுகிது. வியப்பு பெருமிதம் எல்லாங் கலைஞ்சு பயத்தின் பக்கம் யோசினை போகுது.

இந்த இருட்டிலை ஏன் தனியக் கூட்டி வருகிறாங்கள்... என்ன பயிற்சி என்டு ஒரு விளக்கமும் சொல்லயில்லை... ஏன்...?



கையிலை தேடா வடக்கயிறு வைச்சிருக்கினம்... இதோடை நீட்டு வாள் வேறு... கருக்கிருட்டிலையும் கூர் பளிச்சிட்டு பயமுறுத்திது... ஏ.கே., கலிபர் என்று ஆயுதங்கள் குவிஞ்சுப்போய்க் கிடக்கு... இப்ப வாள் எதுக்கு...

பயம் விரிஞ்சு படந்து வளருது. உடல் நடுங்கத் தொடங்குது.

எதுவாய்யிருக்கும்...

நான் வதை முகாமிலை நடத்தின சித்திரவதைகள் மேலிடத்தின் கவனத்துக்குப் போயிருக்குமோ... அவையள் தந்த ஓடரைத் தானே செய்தனான்... செய்யிற பழியள் சும்மா விடாதென்ற விசயம் உண்மையோ... ஆயுதம் தூக்கினவனுக்கு ஆயுதத்தாலை தான் சாவு என்றது இதுதான் போலை...

என்னைத் தட்டப் போறாங்கள்... இதுதான் உண்மை... திரும்பி ஓடிவிடுறது தான் புத்திசாலித்தனம்... நாலுபக்கமும் கண்கள் துழாவுது... எங்கை ஓடுறது... பெரிய வெளி... இனித் தப்பவே முடியாது... எதுவாயிருந்தாலும் சந்திச்சுத் தான் ஆகவேணும்.

பெரியவன் கொட்டிலிலை இருந்து திரும்பி வாறான். அவனோடை இன்னொருத்தன். இப்ப நாலுபேர் ஆகி விட்டது. இனித் தப்பிறதென்பது நடக்காத காரியம்.

கொட்டிலை இருந்து புதிசாய் வந்தவன் வழிகாட்ட வேறு திசையிலை நடக்கிறார்கள்.

இரண்டு மூன்று நிமிடம் நடந்திருப்பார்கள். கோட்டைச் சுவர் போல கற்களால் அடுக்கிய வேலி.

அடையிலை சிறிய கடப்பு. கடப்பால் நுழைந்து வரப்பிலே நடந்து நடு வயல் வந்தாயிற்று. வயல் அறுத்து எஞ்சிய அடிக்கட்டைகள் கூட இற்றுப் போய்விட்டது. கடுங்கோடை. வயல் புழுதியாய் பறக்கிறது.

திடீரெண்டு கேட்ட விசித்திரச் சத்தத்திலை குலை நடுங்கத் தொடங்கிது. நரவெடில்...

நாய்களுக்கு மோப்பம் தெரிஞ்சிருக்க வேணும். நாய்கள் குரைக்கிது. ஆனால் சத்தம் புதிசாய் இருக்கு.

கிணற்றுக்கு உள்ளே இருந்து எழுகிற அந்தரிப்புக் குரைப்பு. கிணற்றுக் உள்ளே 'ரோச்'சை அடிக்கிறான் ஒருவன். சோடி சோடியாய் கண்கள்... ஒன்று... இரண்டு.... மூன்று...


பதினாறுசோடிக் கண்கள். இன்னும் கூட இருக்கும் போல தெரியுது. இவ்வளவு நாய்களும் எப்படி கிணற்றுக் உள்ளே விழுந்தது. இவற்றை வெளியே எடுத்து விடுறதுதான் கடைசிப் பயிற்சியோ.

இவனாலை எதையும் தீர்மானமாய் நினைக்க முடியவில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# கல்வெட்டுக்கள்



இப்போ பெரியவன் கட்டளையிடத் தொடங்கினான். கருமங்கள் நடக்குது. மணிலாக் கயிற்றின் ஒரு முனையை வெளியே கிடந்த கட்டையிலை கெட்டியாய் கட்டினான் ஒருத்தன். அடுத்த முனை கிணற்றுக்குள்ளே இறக்கப்பட்டது. இறங்குவதற்கு வசதியாய் கயிறு சென்ற திலையிலை குத்துக் கற்கள் நீட்டிக் கிடக்கு.

இவன் கிணற்றைப் பார்க்கிறான். கிணற்றுக்குள்ளே தண்ணியில்லை. கோடை வெய்யிலிலை வற்றிப் போயிருக்கலாம். என்ன நடக்கப் போகிறது என்டதிலேயே இவன்றை சிந்தனை உறைஞ்சு கிடக்கு.

அமைதியைக் குலைத்து பெரியவன் பேசத் தொடங்கினான். அவனின் குரல் இயல்பு குறைஞ்சு இறுகிக் கிடக்குது.

இது உனக்குக் கடைசிப் பயிற்சி. இதைக் கடந்து விட்டால் நீ களத்தில் இறங்க வேண்டியவன்.

இப்பொழுது நீ செய்ய வேண்டியதெல்லாம் ஒன்று தான். மனதை ஒருநிலைப்படுத்து. அதை எங்கும் அலைய விடாதே. கண்களை மூடு... உன் நோக்கம்... சிந்தனை... எல்லாம் ஒரு வழிப்படட்டும்... நீ தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டவன். ஆசாபாசங்களுக்கு அப்பாற் பட்டவன்... இந்த மண்... அதன் மீட்பு... இது ஒன்றே உன் லட்சியம்... அது மட்டுமே உன் வாழ்வின் குறி.

இப்பொழுது உன்னிடம் ஒரு வாள் தரப்பட்டிருக்கிறது. கூரிய வாள்... இக் கயிற்றின் வழியே கிணற்றுள் இறங்கு... வெட்டு... அனைத்து நாய்களையும் வெட்டு... இவை நாய்களல்ல... உன் எதிரி... வெட்டு... இவைகள் எங்கள் நிலத்தை அபகரித்தவர்கள்... எம் பெண்களின் வாழ்வைச் சிதைத்தவர்கள்... எரியும் நெருப்பில் எங்கள் அப்பாவி மக்களை உயிருடன் எரித்தவர்கள்... எங்கள் வீடுகள் மீது குண்டு போட்டவர்கள்... வெட்டு... ஒன்றும் விடாமல்... அத்தனையையும்... இது தலைவரின் ஆணை... ஆணை.

இவன் கண்கள் மூடியபடியே கிடக்கிறது.

முகத்தில் சிந்தனை ரேகைகள் ஓடி மறையுது. உடலின் நரம்புகள் அனைத்தும் புடைத்து வெறிபிடிக்கிறது.

கண்களைத் திறந்தான்... நீண்ட வாளை உற்று நோக்கினான். அதை வாயில் கௌவிக் கொண்டான். ஒரு கணப்பொழுதுதான் கழிந்திருக்கும். கயிற்றின் வழியில் இறங்கத் தொடங்கினான்.

மேலிருந்து ரோச் வெளிச்சம் கிணற்றை நிறைக்கிது... நாய்கள் இவன் வருவதைக் கண்டு விட்டுதுகள்... இரன்டு மூன்று நாட்கள் சாப்பாடு இல்லாமல் கிடந்திருக்கும் போலும்...

ஒன்றிணைந்து இவன் இறங்கும் திசையில் கூடி குதறத் தயாராகுதுகள்... இல்லை... தங்ளைக் காப்பாற்ற ஒருவன் வருகிறான் என நினைத்திருக்கக் கூடும். வைத்த கண் வாங்காமல் இவனையே பார்த்து ஏங்கிக் குழைகின்றன.

இவன் கடைசிப் படியை அண்மித்து விட்டான். ஒரு கால் கடைசிப் படிக்கல்லிலே... ஒரு கையாலை கயிற்றை பலமாகப் பிடித்துக் கொண்டான். மறு கையாலை வாயிலையிருந்து வாளை எடுக்கிறான்...

இப்பொழுது நாய்களுக்குத் தெரிந்து விட்டது... வருபவன் காப்பாற்ற வருபவன் இல்லை... தாக்க வருபவன்... எல்லாம் ஒன்றினைந்து மூர்க்கமாய் இவனைக் குறிவைத்து குரைக்குது. ஒவ்வொன்றின் பல்வரிசையும் குதறிக் கிழித்துவிடக் காத்துக் கிடக்குது.

இவன் கீழே ப்பார்க்கிறான். இனி இதிலிருந்து கீழே குதித்து இறங்கவேணும். ஆனால்... குதிக்க வேண்டிய இடத்தில் நாய்கள் குறிவைத்து நிற்கிறதே... முதலில் அவற்றை இதிலிருந்து விரட்டவேணும்...

கண்மூடித் திறக்கு முன் அது நடந்தது. படியில் நின்றபடியே கயிற்றில் கையை நுழைத்து உடலைச் சரிவாக்கி வாளை ஓங்கி ஒரு வெட்டு. ஏதோ ஒரு நாயின் உடலில் விழுந்திருக்க வேணும்... சிறிய வெளிப்பு... மீள நாய்கள் இணைவதற்குள் அதில் குதித்து விட்டான்.

வீசி வெட்டத் தொடங்குகிறான்... அவன் நினைத்த படி இலகுவல்ல... ஒன்று... இரண்டு... மூன்று நாய்கள் விழுகிறது.

அதுகள் இப்போ எதிர்ப்பதை விட்டு பதுங்கத் தொடங்குகிறது.

இரத்தம் தெறித்து உடல் பிசுபிசுத்து ஒட்டுகிறது... நெற்றியில் வியர்வை வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடுகிறது. வழித்தெடுத்தான். தடிப்பாய் பிசுபிசுக்கிறது... வழித்தெடுத்த கையைப் பார்த்தான்... இரத்தம்... சிவப்பு இரத்தம். மனம் தடுமாறுகிறது... கைகள் சோர்ந்து வீழ்கிறது... தலை சுற்றுகிறது... வயிறு குமட்டுகிறது... ஒவ்வொரு நாயும் உயிர்ப்பிச்சை கேட்கிறது. கால்களுக் கிடையில் வாலைப் பதுக்கி கண்ணில் நீர் வடியக் கெஞ்சுகிறது.

கண்களை இறுக மூடித் திறக்கிறான்.

வெட்டு... வெட்டு... ஊம்...தயங்காதே. இவை அப்பாவிகளில்லை. உன் பரமவைரிகள். வெட்டு...

பெரியவனின் குரல் கிணற்றின் சுவர் எங்கும் பட்டு எதிரொலிக்கிறது.

கண்களைத் திறந்தான்... முடியவில்லை. எப்படி வெட்டுவது... இரத்தம்... பச்சை இரத்தம்... எனது உடலில் ஓடுவதைப் போல... அம்மாவின் உடலில் ஓடுவதைப் போல... தலை கிறுகிறுக்கிறது எப்படி வெட்டுவது...

அவன் மனம் தயங்குகிறது.

வெட்டு... இது தலைவரின் கட்டளை. தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டவன். ஆணை மீறேன் எனச்சத்தியம் செய்தவன். வெட்டு...

தலைவரின் ஆணை என்ற சொல்லு சுவரெல்லாம் பட்டு அதிர்கிறது. மனம் இறுகி விடுகிறது. வெறி கொண்டவன் போல வெட்டத் தொடங்கினான். நாலாபுறமும் சிதறிய அனைத்தையும் வெட்டிச் சாய்க்கிறான்...

சத்தம் அடங்கி விட்டது. மூச்சு வாங்கிது. ஒரு நிமிசம் ஓய்வு வேணும் போல இருக்கிது.

கிணற்றைப் பார்க்கிறான். எங்கும் பிணக் குவியலாய்... எல்லாம் உடல்களாய்...

ஒரு விரக்திச் சிரிப்பு... பார்க்கச் சகிக்கவில்லை... கண்களை மூடுகிறான்.

அமைதி... எல்லா ஓசைகளும் அடங்கிய பேரமைதி. அவனுக்கு இந்த அமைதி பிடித்திருந்தது. அதை ரசிக்க வேணும் போல இருந்தது... ஆனால்... ஆனால்... கண்களைத் திறக்க முடியவில்லை...

திறந்தால் எங்கும் பிணக்குவியல்...

கண்கள் மூடியபடியே கயிற்றின் திசையில் காலெடுத்து வைக்கிறான். இடறி விழுகிறான்...

முகம் முழுவதும் இரத்தம்.

திருமாவளவன்

இந்த நிசப்தம் கலைகிறது... எப்படி வந்தது அந்தச் சத்தம். கண்களைத் திறந்தான்...

சத்தம் வந்த திசையில் பார்வை போகிறது. நேற்று அல்லது இன்று போட்டிருக்க வேணும்...கண்கள் திறக்காத இரண்டு குட்டிகள்... பசித்திருக்க வேனும்... அல்லது தாயின் உடல் சூட்டைக் காணவில்லையே என உணர்ந்திருக்க வேனும்.

பரிதாபமாக இருக்கிறது. அம்மா... அம்மா என்று அழுவது போல... பாவம்... என்ன செய்யுமோ... எடுத்து வெளியே கொண்டு போய் விட்டு விடலாம். மீள மனம் இளகிப் போகிறது.

வாளை எறிந்து விட்டு குட்டிகளைத் தூக்க வேணும் போல இருக்கிறது.

மேலே நின்றவர்களுக்கு இவனது தடுமாற்றம் புரிந்திருக்க வேணும்.

நில்... என்ன யோசிக்கிறாய்... குட்டி என்று பார்க்காதே... எல்லாமே உன் எதிரிகள்...

இன்றில்லாவிட்டால் நாளை... வெட்டு... பாவம் குட்டிகள் என்று கத்த வேணும் போல இருக்கிறது இவனுக்கு.

வெட்டு... சோராதே... கடைசி நிமிடத்தில் தோற்றுவிடாதே... தூக்கு வாளை... வெட்டு.

எப்படி வெட்டுறது... உடலிலை இரத்தம் கூட இருக்காது... மனசு மறுக்கிறது... இவனால் முடியவில்லை.

வெட்டு... தயங்காதே... நீ பாவம் பார்க்க மனிதன் அல்ல... வீரன்... மண்... அதன் மீட்பு... இவை மட்டுமே உன் இலட்சியங்கள்... தலைவரின் கட்டளையை நிறைவேற்று...

நிமிர்ந்து பார்த்தான்... இரண்டு துவக்குகளும் இவனை குறிபார்த்து நிற்கிறது. கண்களை மூடுகிறான். பத்து வினாடிகள் கடந்திருக்காது. மீளத் திறந்தான்... வாளைக் குறிவைத்து நடந்து கண்களை மூடியபடி ஒரு வீச்சு... குறிதவறவில்லை. சத்தம் அடங்கிப் போகிறது.

திரும்பிப் பார்க்கவில்லை. கயிற்றைப் பிடித்து வெளியே வருகிறான்.

"நீ இறுதிப் பயிற்சியில் வெற்றிபெற்று விட்டாய்" -கடுமை தளர்ந்து இயல்பாய் வருகிறது பெரியவன் வார்த்தை.

இவன் திரும்பிப் பார்க்கவில்லை. வந்த திசையில் திரும்பி நடக்கிறான்.

எப்படியோ மூன்று வாரங்கள் கழிந்து விடுகிறது.

அன்று புதன் கிழமை. முன்னிருட்டுக் காலம். விடியப்புறம் மூன்று மணிக்குப் பிறகுதான் கீழ் வானத்திலை நிலவு வரும்.

இப்ப நேரம் இரவு பதினொரு மணியைத் தாண்டுது. வானத்திலை பூவும் பிஞ்சுமாய் வெள்ளி பூத்துக்கிடக்கு. ஊரெல்லாம் மெல்ல மெல்ல படுக்கைக்கு போயாச்சு. ஒரே நிசப்தம்.

சில்வண்டுகளின் இரைச்சல் தவிர வேற சத்தம் கிடையாது.

ஒரு 'எல்வ்' வண்டி அந்த எல்லைக் கிராமத்திலை மெல்ல நுழையுது. உள்ளுக்கை நீட்டு வாள்கள், கைக்கோடாரியள், துவக்குகள் இவையள்... இவையளோடை இவனும்.

வண்டி நிக்குது. வண்டிக்கு முன்னாலை ஏ.கே, யோட காவலுக்கு நிற்கிறான் ஒருத்தன்.

மற்றவர்கள் இறங்கி நடக்கினம். எல்லாற்றை கையிலையும் வாள். சிலபேற்றை தோளிலை துவக்கு.

கிராமம் கலவரப்படுகிது. கூக்குரல் கேட்குது. சனங்கள் தடுமாறி ஓடுது... அழுகை... ஒப்பாரி... கெஞ்சல்... வெட்டு... வெட்டு... என்ற கட்டளைத் தொனி.

அரைமணி நேரம் கழிஞ்சிருக்காது. இப்ப சனத்தின்றை சத்தம் அடங்கிப் போகுது. ஆழ்ந்த நிசப்தம்... நிசப்தத்தை கிழித்து. இவையளிடை சத்தம் மட்டும் எங்கும் எதிரொலிக்குது..

எல்லா அலுவலும் முடிஞ்சுது போல. 'எல்வ்' வண்டி படு வேகமாய் திரும்பிப் போகுது.

குஞ்சும் குருமனுமாய் பூத்துக் கிடந்த நட்சத்திரங்கள் எல்லாம் கொட்டுண்டு போக பெரிதாய் ஒன்றிரன்டு மட்டும் வானத்திலை அழுது வடியுது. மேற்கு வானில் பிறை நிலவு. பொழுது விடியுது.

எல்லா இடமும் மரண ஓலம்... ஒப்பாரி... அழுகுரல்...

கிராமத்தின் பொது இடத்திலை அடுக்கிக் கிடக்கு நாப்பத்திஎட்டுப் பேர்.

அதிலை பதினொரு பொம்பிளையள்... பதினாறு சிறுவர்கள்... ஒன்டு நாலு மாதக் குழந்தை...

கட்டிப்பிடிச்சபடி தாய்... பாவம்... காப்பாற்ற முயன்றிருப்பாள்.

எல்லாம் வெள்ளைச் சீலையாலை மூடிக்கிடக்கு. சீலையெல்லாம் திட்டுத்திட்டாய் இரத்தம்.

கண்கொண்டு பார்க்க முடியல்லை.

எல்லா முகத்திலையும் பயம்... பதட்டம்... திரும்பவும் வருவாங்களோ என்ற பயம்.

நாடு முழுதும் இதுதான் செய்தி...

இவன்ரை இதழ்கடையிலை இலேசாய் ஒரு முறுவல்... அதிலை சோகமா... பெருமையா... விரக்தியா... எதுவுமே தெரியல்லை.

ஒருவாரம் கழியுது.

எல்லாம் மறந்து போகுது.

இவன் எழுதி முடித்து முற்றுப்புள்ளி வைத்து நிமிர்கிறான். இதழ் கோடியில் ஒரு அசட்டுப் புன்னகை. எழுதிய காகிதக் கும்பலை ஒரு கணம் வெறித்துப் பார்க்கிறான். எல்லாச் சொற்களும் வெட்டுண்டு குருதிவழிய பிணங்களாய் கிடக்கிறது. ஒரு கொலைகாரனுக்குரிய வெறி இன்னமும் முகத்திலிருந்து கலையவில்லை.

'இனி அவன் எழுதமாட்டான். இதோடை சரி அவன்றை கதை முடிஞ்சான்.'

நன்றி - நூலகத்திட்டம்



# சார்புமனம் - கற்பு - லட்சுமிகளின் இருப்பு

## லட்சுமி என்ற நாடகம் பற்றிய சில அவதானங்கள்

லௌகீக வாழ்வை கற்பனையில் காணும் ஞானிகளின் தியான மௌனம் கலையின் சினம் பொங்குகிறது. இயற்கையின் இணை- வில் உணர்வுகள் தசைவழி எழுச்சியுறுகிறது. எதிர்வினைக்கான தேடல் எல்லைகளுக்கும் விதிமுறைகளுக்கும் அப்பாற்பட்ட விடுதலை உணர்வை நாடும். வாழ்தல் மீதான பயம், தசைவழிச்சுருங்கி நம்பிக்கையற்ற எல்லைப்படுத்தப்பட்ட உணர்வுகளுக்கான கட்டிறுக்கப் புனைவு அழகியலுக்கு விதை தூவுகிறது. மெல் உணர்வுச் சூட்சுமங்களின் சலனங்களையும், இருப்புக்கான தேடலையும் பதிவு செய்த இலக்கியம், கட்டிறுக்கமான நீதிநூற் புனைவுகளுக்குள்ளும், பக்தி நெறி புனைவுகளுக்குள்ளும், உழன்று இறுகித் திணறடிக்கின்றது. தனி மனிதச் சார்பு மனமும், தனி மனிதச் சார்பு மனம்வழி நிறுவன- மயமாக்கப்பட்ட சமூகமும் இவற்றினை மெய்மையான உணர்வுகளாக உருவகப்- படுத்திச் சுமக்கிறது. இவற்றின் மீது நிர்ப்பந்திக்கப்பட்ட இடையூறு நிகழும்போது மேலும் இச்சுமைகள் நிறுவனமயமாக்கப்பட்ட சமூகத்தின் வழி, தனி மனிதச் சார்பு மனத்தின் மீது பலம் கொண்டு தாக்கி அலறச் செய்கிறது.

அடக்கு முறையும் போர் மோகமும் சூழ்ந்துள்ள ஒரு நிறுவனமயமாக்கப்பட்ட சமூகத்தில் நிர்ப்பந்திக்கப்பட்ட இடையூறுகள் அதிகமானவை. தசை வழி சார்பு மனம் நோக்கும் கற்பு என்னும் புனைவுச் சுமை மீது நிகழ்த்தப்படும் இடையூறுகள் நிறுவன- மயமாக்கப்பட்ட சமூகத்தின் வழி, தனி மனிதச் சார்பு மனதை அலறடிப்பதை "வி. ஜெகநாதன்" அவர்களின் "லட்சுமி" என்னும் அரங்க அளிக்கை பதிவு செய்ய முனைகிறது.



போர் முகம் சூழ்கொண்டு நிற்கும் சூழலில் அடையாளம், இருப்பு அழிக்கப்- படுவதுமான இளம் சமூகத்தின் அதே



துயர்நிலை அவர்கள் சார்ந்தவர்களையும் அதே அளவில் பாதிக்கிறது. காணாமல் போன மகனுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்படும் லட்சுமி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்- படுவதும், பின் அவள் சார்ந்த சமூகத்தாலும் கணவனாலும், துன்புறுத்தப்பட்டு, அவளின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படுவதையும் அளிக்கை செய்யும் 'லட்சுமி' பல்வேறு அரங்குகளில் "கீழைத் தென்றல் கலா மன்ற அரங்க அளிக்கையாளர்களால்" அளிக்கை செய்யப்படுகிறது.

அரங்க அளிக்கையில் பாத்திரங்களின் வார்ப்பு குறிப்பிட்ட பாத்திரங்களில் பேசும் வசனங்களினூடு வெளிப்படுத்தப்படுவதற்கான முஸ்தீபு தவிர்த்து, ஒரு பாத்திரத்தின் உரையாடல் மூலம் இன்னுமோர் பாத்திரத்தின் வார்ப்பு சலனப்படமாக உருக்கொள்ளவைப்பது எழுத்துருவைக் கூர்மைப்படுத்துகிறது. தசைவழி சார்பு மனம் உருக்கொள்ளும் கற்பு என்னும் புனைவுச் சுமையை சுமக்க முயலும் லட்சுமியின் கணவனை லட்சுமி இவ்வாறு சலனமாக உருக்கொள்ள வைக்கிறாள்.

"... நான் திரும்பிற இடமெல்லாம் மனிசனும் திரும்புது... அவசரத்துக்குக் கூட அங்கால இங்கால அசையேலாமல் இருக்கு..., சொல்ல வெக்கமாயிருக்கு. இரவில ஒண்டுக்கு இரண்டுக்கு வந்து எழும்பினாலும் மனிசன் பின்னால வருகுது...'

தாய்க்கும் மகனுக்குமான முரணின் போது மகன் இப்படிக் கேட்கிறான். "நீங்கள் என்னைப் பெறாமல் இருந்திருந்தால் உங்களுக்கும் கவலையிருந்திருக்காது. எனக்கும் பிரச்சினை இருந்திருக்காது" தெரிந்த அன்பர் ஒருவர் பிரச்சினைகள் முகம் கொள்ளும் போது வெண்ணிற தாடிபடிந்த தாடையை வரட்டு வரட்டென்று சொறிந்தபடி தன் முன்னோர்களை "அவனவனுக்கு வசதிப்பட்ட இடத்தில் கச்சையை அவிட்டு தானும் நொந்து மற்றவனையும் நோக விட்டுட்டுப் போயிட்டாங்கள்..." என்று சினப்பதைக் கேட்டிருக்கிறேன். இதைத் தான் மாணிக்கவாசகர் பிறப்பறுத்தல் என்று சொன்னாரோ என்ற எண்ணம் மெல்லப் புரழ்கிறது.

நேர் கோட்டில் இயங்கும் அரங்க அளிக்கையில் உரைஞனின் பங்கு அவசியமற்றது. இடைச் செருகலாக வரும் உரைஞன் பார்வையாளர்களை அளிக்கையுடன் ஒன்ற விடாது அந்நியப்படுத்தி சில சிந்தனைகளை விட்டுச் செல்கிறான். காப்பியங்களுக்குள் இருந்து கற்புப் பற்றிய தசைவழிச் சார்பு மனதை உரைஞன் இப்படி சிந்தனைப் படுத்திச் செல்கிறான்.

'.... உடைந்து போவதற்கு
கற்பு
ஒரு கண்ணாடியுமல்ல.

கண்ணகிக்கு வழிபாடு செய்யும்
இந்தச் சமூகம்
திரௌபதைக்கும்
கோயில் கட்டிக்கும்பிடுகிறதே...'

பரிசோதனை முயற்சியாக அளிக்கையில் ஒரு பாத்திரத்தின் நினைவு மனதில் இன்னோர் பாத்திரம் வந்து பேசுவதான திரைப்பட உத்தி முறை அழகியலாகவும், அதேநேரம் அந்தக் காட்சி சார்ந்த உணர்வை மனதில் நிலைப்படுத்தவும் முனைகிறது.

தியாகுவும் அன்னம்மாவும் அசையா நிலையில் நிற்க, லட்சுமி வந்து போன பின் நிகழ்வுக் காட்சி. இப்போது நடிகர்கள் ஐவர் லட்சுமியைச் சுற்றி ஸ்காவ் துண்டால் மறைத்துக் கொண்டு ஒரு சுழல் அசைவில் வந்து நிலத்தில் முழங்கால் குத்தி இருக்க லட்சுமி அழுதபடி பேசுதல் - காட்சி.

தசைவழி நோக்கப்படும் சார்பு மனதின் கற்பு நிலையில் இருந்து விலகல் காட்டும் படைப்பாளி நீதிநூற் புனைவுப் பண்புகள் உருவகப்படுத்திய சமூகத்தின் சட்ட[illegible] கற்பு என்னும் புனைவுப் பார்வையில் இருந்து பாய்ச்சல் காட்ட முனையவில்லை. அது உரைஞன் வாயிலாக

'கற்பு என்பது
ஆணுக்கும், பெண்ணுக்குமான
ஓர்
உயர்ந்த பண்பாடு
சூழ்நிலைகளாலும்
பலவீனத்தாலும்
இந்தப் பண்பாட்டின் மேல்
சிலவேளைகளில்
மாசுபடிகிறது.
......'

மெல்ல மனதைச் சலனப்படுத்தி உருக்க உணர்வுகளுக்கும் மெய்மைக்கும் இடை- யிலான தேடலைத் தருகின்றன கற்பனைகள். கற்பனைக்கான இடைவெளிகள் அரங்க அளிக்கையில் குறியீட்டு வாயிலாகவும் நிகழ்த்தப்படுகிறது. 'லட்சுமி'யில் உருக்- கொள்ளும் குறியீடுகள் நேரடித்தன்மை வாய்ந்ததாக இருப்பது தேடலுக்கான கற்பனை இடைவெளியை மந்தப்படுத்தி விடுகிறது.

"ஜப்பானிய 'நோ' நாடகம்" என்னும் தலைப்பில் மஞ்சரி - டிசெம்பர் 99 இதழில் 'ராஜ்ஜா' என்பவர் ஜப்பானிய கற்பனை வளம் பற்றி இப்படிக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

"மேடையில் ஓர் இடத்தில் கூழாங்- கற்களும், கிழிஞ்சல்களும் பரப்பப்பட்டிருக்கும். பார்வையாளர்கள் அதைக் கடற்கரை என்று புரிந்து கொள்ளவேண்டும். அதேபோல் படகு போல் தோற்றம் கொண்ட வரைச்சட்டம் கப்பலையும் குறிக்கும், மன்னர் ஏறி பவனி வருகிற ரதத்தையும் குறிக்கும். மரத்தின் ஒரு கிளை முழுக்காட்டையே குறிக்கும். நான்கு கம்பங்களை நட்டு, கூரை மாதிரி போட்டிருந்தால் அது கோயிலையும் குறிக்கும். மன்னரின் மாளிகையையும் குறிக்கும். குடி மக்களின் வீடுகளையும் குறிக்கும். ஆக கதைக்குத் தகுந்தாற்போல காட்சிகளை அவையினரே தங்கள் மனதில் அமைத்துக் கொள்ள வேண்டும்"


எனினும் மொழியின் பன்முகத் தன்மை சார்ந்த பிரஞ்ஞையுடன் எழுத்துரு கூர்மை அடைய முயற்சிக்கிறது. அனுபவமும் அரங்க அளிக்கையில் தீவிர நாட்டமும் கொண்டுள்ள "வி.ஜெகநாதன்" அவர்களிடம் இன்னமும் நிறையவே எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

**- வி. கௌரிபாலன்**

நன்றி - நூலகத்திட்டம்



# காணாமல் போனோர் கதை!



சிலரின் மரணங்கள் மறக்கப்பட முடியாதவை. அம்மரணங்கள் விட்டுச் சென்ற பாதிப்புக்கள் ஒரு நச்சுவட்டம் போன்று நம்மை நோக்கி சுழன்று கொண்டு கடந்த கால நினைவுகள், வேதனைகள், அழிவுகள் என்பனவற்றை நினைவிலிருத்திக் கொண்டிருக்கும்.

ரிச்சர்ட் டி செய்சாவின் மரணமும் அவ்வாறானதே. 18 பெப்ரவரி 1990ல் அவர் துப்பாக்கி ரவைகளை தன் சிரசில் தாங்கியதன் மூலம் விட்டுச் சென்ற பீதி, பயங்கரம் என்பன இன்னும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன - தடையின்றி.

சிலரின் மரணங்களினால் பலர் அடையும் வேதனைகள், நிராகரிப்புகள் பலதரப்பட்ட வடிவங்களில் சமூகத்தில் எச்சமாக்கப்பட்டு விடுகின்றன.

ரிச்சர்ட் டி சொய்சாவின் மரணத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்கள் எத்தகையவர்கள். அவரின் இந்த 10வது நினைவு ஆண்டை நினைவில் இருத்தி நினைவு கூருபவர்கள் எத்தனை பேர்? என்பன போன்ற கேள்விகளுக்கு பதில் மனிதாபிமானம் கொண்ட அனைவரும் என்பதே.

சத்யஜித் மாஇட்டிபே இவர்களில் ஒருவர். ரிச்சர்ட் டி சொய்சா அவர்களது நெருங்கிய தோழரான இவர் ரிச்சட்டின் 10 வது நினைவு ஆண்டினை நினைவு கூரும் முகமாக An Absolution எனும் சிங்கள திரைநாடகத்தை திரைக்கதை எழுதி இயக்கியுள்ளார். கடந்த பெப். 8 அன்று இலங்கை மன்ற கல்லூரியிலும், 18ம் திகதி இரவு ரூபவாஹினியிலும், சுயாதீன தொலைக்காட்சி சேவையிலும் இரவு 9.30க்கு இது ஒளிபரப்பானது.

ஒரு தாயின், புதல்வனை இழந்த வேதனையையும், மனிதர்கள் மனிதர்களால் நிராகரிக்கப்படுவதானல் வேதனைக்குள்ளாகும் மனிதத்துவமும், சாதியின் கொடுமையினால் பாதிப்புக்குள்ளாகும் சமூகத்தன்மையும் இத்திரை நாடகத்தின் முக்கியமான அம்சங்களாகும்.

ஒரு காரின் வருகையுடன் கதை ஆரம்பமாகின்றது. மருத்துவரான ஒரு இளைஞர், அந்தக் கிராமத்திற்கு வருகை தருகிறார். சந்தர்ப்பவசமாக ஒரு இளைஞனுக்கு மருத்துவம் பார்க்கும் அவர், அவ்விளைஞனின் தாயின் நன்றியறிதலுக்குள்ளாகிறார். நன்றி செலுத்த வரும் தாயின் தோற்றம், மருத்துவரின் கடந்த கால நினைவுகளை மீட்டுகின்றது. இனம்புரியாத தேடுதலை ஏற்படுத்துகின்றது. மருத்துவர் வேதனையில் ஆழ்கின்றார். அவரது காதலியான மாயா, அவரின் வேதனைகளின் காரணத்தை தேடுகிறாள்.

பயங்கரமான, பீதியான ஒரு காலகட்டத்தில்- ஒரு பயங்கரமான இரவில் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு அலறல்கள். அந்த பாதி சரிந்த குடிசையினுள் வேட்டுச் சத்தங்களினூடே "தம்பி ஒடு, தப்பியோடுடா" என்ற கூக்குரல். தம்பியோடும் சிறு பையன் தயாரத்ன, ஊரின் மதிப்புப் பெற்ற ஆசிரியை வீட்டிற்கு ஓடிச் சென்று காப்பாற்றுங்கள் எனக் கதற, மதிப்புக்குரிய ஆசிரியையின் வீட்டு கதவு அடித்து மூடப்பட்டு விடுகின்றது. ஆசிரியை வீட்டினுள் விளக்கை அணைத்து விடுகிறார். பையனின் அலறல் நீடிக்கின்றது.

பல வருடங்களின் பின் அந்த ஆசிரியை தளர்ந்த நிலையில் இராணுவ வீரனான தனது மகனின் பிரிவினாலும், கணவனின் பிரினாலும் சோகத்திலும், வேதனையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். பார்க்கும் இடங்களிலெல்லாம் கடந்த கால வாழ்வின் எச்சங்கள், அவலங்கள், ஓலங்கள். ஜே.வி.பியின் தொடர்பிருந்த காரணத்தினால் குயவர் குடும்பத்தை அழிக்க தனது இராணுவவீரனான மகனை ஏவிய அத்தாய், அச்செயலினால் அதிக கழிவிரக்கம் கொள்கிறார், கவலைப்படுகின்றார்.

கணவனினதும், மகனினதும் பிரிவினால் அதிக பாதிப்புறும் தாயின் அவலங்களை அத்தாய் வெளிப்படுத்த, மகனின் நினைவு தினத்தை அனுட்டித்து விட்டு, அழுக்கான கைகளை கழுவிக் கொண்டிருக்கும் வேளை மயங்கி விழுகிறார். இறுதியில் தப்பியோடிய சிறுவனான தயாரத்ன, ஒரு மருத்துவராக அத்தாயை அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றிக் கொண்டு காரில் பின்தொடர காருடன் அம்புலன்ஸ் வண்டியும் இணைந்து அவ் ஊரை விட்டு வெளியேறுகின்றது. காட்சியின் பின்னணியில் "தம்பி தப்பியோடு, ஓடு" என்ற உரத்த குரல் கேட்டுக் கொண்டேயிருக்கின்றது.

ஒரு தாயின் வேதனை இங்கு தெட்டத்தெளிவாக சித்திரிக்கப்படுகின்றமையை நன்கு அவதானிக்கலாம். நமது அரசியல் வரலாற்றில் பல தாய்மார்கள், தமது குழந்தைகளை, துணைவர்களை இழந்து தவிக்கும் சூழலையும், அதன் வாழ்வியல் அழுத்தங்களையும் இயக்குனர் தெளிவாக புலப்படுத்தியுள்ளார். குறிப்பாக ரிச்சர்ட் டி சொய்சா அவர்களின் மரணத்தினால் அவரது தாயாரான மனோராணி அவர்கள் அடைந்த அதிர்ச்சிக்கு ஒப்பானதாகும் இந்தச் சூழல்.

சத்யஜித் மாஇட்டிபே அவர்களின் முதல் இயக்கமான இந்த படைப்பு பொருத்தமான கலைஞர்களையும்; இசைப் பின்னணியும், கொண்டு பொருத்தமான காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனலாம்.

ரிச்சர்ட் டி சொய்சா அவர்களின் மரணம், சிங்கள சமூகத்தையே காப்பாற்றியுள்ளதாக சிங்கள புத்திஜீவிகள் கருதுகின்றார்கள். 90 காலகட்டத்தில் ஜே.வி.பி. சுத்திகரிப்பில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டனர். இவர்கள் வறிய, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதினாலேயே இந்நிலைமைக்குள்ளாகினர் போன்ற விடயங்களை இயக்குனர் ஆசிரியையின் பாத்திரத்தின் மூலமும், மருத்துவரான தயாரத்ன தனது தந்தையார் சூட்டிய பெயரை மீண்டும் ஏற்றுக்கொண்டதன் மூலமும் தெளிவுறுத்துகிறார்.

ஐராங்கனி சேரசிங்க, சாந்தினி செனவிரத்ன, பீற்றர் த அல்மேதா, கௌசல்யா பெர்ணாந்து ஆகியோரின் நடிப்பும், பிரதீப் ரத்நாயக்கா அவர்களின் இசையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

சூழ்நிலையின் பயங்கரத்தை வெறுமையை பிரதிபலிக்கும் இசையமைப்பு ஒரு சிறப்பம்சமாகும். சோகத்தையும், வெறுமையையும் தாங்கிய மனிதர்கள் காட்சி முழுவதும், சித்திரிக்கப்படுவதினால் கதை மென்மையாகவும், இயல்பாகவும் நகர்கின்றது.

எவ்வாறாயினும், இன்னும் இதே பயங்கரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களாகிய எமக்கு An Absolution ஒரு சித்திரிப்பு மட்டுமே. ஏனெனில், நாம் இவற்றையெல்லாம் உணர்ந்தவர்களாவும், நிராகரிப்புக்குள்ளானவர்களாகவும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

— ரத்னா

# சேது: ஒரு திருப்பமா?



அண்மையில் தமிழ் சினிமா உலகிற்கு வந்து வர்த்தக இதழ்களினாலும் சஞ்சிகை-யினாலும் அதிகம் பாராட்டப்பட்ட சேது சினிமாவைப் பற்றி சிறிது அவதானம் செலுத்தினால் நல்லதாகப் பட்டது எனக்கு.

ஆனந்த விகடன் நூற்றிற்கு ஐம்பது புள்ளிகள் இட்டு அறிமுக இயக்குனர் பாலாவை வாழ்த்தி இருக்க, குமுதம் சஞ்சிகை கவித்துவமான சாதியம் என ஒத்திப் போற்றிப் பாராட்ட ஏனைய தமிழக சஞ்சிகைகள் அற்புதமான படைப்பு என விழி விரிய அதிசயிக்க சேது படம் வெளியாகி இருந்தது. தொடர்பு சாதனங்கள், முக்கியமாக வர்த்தக ரீதியிலான தொடர்பு சாதனங்கள் மக்களின் கலை, இலக்கிய ரசனையை தீர்மானிப்பு செய்வதில் இன்று எத்தகைய தூரம் தங்களின் வெற்றியை அடைந்துள்ளன என்றும் இதன் மூலம் புரியக்கூடியதாக இருக்கின்றது.

"சேது" தமிழ் சினிமாவின் கடைந்-



தெடுக்கப்பட்ட வர்த்தக சமன்பாடுகளை சமப்படுத்திக் கொண்டு தன் ஆரம்பக் காட்சிகளை விரிக்கத் தொடங்குகிறது. அடிக்கடி பாட்டு கூத்து என உருப்பட முடியாத சகல அம்சங்களுடனும் கதாநாயகன் கல்லூரி மாணவனாக ஆட்டம் போடுகின்றான். அபிநா குஞ்சலாம்பாள் எனும் அப்பாவியான, அடக்கமான சத்தம் வெளியே கேட்காதவாறு பேசுகின்ற பெண் (தமிழ் சினிமா இலக்-கணப்படி நல்ல பெண் வேறு எப்படி காட்டப்பட முடியும்?) அவன் மனதைக் கவர்கின்றாள். சேது முரடனாக இருந்தாலும் நல்லவன். மனநிலை சரியில்லாதவளிற்கு பாவாடை கட்டுமளவிற்கு நல்லவன். பாலியல் தொழிலாளப் பெண்களிடம் அவர்களின் அத்தொழிலிற்காக அவர்களை குறைகூறும் அளவிற்கு நல்லவன். அவளின் உஜாலா நீலம் போட்ட அந்த வெள்ளை மனம் அறியாமல் அபிதா வெறுக்கின்றாள். விடுவானா நம்மட ஹீரோ? கடத்திக் கொண்டு போய் கல்லும், முள்ளும் கால்களில் இடர, குறுந்தாடியை கைகளால் தடவ, மிரட்டி கெஞ்சி சம்மதம் வாங்கி விடுகின்றான். சம்மதம் வாங்கி வெளியே வரும்போது குண்டர்கள் சிலரால் தாக்கப்பட்டு மனநிலை பாதிக்கப்படுகின்றான்...

இதுவரைக்குமான சேதுவின் காட்சிகள் முதலில் கூறியது போன்று சகல வர்த்தக ரீதியான சமன்பாடுகளையும் சமன் செய்தவாறு போகின்றது. அதன் பின்...

மனம் முழுதும் அழுத்தத்தை படர வைக்கின்ற, மனநிலை சரியில்லாத ஆண்களுக்கு மட்டும் சிகிச்சை தரும் ஆண்டி மட காட்சிகள் அமைகின்றன. அங்கு சிகிச்சை முடித்து குணமாகி தப்பி கொலை செய்து கொண்டு கிடக்கும் காட்சியே கிடைக்கின்றது.

அந்தக் கணத்திலேயே இனி தனக்கேற்ற இடம் அந்த மனநிலை சரியில்லாதவர்களுக்கான ஆண்டிமடம் தான் என முடிவெடுத்து மீண்டும் அவ் இடத்திற்கே திரும்புகின்றான்.

இச் சினிமாவினை அதிகளவு தூக்கிப் பிடிக்க காரணமாகவும் இப் பின்னால் அமையும் காட்சிகளே அமைகின்றன. வழக்கமான பிற்போக்கு தமிழ் சினிமா மரபுகள் எதனையும் மீறாமல் ஒரு சினிமா உன்னத-மான நிலைக்குச் சென்று விடுமா எனும் கேள்வி இங்கு தான் எழுகின்றது.

இத்திரைப்படத்தின் அரசியல் முற்றிலு-மான பெண் அடிமைத்தனத்தை நியாயப்-படுத்துகின்ற, தமிழ் சமூகத்தில் புரையோடிப்-போய் இருக்கும் இந்து தூய்மையை வலியுறுத்துகின்ற அரசியலாக இருக்கின்றது. உதாரணமாக தன்னை விரும்ப மறுக்கும் பெண்ணை கடத்திக் கொண்டு சென்று கட்டாயப்படுத்துவதும் அவ் அழகான பெண் தனக்கு நிச்சயிக்கப்பட்ட வயது கூடிய ஆணை ஏற்றுக் கொள்ள முயல்வதும் இறுதியில் மனதால் காதலித்தவனை விட்டுவிட்டு வேறு ஒருவனை மணம் முடிப்பது என்பது கற்பியலில் ஈடுசெய்ய முடியாத தவறாக கொண்டு தற்கொலை செய்வதும் இவ் அரசியலையே வலியுறுத்துகின்றது.

வர்த்தக இதழ்கள் இச்சினிமாவை உன்னதமானது என விழிப்பதன் மூலம் தமது பல இலக்குகளை அடைய முற்படுகின்றன. அவற்றுள் முக்கியமாக குடும்பம், பெண், மனித உறவு எனும் முக்கூட்டு உறவுத் தொடர்புகளை தம் ஆணாதிக்க சிந்தனை மரபுக்குள் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவும், தாம் செய்யும் வர்த்தக முயற்சிகளிற்கு பின்தளம் அமைத்துக் கொடுக்கும் காட்சிகளை நியாயப்படுத்திக் கொள்ளவும் முயல்கின்றன. துரதிஷ்டவசமாக இந்தப் போக்கு இன்று பெரும் போக்காக மாறிவிட்ட துயரமும் நடந்து விட்டது.

அத்துடன் சேது திரைப்படத்திற்கான இத்தகைய வரவேற்பு இன்னும் ஒன்றையும் வலியுறுத்துகின்றது. வேரூன்றி விட்ட பிற்போக்குத்தனமான தமிழ் சினிமா மரபிற்கு முரணாகாமல் தயாரிப்புச் செய்தால் மட்டுமே எதிர்காலத்தில் இன்னும் 'வெற்றி'ப் படங்களை கவித்துவமான, இலக்கியத்தரமான எனும் மிதமிஞ்சிய அடைமொழி விமர்சனங்களுடன் தரமுடியும் என்பதை. இன்னும் சொல்லப் போனால் அடுத்து வரும் பத்து, பதினைந்து வருடங்களிற்கு வரக்கூடிய சில தரமான கலைத்தன்மையுள்ள தமிழ் சினிமாக்களின் போக்கை சேது திசை திருப்பி விட்டது என்றே கூறலாம்.

- றஜீசன்

நன்றி - நூலகத்திட்டம்



# பார்வைகள்

## 'உயிர் நீங்கி ஓய்ந்த போதும் உதிரமே உயிராய் மாறும்'

*ஓ.. பலஸ்தீனமே...!*
*கவிதைகள்*
*ஆசிரியர்: கலைவாதி கலீல்,*
*முதற்பதிப்பு: 1999 நவம்பர்,*
*வெளியீடு:*
*மன்னார் கல்வி வட்டம்*
*இல. 3 சோனகத்தெரு,*
*மன்னார்.*
*தொடர்புகளுக்கு*
*இல. 3, கொறணவீதி,*
*எழுவில,*
*பாணந்துறை.*
*பக்கங்கள் 68,*
*விலை: ரூபா 75.*




மன்னார் மாவட்டத்தின் பழம்பெரும் எழுத்தாளரான கலைவாதி கலீல் அவர்களால் எழுதப்பட்ட 'ஓ, பலஸ்தீனமே!- நஜி-அல்-அலியும், ஹன்ஸல்லாவும்' என்ற தலைப்பில் அமைந்த கவிதைத் தொகுதி அண்மையில் (நவம்பர் 1999) வெளியிடப்பட்டுள்ளது. இக்கவிதைகள் பத்து வருடங்களுக்கு முன்னர் பாமிஸ் மாத சஞ்சிகையில் (Famys Monthly) வெளிவந்த கருத்தோவியக் கவிதைகளாகும். இக்கவிதைகளை இரசிப்பதற்கு, இக் கவிதைகள் எழுதப்படக் காரணமாய் இருந்த பின்னணியை அறிந்து கொள்வது அவசியமாகும்.

அரபுலகின் தலைசிறந்த கூடார்ந்த சித்திரக்காரர்கள் (Caricaturist) நஜி -அல்-அலி. இவர் பலஸ்தீனர்களின் விடுதலை வேட்கையைத் தமது சித்திரங்கள் மூலம் வெளிக்கொணர்ந்தவர். இதற்கு இவர் தமது சித்திரங்களில் 'ஹன்ஸல்லா' என்று பெயரிட்ட 10 அல்லது 11 வயது மதிக்கத்தக்க பலஸ்தீனச் சிறுவனையே பிரதான பாத்திரமாக எடுத்துக் கொண்டார். இவர் தன்னைப் பற்றிக் கூறுவது இக்கவிதைத் தொகுதியில் 'யார் இந்த நஜி - அல் - அலி?" என்ற தலைப்பில் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

"நான் 10 வயதுச் சிறுவனாக இருக்கும் போது தான் (1948) எமது தாயகமான பலஸ்தீனத்திலிருந்து எஹுூதி இஸ்ரேலியர்களால் நாம் விரட்டப்பட்டோம். அகதிமுகாம்களில் ஏழைப் பலஸ்தீனச் சிறுவர்களாகிய நாம் அல்லல்பட்டோம். அகதிமுகாம்களில் பாலை மணலில் பாதணிகள் கூட இன்றிப் பரிதவித்துக் கொண்டிருந்தோம். இஸ்ரேலிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது பலமுறை சிறையில் அடைக்கப்பட்டோம். அப்போது சிறைக்கூட சுவர்களில் எனது உணர்வுகளைச் சித்திரமாக்கினேன். இவ்வாறு தான் கூடார்ந்த சித்திரங்களை எழுத உந்தப்பட்டேன். எனது சித்திரங்களின் பிரதான பாத்திரமாக 10, 11 வயது மதிக்கத்தக்க பலஸ்தீனச் சிறுவனையே எடுத்துக் கொண்டேன். இச்சிறுவன் பாத்திரத்திற்கு 'ஹன்ஸல்லா' என்று பெயரிட்டேன். அன்று அகதிகளாக விரட்டப்பட்ட என்னைப் போன்ற சிறுவர்களை மட்டுமல்ல, இன்று கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இஸ்ரேலிய இராணுவத்துக்கு எதிராகக் (கல்லெறிப்) போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பலஸ்தீனச் சிறுவர்களையும் எனது ஹன்ஸல்லா பிரதிபலிக்கிறான்"

சரி, நஜி-அல்-அலி வரைந்த இக்கூடார்ந்த சித்திரங்களுக்கும், கலைவாதி கலீல் எழுதியுள்ள இக்கவிதைகளுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்பது முக்கியமான கேள்வியாகும்.

இக்கேள்விக்கு ஆசிரியர் இந்நூலில் 'பகிர்வு' என்ற தலைப்பில் கூறியுள்ளவற்றைச் சுருக்கமாகத் தருகிறேன்.

கலைவாதி கலீல் அவர்கள், பாமிஸ் மாதச் சஞ்சிகைக் குழுவில் இருந்த காலத்தில், அரபுச் சஞ்சிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தபோது அதில் வெளியாகியிருந்த கூடார்ந்த சித்திரத்தைப் பார்த்த இவரது சகாவான அபுல்கலாம், இக்கூடார்ந்த சித்திரத்தின் பின்னணி, பலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டமே என்பதை யூகித்துக்கொண்டதின் பேரில், இப்படங்கள் ஒன்றுக்கு கவிதை எழுதும்படி கலீலை முடுக்கினார். சிறிது நேரத்தில் கவிஞரின் பேனை கூடார்ந்த சித்திரங்களின் உணர்ச்சியைத் தன் கவிதைகளில் பொங்க வைத்துப் பின் வருமாறு எழுதினார்.

'உயிர் நீங்கி ஓய்ந்த போதும்
உதிரமே உயிராய் மாறும்
கரம் வீழ்ந்து சாய்ந்த போதும்
குருதியே கரமாய் மாறும்

ஒரு கரம் ஓயும் போது
மறுகரம் கல்லை ஏந்தும்
ஒரு உயிர் சாயும் போது
மறு உயிர் கல்லை மாற்றும்
பச்சிளங் கரங்களுக்கும்
பாரிய வலிமை உண்டே
நிச்சயம் அல் - அக்ஸா!
நிச்சயம் பலஸ்தீனம்!

இக்கவிதைகளில் கவிஞரின் கவிதா ஆற்றல் நன்கு வெளிக்கொணரப் படுகிறது. இவ்வாறே இவர் நஜி-அல்-அலியின் கூடார்ந்த சித்திரங்களுக்கு மொழி வடிவூமேற்றிய இக்கவிதைகள் வெளிவந்தன. ஒன்றுக்கொன்று சளைக்காத கவிதைகளை இந்நூலெங்கும் காணலாம். அதற்கேற்ப கவிஞராலேயே வரையப்பட்ட முகப்போவியமும் அழகூட்டுகின்றது.

இக்கவிதை நூல் "1990 ஒக்ரோபரில் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட வடபுல முஸ்லிம்களுக்கு" என்ற சமர்ப்பணத்தை வாசிக்கும்போது, எம் நெஞ்சம் சோகத்தால் கரைந்து போகிறது. "இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்று கலைவாதி கலீல் கூறுவது போல் வாழ்ந்த எண்ணிறந்த முஸ்லிம் கலைஞர்கள் மட்டுமல்ல, சாதாரண மக்களும் என் கண்முன்னே விரிகின்றனர். குருதியும், சதையுமாக எம்மோடு வாழ்ந்த இம்மக்களின் துன்ப அனுபவங்களை நினைக்கும்போது 'தீ' என்ற கலைவாதி கலீலின் கவிதைதான் ஏனோ நினைவுக்கு வருகிறது.

கல்லில் கசியும் குருதித் துளிகள்
கானகப் பூவை மலர்விக்கும்
கல்லைப் பிளந்து செடி துளிர்க்கும்
பூக்கள் மலர்ந்து தீ கக்கும்.

– மு. பொ.

## ராமனும் தங்கம்மாவும்

### -ஒரு அறிமுகம்:

பிரபல சிங்களப் பத்திரிகையாளரும் பெண்ணிலைவாதியுமான சீதா ரஞ்னியின் இரு சிங்கள நூல்கள் கடந்த (15.02.2000) செவ்வாய்க்கிழமை கொழும்பு தேசிய நூலக மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இவ்விருநூல்களின் தலைப்புக்களும் தமிழ்ப் பெயர்களாக அமைந்தது தான் இதன் விசேடம்.

*தங்கம்மா:*

தங்கம்மா எனும் நூல் சிறுவர்களுக்கான 16 பாடல்களை உள்ளடக்கியுள்ளது. இன ஐக்கியத்தை சிறுவர்கள் மத்தியில் வலியுறுத்துவதற்காக பாடல் வடிவில் தொகுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. பாடல்களில் வரும் பெயர்களும்




பாடல்களின் தலைப்புக்கும் பெரும்பாலும் தமிழ் பெயர்களாக அமைநதுள்ளன. யுத்த சூழல் சிறுவர் மத்தியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்களை உணர்வுபூர்வமாகவும் கவித்துவமாகவும் வெளியிடப்படுத்தியுள்ளார் சீதா ரஞ்சனி. யுத்தத்திற்குப் போன தனது அப்பா இரு கால்களையும் இழந்து வந்திருப்பதை பார்த்த சிறுவன் நினைக்கும் பாடல் ஒன்று இவ்வாறு அமைந்துள்ளது.

**யுத்தத்திற்கு போன அப்பா**

என்னை தூக்கி கொஞ்சி விட்டு
அப்பா யுத்தத்திற்குப் போனார்
நீண்ட காலத்திற்கு பின்
முச்சக்கர வண்டியில்
திரும்பி வந்தார்.

வேண்டாம் முச்சக்கர வண்டி
அப்பாவின் கால்களை
தாங்கோ.


முன்பு போல
அப்பாவின் தோள்களில் ஏறி
விளையாடலாம் என்று நினைத்துக்
கொண்டிருந்தேன்.
முச்சக்கர வண்டியில் ஏறி
எப்படி நான் விளையாட முடியும்.

வேண்டுமானால் யுத்தம்
என்னிடமுள்ள எதையாவது
எடுத்துக் கொள்ளட்டும்.


வீட்டிலிருந்து போன அப்பாவே
எனக்குத் திரும்ப வேண்டும்.
நாங்கள் திரும்ப விளையாட
எனது அப்பாவுக்கு
கால்களைக் கொடுங்கள்.

*ராமன்:*

1993 காலகட்டத்தில் யுக்திய பத்திரிகையில் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்ட கதையே இது. தமிழ்ப் போராளி ஒருவரின் கதை. இக்கதையில் வரும் ராமன் எனும் பாத்திரத்திற்கு ஏற்படும்




துன்பம், துயரம், சிறு வயது நினைவுகள் இதனை நகர்த்திச் செல்கின்றன. 1970களில் தெற்கின் இளைஞர்களின் நிலையை ஒத்ததாக இது இருந்தது. தெற்கில் சிங்களச் சூழலில் பிறந்து வளர்ந்த ராமன் தமிழன் என்ற காரணத்துக்காக சிறுமைப்படுத்தப்படுகிறான். பல்வேறு விதமான தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்படுகிறான். இந்நிலையில் எது எமது வாழ்க்கை என்று தேடியலைய வேண்டிய சூழ்நிலை ராமனுக்கு ஏற்படுகின்றது. துன்பம் நிறைந்த சூழலில் வாழ்வைத் தேடியலைந்த ராமன்கள் நிறையவே இருந்தார்கள். இந்த ராமன்கள் தேடியலைந்த வாழ்க்கை எது என்பது தான் கதை.



**மூன்றாவது மனிதன்**
**இதழ் 07, ஜன.-மார்ச் 2000**
**தொடர்புகளுக்கு:**
**ஆசிரியர்: எம்.பௌசர்**
**53, வொக்ஷ்வல் லேன்,**
**கொழும்பு -02**

மூன்றாவது மனிதன் 07வது இதழ் வெளிவந்துள்ளது. ஒவ்வொரு மூன்றாவது மனிதன் இதழிலும் முன்னைய இதழை விட தேர்வும், தேடலும் அகலிக்கப்பட்டு வருவது தெரிகிறது. இருந்தாலும் சஞ்சிகையின் வருகை தொடர்ச்சியாக இல்லாமல் இருப்பது பெரும் குறைதான் - இதனை ஆசிரியர் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இந்த இதழில் பேராசிரியர் சி. சிவசேகரம், ஏ. இக்பால் ஆகியோரின் நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த இருவரினதும் நேர் காணலில் பல அம்சங்களை நாம் விரிவாகத் தொட்டு விவாதிக்க வேண்டியிருக்கிறது. பேராசிரியர் சிவத்தம்பியின் தலித் பற்றிய, ஈழத்துச் சூழல் தொடர்பான பார்வை மிகவும் முக்கியமானது.


கவிதைகளாக சு. வில்வரத்தினம், சோலைக்கிளி, சி. ஜெயசங்கர், றஷ்மி, எஸ். போஸ், கருணாகரன், அனார், ஏ. எம். குர்ஷித், ஔவை, இப்னு அஸுமத், ஆழியாள் என்பவர்களும், சிறு கதையாக எம். கே. எம். ஷகீப்பின் மொழி பெயர்ப்புக் கதையும், த. மனோகரனின் சிறுகதையும் இடம் பெற்றுள்ளன. உமா வரதராஜனின் எழுத்தில் உள்ள கிண்டல்களுக்கு அப்பால் அவர் சொல்லும் பல விடயங்கள் குறித்து விவாதிக்கலாம்.

கடிதங்கள் பகுதி மிகவும் முக்கியமானது. நாம் விவாதங்களுக்கு வழி விடும் சாளரங்களைத் திறந்து விட வேண்டியவர்களாக உள்ளோம். அட்டைப் படக் கவிதை பெண்ணிய சிந்தனையின் மிகத் தெளிவான குரலாகும். ஆனால் அட்டைப்படம் மட்டும் ஏன் முக்காடிட்ட பெண்ணாக இன்னும் வழமைப்படி?

நன்றி - நூலகத்திட்டம்



## வாசகர் செ(ா)ல்வழி



# மூன்று பெண்களின் கதையும் சைவ நீதியும்

ஒரு கூட்டத்தினர் பெண் ஒருத்தி மீது கல்லெறிகின்றனர். அங்கே சாந்தமே உருவான ஒரு மனிதர் வருகிறார். அப்பெண்ணுக்கு ஏன் கல்லெறி விழுகிறது என்பது அவருக்கு விளங்கி விட்டது. அவளுக்கு கறைபட்டவள், சமூகப் பிரஷ்டம் செய்யப்பட்டவள், வழுக்கி விழுந்தவள் என்று பல நாமகரணங்கள். அவள் வயிற்றிலும் ஒரு சிறு உயிர் ஊசலாடுகிறது.

அந்த மனிதரின் முதற் கேள்வி எங்கே அவன்? அச் சிறு உயிருக்குச் சம அளவில் காரண கர்த்தாவானவன் எங்கே?

அடுத்த கேள்வி இக் கூட்டத்தில் புனிதமுள்ள யாராவது இருந்தால், அவன் எறியட்டும் முதற் கல்லை. ஒரு கல்லும் வரவில்லை, அந்த அவனும் வரவில்லை. அந்த மனிதர், அந்தப் பெண்ணை அழைத்துச் சென்றார்.

- இது கிறிஸ்தவ மதம் போதிக்கும் அன்பும், பண்பும்.

இன்னும் ஒரு பெண் அழகானவள். சர்வ அலங்கார பூஷதையாக; கருணையும், ஞானமும் நிறைந்த அந்த மகானை அணுகுகிறாள். அவரை மயக்க முயல்கிறாள். உடல் இன்பம் அளிப்பது அவளது குலதர்மம் போலும். அந்த மகான் தீட்சண்யமாக அவளை நேருக்கு நேர் பார்க்கிறார். எனது உதவி உனக்கு இப்போது தேவைப்படாது, தேவைப்படும் போது நான் வருவேன். உனக்குதவுவேன். அந்த உருவம் தாமாகக் கூறி கம்பீரமாக நடந்து அவளைக் கடந்து சென்று விடுகின்றது. காலம் கரைகிறது. இருபது நாற்பதாகிறது. அதே மனிதர் வருகிறார். இளமை அழிந்து, அழகு தேகம் உருக்குலைந்து, வீதியோரம் ஒரு உருவம் அனுங்கிக் கொண்டு கிடக்கிறது. அந்த மனிதர் இப்பொழுது அவளைக் கடந்து செல்லவில்லை. அன்போடும், கருணையோடும் அவளை அணுகி "நான் வந்து விட்டேன். உனக்கு இப்பொழுது என் உதவியும் தேவை. நானும் தேவைப்படுவேன் என்று கூறி அவளுக்கு அன்பும் ஆதரவும் கொடுக்கிறது.

- இது பௌத்த மதத்தின் காருண்ணியமும் உலகியலைப் புரிந்து கொண்ட ஞானமும்.

இப்படிப்பட்ட பாரம்பரியங்கள் இந்து, சைவ மதத்தில் இல்லையா? அகலிகையைச் சபித்த மாமுனிவர்களும், எரிதழல் இறக்கிய இறை அவதாரங்களும் தான் இந்து மதம் பெண்ணுக்கென்று வகுத்த மத ஆசாரங்களா?

இதனால் தான் நால்வரால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சாரதாம்பாளுக்கு எதிராகக் குரல் எழுப்பி, நீதி தேட முற்பட்ட யாழ்ப்பாணப் பெண்களுக்கு ஆசாரம் கெட்டுப் போகாமல் இருப்பதற்காகத் தங்கள் மண்டபத்தைத் தர மறுத்தாரா தங்கம்மா அப்பாக்குட்டி? சைவ நீதி தளைத்தோங்க இது ஒரு சாதனமா? இதற்கு அவர் கூறாமல் கூறிய காரணம் ஒன்று இருக்க வேண்டும்.

சாரதாம்பாளுக்கு இராணுவத்தினரோடோ, கடற் படையினரோடோ தொடர்புண்டு என்பது அக்காரணமாயிருந்தால் பல கேள்விகள் எழும்புகின்றன.

சுயமாகத் தன் விருப்பப்படி ஒரு பெண் விரும்பும் உறவும், வல்லுறவும் இங்கு சமன்படுத்தப்படுகிறதா?

அவர் கணவனை இழந்தோ, அவனால் விலக்கப்பட்டோ, விவாகரத்துச் செய்யப்பட்டோ இருந்தால் அவள் இன்னொரு உறவுக்கு லாயக்கற்றவளா? அவள் உடலை விற்கும் "தாசி"யாக இருந்தால், அவளது உடலில் ஆதிக்கம் செலுத்த, வல்லுறவு கொள்ள, பலாக்காரம் செய்ய ஆணுக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளதா? அப்படி அவன் செய்தால் அது நியாயப்படுத்தப்படலாமா?

"அப்படிப்பட்டவளை"க் கொலை செய்யும் உரிமை கூட, அவளைக் கட்டாயப்படுத்தியோருக்கு உண்டா? எத்தனையோ தார்மீக நீதி, நியாயக் கேள்விகள் எழுகிறதே.

பவள விழாக் கொண்டாடும் சமூக, சமய சேவகியான அந்த அம்மையாருக்கு, இவற்றிற்குரிய விடைகளை யாராவது தெரியப்படுத்த வேண்டும். புனிதங்கள் மண்டபங்களிலும், கோயில்களிலும், கண்ணகிகளிலும் மாத்திரம் தங்கியிருக்க முடியாது. நீதி நியாயங்களிலும் கூடப் புனிதங்கள் உண்டு.

அவரது இச் செய்கை, அராஜகம் புரியும் அரச சாதனங்களுக்குத் துணை போகிறது. மறு புறத்தில் இது சைவத் தேசீயத்தைக் கட்டி எழுப்பும் முயற்சியா?

- சுசரிதா, கொழும்பு03

# சித்திரைப் புதுநூல் விழா

சென்னையில் ஆண்டிலொருமுறை நடைபெறும் புத்தகக் கண்காட்சி பற்றி நீங்கள் அறிவீர்கள். இங்கு நூல்களைப் பிரசுரிப்போரும், நூலாசிரியர்களும் தங்கள் புத்தகங்களை விற்கக்கூடியதாகவும், தாங்கள் விரும்புவதைத் தேர்ந்தெடுத்துச் சிறிது குறைந்த விலையில் வாங்கக் கூடியதாகவுமுள்ளது.

'இந்திய சர்வதேசத் திரைப்பட விழா' போன்ற சர்வதேச விழாக்களில் நீங்கள் பங்குகொண்டோ அல்லது அதுபற்றிக் கேள்விப்பட்டோ, வாசித்தோ இருப்பீர்கள். இங்கு படத் தயாரிப்பாளர்கள், நெறியாளர்கள், நடிக, நடிகையர் போன்றோர் திரைப்பட ஆர்வலரைப் பிற நெறியாளர்கள், விமர்சகர்கள், பத்திரிகையாளரை விழாக் காலத்தில் சமமாக நடக்கும் சிறு சிறு கூட்டங்களில் சந்தித்துக் கருத்துப் பரிமாறிக் கொள்வார்கள். சினிமாவோடு சம்பந்தப்பட்ட யாவரும், ஆண்டிலொருமுறை கூடவும், கருத்துப் பரிமாறிக் கொள்ளவும் கூட இத்தகு விழாக்கள் துணை செய்கின்றன.

இதேபோன்று, ஈழத்தில் ஓரிடத்தில் ஆண்டுதோறும் நூல் விழா ஒன்றினை நடாத்தி, ஈழத்து நூல் பிரசுரகர்த்தாக்களுக்கும், நூல் ஆசிரியர்களுக்கும் தங்கள் புத்தகங்களைக் கண்காட்சியில் வைக்கவும், விற்கவும் அத்துடன் சம காலத்தில் நடைபெறும் கருத்துப்பரிமாறல்களில், விமர்சகர்களில் சுமுகமான, அந்நியோன்னியமான முறையில் பங்குபற்றவும், இதுவரை விற்க முடியாமலிருக்கும் தங்கள் நூல்களைச் சற்றுக் குறைந்த விலையிலேனும் நூலாசிரியர்கள் விற்கவும், வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், யாவற்றுக்கும் மேலாக நூல்களைப் பற்றிப் பேசும், பார்க்கும், வாசிக்கும் ஒரு கலாசாரத்தை ஏற்படுத்தவும் நான் பெரிதும் விரும்புகிறேன்.

மேலும் இப்பொழுதுள்ள சூழ்நிலையில், இத்தகு முயற்சியினை முன்னெடுத்துச் செல்ல ஏற்ற இடமாகத் திருகோணமலை தான் அமையலாம் என நான் நம்புகிறேன். அத்தோடு திருமலை, மலையகம், கொழும்பு, மட்டக்களப்பு, வவுனியா ஏன் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்தும் கூட வரக்கூடிய ஒரு மத்தியஸ்தானமாகவும் அது அமைந்துள்ளது.

முதலில் இலங்கைப் புத்தகத்தை மட்டும் நாம் இங்கு அறிமுகப்படுத்துவோம். தங்கள் புதிய நூல்களை வெளியிட விரும்புவோரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம். முடிந்தால் காலம் செல்லச் செல்ல வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளரும் இங்கு வரலாம் என எண்ணுகிறேன்.

இச் சித்திரை புது நூல் விழாவினை (புது நூல் விழாவெனப் பெயர் இருந்தாலும், பழைய நூல்களையும் கண்காட்சியில் வைத்து விற்கலாம்.) இவ் வருடம் சித்திரை மாதம் 14,15,16ம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) திருமலை கலாசார மண்டபம் அது சார்ந்த வளாகத்தில் நடாத்தலாம் என எண்ணுகிறேன். இவை எனது சிந்தனைகளே. இத் திட்டத்தினை வெற்றி பெறச் செய்வது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே, தயவு செய்து இம்முயற்சியில் பங்குபற்ற விரும்புவோர் உடனடியாக என்னுடன் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு, தவறாமல் உங்கள் விருப்பினை பதிவு செய்யவும். உங்களுக்கும் தெரிந்தது போலவே, ஓரளவேனும் பிரசுரகர்த்தாக்கள், எழுத்தாளர்கள் நிச்சயமாகப் பங்குபற்றத் தங்கள் விருப்பத்தினைத் தெரிவித்தாலே, நான் இம் முயற்சியைத் தொடரலாம். இந்த 'ரியூஷன்' கலாசாரக் காலத்தில், நம் சிறார்களிடையேயும், இத்தகு விடயங்களில் ஒரு ஈர்ப்பினை ஏற்படுத்துவதும் இது முக்கியமானது எனக் கருதுகிறேன். நான் கூடிய அளவு எனது முயற்சியில், உதவியாளர்களாக உயர்தர வகுப்பு, பல்கலைக்கழக, தொழிநுட்பக் கல்லூரி, மாணவ, மாணவிகளையே சேர்த்துக் கொள்ளவுள்ளேன். எனவே உடன் தொடர்பு கொள்ளுங்கள்-முடிந்தால், கடுகதிக் கடிதங்கள் மூலம். ஏனெனில், சாதாரண கடிதங்கள் வந்தடைய 10, 11 நாட்கள் எடுக்கின்றன.

**கா. சிவபாலன்**
**இல.02, சாரதா ஒழுங்கை,**
**திருகோணமலை.**

# தமிழ் பாடநூல்கள்.....

கத்துக்கு அப்பால் காணப்படுகின்ற மனித ஆற்றல், நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார, கல்வி மேம்பாடு நோக்கி பயன்படுத்தப்படல் வேண்டும். அதற்கு ஏற்றவாறு அரச நிறுவனங்கள் பல மக்கள் பணிகளிலிருந்து பின்வாங்க வேண்டும் என்ற புதிய நிர்ப்பந்தங்கள் அண்மைக்காலங்களில் ஏற்பட்டன. தனியார் துறைக்கு அதிக அளவிலான ஊக்குவிப்புகளும், சலுகைகளும் வழங்கப்பட்டு அதனை வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்குமான ஒரு யந்திரமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. இதன் பின்புலத்தில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற வெளிநாட்டு நிறுவனங்களும், இவற்றுக்கெல்லாம் தலைமகனாக விளங்கிய ஐக்கிய அமெரிக்காவின் சமூக பொருளாதார கொள்கைகளும் இருந்தமையையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும்.

அண்மைக்காலங்களில் தமிழ்மொழி பாடநூல்களில் தொடர்ச்சியாக காணப்பட்ட எழுத்துப் பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை இலக்கண வழு, பொருட்பிழை, வரலாற்றுத்திரிபு, பிறமொழிச்சொற்கள், தரமற்ற மொழிபெயர்ப்பு போன்ற பல்வேறு கண்டனங்களை இப்பகைப்புலத்திலிருந்தே விளங்கிக் கொள்ள முடியும். தமிழர் அமைப்புகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், தமிழ் கல்வியாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பல தரப்பட்டோர் மிக தீவிரமான முறையிலும், ஆழ்ந்த அக்கறையுடனும் தமது கண்டனங்களை தொடர்பு சாதனங்களூடாக வெளியிட்டு வந்தனர். பெரும்பாலும் அக்கண்டனங்கள் தமிழ் முஸ்லிம் சமூகங்களை மட்டுமன்றி அரசுத்துறை அதிகாரிகள், அமைச்சர்கள் என்போரையும் சென்றடைந்தன. அரச மட்டத்தில் பொறுப்பானவர்கள் இவ்விடயத்தில் அக்கறை கொள்ளவில்லையென்று கூறமுடியாது. அவர்கள் பாடநூல் தயாரிப்பாளர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களையும், ஆணையையும் விடுக்க முடியுமேயன்றி அவர்களே பாடநூலை எழுதும் பணியில் ஈடுபட முடியாது. கடந்த வருடம் வெளிவந்த தமிழ் பாடநூல்களில் காணப்பட்ட அதேபிழைகள் - தவறுகள் இவ்வருடம் வெளியிடப்பட்டுள்ளன. 7ம், 10ம் வகுப்பு பாடநூல்களிலும், காணப்படுகின்றன. பாடநூல்களில் விடப்பட்டுள்ள பாரிய பிழைகள் மற்றும், குறைபாடுகள் ஒரே ஒரு உண்மையையே சுட்டிக் காட்டுகின்றன. இன்றைய நிலையில் இப்பாடநூல் தயாரிப்புப் பணிகளுக்கு பொறுப்பான அமைப்புகள், நிறுவனங்கள், அவற்றின் பிரிவுகள், அதற்குப் பொறுப்பானவர்கள், இப்பணிக்குப் பொருத்தமற்றவர்கள் என்பதே. இவர்களால் ஆகக்கூடிய பட்சம் இதனைத் தான் செய்ய முடியும் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டார்கள். முற்றாக இவ்வமைப்புகளுக்கும், இவர்களுக்கும் பொருத்தமற்ற ஒரு கடமை - ஒரு தொழிற்பாடு என்ற முடிவுக்கு தம்பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்ட தமிழ் பேசும் பெற்றோர்கள் முடிவு செய்தால் அதில் பிழைகாண முடியாது.

இதற்கான மாற்று நடவடிக்கை ஒன்றே ஒன்று தான். ஏற்கெனவே கூறியது போல இந்த அரச அமைப்புகளுக்கு அப்பால் சமூகத்திலும் பாடசாலைகளிலும் காணப்படும் ஆற்றல்மிக்க அறிஞர்கள், ஈடுபாடும் அக்கறையும் கொண்ட எழுத்தாளர்கள் போன்றோரின் தனியார் முயற்சிகளுக்கு இடம் அளிக்கும் வகையில் புதிய பாடநூல் தயாரிப்புக் கொள்கை ஒன்றை உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

# இனத்திற்காக.....

குனிந்த ஊர்காவல் படை வீரர் சரி நீங்கள் போகலாம் என்றார்.

' எல்லாம் சரி தானே?' நான் கேட்டேன். 'ஆம்' என்றார்.

நான் காற்சட்டையை அணிந்து கொண்டேன். காற்சட்டையில் நான்கு பைகள் இருந்தன. இவற்றில் கவனம் செலுத்தாமல் ஒருவரின் பின்புறத்தில் கவனம் செலுத்துவது ஏன்? கேள்விகள் எழுந்தாலும், நான் கேள்வியைக் கேட்கவில்லை.

நான் வெளியே போகும் போது பாதிரியார் சென்றார். அடுத்ததாகக் கிராமவாசி, அடுத்ததாக முகாமைத்துவ பயிற்சியாளர் உதான். பின்பு இரு பெண்கள் வேறு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வாகனத்தில் எம் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். உதான் உள்ளாடையைக் கழற்றத் தயங்கியதாகவும், பாதிரியாரின் உள்ளாடையுடன் மர்மஸ்தானம் துழாவப்பட்டதாகவும், சாரதியின் மர்மஸ்தானம் அதிக துழாவலுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவரவர் தெரிவித்தார்கள்.

- தொடா

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## இராணுவ ஏஜன்டுகள் - 2

சென்ற இதழில் அரசாங்க அதிபர்களை நோக்கி இராணுவ ஆட்சேர்ப்புக்கு உதவுமாறு மேஜர் ஜெனரல் கோரிக்கை விடுத்தது பற்றி எழுதியிருந்தோம்.

சிவில் அதிகாரிகளை இராணுவ ஏஜன்டுகளாக மாற்றும் இந்த நடவடிக்கையை இப்பத்தியில் நாம் கண்டித்திருந்தோம்.

இந்தப்பத்தியை எழுத உட்காரும் போது இப்போது மேஜர் ஜெனரல் இன்னும் ஒருபடி மேலே போய் விட்டார் என்று செய்தி வெளியாகி இருக்கிறது.

ஆம்!

சமாதானத்தை நிலைநாட்டவென்று இந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டதாக கூறப்பட்ட 'சமுர்த்தி' திட்டத்தின் மூலம் ஆட்கள் திரட்டப்பட வேண்டும் என்று இப்போது அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சமுர்த்தி ஆணையாளர் காரியாலயத்தினூடாக நாடு அடங்கலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இராணுவத்திற்கு 15000 பேரை திரட்டும் முயற்சியில் அவர்கள் இறங்கியிருந்த போதும் 1350 பேரை மட்டுமே அவர்களால் திரட்ட முடிந்திருக்கிறதாம்.

சுகததாச ஸ்போட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் பேசும்போது சமாதானத்திற்காக அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் அதேவேளை யுத்தத்தை முன்னெடுப்பதற்கும் நாம் தயாராக வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்காக அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் செயற்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் கோட்பாட்டை பிரதிபலிக்கும் இந்தப் பேச்சு சென்ற இதழில் நாம் குறிப்பிட்ட சிவில் அதிகாரிகளை இராணுவ ஏஜன்டுகளாக்கும் அவரது திட்டத்தின் அடுத்த கட்டம் என்பதை தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

சமாதானத்திற்காக 15000 அல்ல இலட்சக்கணக்கிலும் ஆட்களை திரட்ட முடியும் என்ற போதும் அரசாங்கத்தின் நோக்கம் சமாதானத்திற்கு ஆட்களை திரட்டுவதல்ல, மாறாக யுத்தத்திற்கு ஆட்திரட்டுவதே என்பது இதன் மூலம் மேலும் உறுதியாகியுள்ளது.

யுத்தம் வேறு அரசியல் வேறு என்பது போல தெரிவிக்கப்படும் இந்தக் கருத்து வெறும் பொய்யுரை மட்டுமல்ல வஞ்சகத் தளமானதும் கூட.

ஆம். யுத்தம் என்பது அரசியலின் நீட்சி என்பார்கள். அல்லது ஆயுதம் தாங்கிய அரசியல் என்பார்கள். யுத்தம் அழிவு, அடக்குமுறை, அதிகாரம் செய்தல் என்பவற்றை நோக்கமாக கொண்டு நடாத்தப்படுவது. சமாதானம் என்பது சமத்துவம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்பவற்றுடன் சம்பந்தப்பட்டது. இம்மூன்றும் இல்லாத போதுதான் முன்னைய முயற்சி நடக்கிறது. அதாவது யுத்தத்தின் மூலமான சமாதானம்.

யுத்த மூலமான சமாதானம் என்பது ஒடுக்கப்படுவோருக்கும் ஒடுக்குபவருக்கும் இடையிலான சமாதானம் அதாவது, ஒடுக்குபவரும் ஒடுக்கப்படுபவரும், ஒடுக்குமுறை நிலவும் அதேவேளை, அதில் தீவிரத்தன்மை ஏற்படாத வகையில் அனுசரித்துப் போதல் மூலம் எழுகின்ற சமாதானம் ஆகும். இந்தச் சமாதானத்தில் ஐக்கியமோ புரிந்துணர்வோ சமத்துவமோ கிடையாது. ஒடுக்கப்படுபவர்கள் ஒடுக்குபவர்கள் என்ற நிலை நிலவும் வரை சமாதானம் என்ற சொல்லுக்கு எந்தவிதமான அர்த்தமும் இல்லை.

நோர்வே அமைச்சரூடாக பேச்சுவார்த்தை முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் இந்தச் சூழலில், அரசாங்கத்தின் சகல சிவில் சமூக சேவைக்கான சக்திகளையும் இராணுவ ஆட்சேர்ப்புக்குப் பயன்படுத்த எத்தனிப்பது என்பது, அந்த முயற்சியை வீணடிக்கும் ஒரு செயலாகும்.

அரசாங்கத்திற்கு உண்மையில் சமாதானத்தை கொண்டு வருவதில் ஆர்வம் இருக்குமானால் அது உடனடியாக செய்ய வேண்டியது எல்லாம் இம்மாதிரியான முயற்சிகளை கைவிட்டுவிட்டு முழுமனதுடன் சமாதான முயற்சியில் இறங்குவது தான்.

அப்போதுதான் சமாதான முயற்சிகள் வெற்றி பெறமுடியும். அல்லாவிட்டால், பாலசிங்கம் சொல்வது போல், 'உலக நாடுகளுக்கு காட்டுவதற்கான ஒரு பேச்சுவார்த்தையாக' அது மாறிவிடும். தொடர்ந்தும் முடிவுறா இரத்தக் களரிக்குள் இந்த நாடு தவிக்க வேண்டியிருக்கும்.

இதை தீர்மானிக்கிற பொறுப்பு இந்தக் கணம் அரசின் கையில்தான் இருக்கிறது!

அரசு சமாதானத்தை காண விரும்புகிறதா அல்லது ஏஜன்டுகளை அமைத்து படைபலத்தை பெருக்கி யுத்தத்தை நடாத்தி நாட்டை மேலும் மேலும் அழிவுக்கு இட்டுச் செல்லப்போகிறதா என்பது இந்த தீர்மானத்தில் தான் தங்கியிருக்கிது!

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இன்னொரு முகம்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முக்கியஸ்தரான உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் நிஹால் கருணாரத்னவும், அவரது நம்பிக்கைக்குரியவரான பொலிஸ் சார்ஜன்ட் பத்தேகம சஞ்ஜீவ ஆகிய இருவரும் கடந்த் வாரம் நான்கு பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களைக் கைது செய்வதற்குப் பேலியகொடைப் பொலிஸார், பொலிஸ் உத்தியோகத்தர் சமுத்திரஜீவவின் தலைமையில் சென்ற போது, அவர்களைக் கைது செய்ய விடாது தடுத்த செயலானது, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இன்னொரு முகத்தைக் காட்டுவதாக உள்ளதாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பத்தேகம சஞ்சீவ என்பவரின் நுகேகொடையில் உள்ள வீட்டில் மேற்படி பாதாள உலகக் கோஷ்டியினர் ஒளிந்துள்ளதைக் கேள்விப்பட்ட பேலியகொடைப் பொலிஸார் அங்கு சென்ற போது, அவர்கள் தடுக்கப்பட்டனர். பேலியகொடைப் பொலிஸார் பத்தேகம சஞ்ஜீவவின் வீட்டில் நின்ற போது, மிரிஹானைப் பொலிஸில் இருந்து, " இந்த விஷயத்தில் தலையிட வேண்டாம். வீணாகத் தலையிட்டு ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டாம். " என்று தொலைபேசியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதையும் அவர்கள் பொருட்படுத்தாது தமது கடமையில் ஈடுபட்ட போது, அங்கு தனது வாகனத்தில் வந்த சஞ்ஜீவ, கைது செய்யப்பட்ட பாதாள உலகத்தவரை உடனடியாக விடுவிக்கும்படி எச்சரிக்கை விடுத்துள்ளார்! ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு, பொலிஸ் சார்ஜன்ட் பதவியில் உள்ளவர் கட்டளை கொடுத்தது இதுவே முதல் தடவை !

இவ்வாறு தர்க்கம் நடந்து கொண்டிருந்தபோது, அவ்விடத்துக்கு வந்த உதவிப் பொலிஸ் அதிபர் நிஹால் கருணாரத்னாவும், கைது செய்தவர்களை விடுவிக்குமாறு எச்சரித்தார். இவரது கட்டளைக்கும் "உத்தியோக ரீதியான பொலிஸாரின் கடமையில் தலையிட வேண்டாம்" என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமுத்திரஜீவ பதிலளித்ததோடு, பொலிஸ் மா அதிபர் லக்கி கொடிதுவக்குவோடு தொடர்பு கொண்டு தமது நடவடிக்கையை உறுதிப்படுத்தியும் கொண்டார்.

இதன் பின்னர், பேலியகொடைப் பொலிஸார் தாம் கைது செய்தவர்களை விசாரணைக்குப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் சார்ஜன்ட் பதவியில் இருக்கும் பத்தேகம சஞ்ஜீவ என்பவர் 1994இல் ஒரு சாதாரண பொலிஸாராகச் சேர்ந்தவர். பின்னர் 1994இல் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவுக்குப் பாதுகாப்பு வழங்குபவராகக் கடமையாற்றித் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்ட இவர், பாதாள உலகத்தவர்களோடு மிகுந்த தொடர்பு உள்ளவர் என்பது, கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பாதாள உலகத்தவர்களின் வாக்குமூலங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

பாதுகாப்புப்படைகளின் பிரதிநிதிகள் பாதாள உலகத்தவரோடு கொண்டுள்ள தொடர்புகள் இப்போது சந்திக்கு வந்து கொண்டிருக்கின்றன.

மேற்படி சம்பவமும் அவற்றில் ஒன்று.

ஜனாதிபதி அவர்கள் இதெல்லாம் வெறுமனே எதிர்க் கட்சிக்காரர்களின் சதிஎன்று புலம்புவதை விடுத்து உண்மையைச் சற்றுத் தரிசித்தால் என்ன?

## எதிராகப் பேசி ஆதரவாக வாக்களி!

தமிழ் மக்கள் மீதான வன்முறையை தொடர்வதற்கு அரசினால் 09ம் திகதி புதன்கிழமை அவசரகால சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்விவாதத்தில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் புதிய எம்.பியான எஸ்.தவராஜாவின் உரை அவசரகாலச் சட்டத்தினால் தமிழ் மக்கள் படும் அல்லல்களைப் பிட்டுப்பிட்டு வைப்பதாக இருந்தது.புதியவர் என்பதாலோ என்னவோ மிகவும் ஆக்ரோசமாக உரையாற்றினார் அவர்.

"கடந்த மாதம் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதும் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து தமிழ் இளைஞர், யுவதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒரு பொலிஸ் நிலையத்தில் சுமார் 800 பேரைத் தடுத்து வைத்திருந்தனர். வெயிலில் ஒரு கோப்பை தேநீர் குடிக்கக் கூட வசதியில்லாதவாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். மலசல வசதியில்லை. இது மனித உரிமை மீறல் இல்லையா?" என்ற கேள்வியையும் அவர் அவ்விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் எழுப்பியிருந்தார். இவ்வாறெல்லாம் அனல் பறக்கப் பேசியவரிடம் ஒரு சின்ன விண்ணப்பம்.

தவராஜா அவர்களே, அடுத்தள முறையாவது சபாநாயகர் என்ன கூறுகிறார் என்பதைக் கேட்டுக் கையை உயர்த்துங்கள்.

இல்லையேல் இந்த முறையைப் போல நீங்கள் பேசியதற்கு எதிராக அவசரகாலச்சட்டத்தை ஆதரித்து வாக்களித்து விடுவீர்கள்.

<u>வவுனியா</u>

## எப்படி வந்தன?

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போது, விளையாட்டுத்திடலில் கட்டப்பட்டிருந்த விளம்பரங்கள் பாடசாலை வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தி விட்டிருந்தன.

தரம் வாய்ந்த விளையாட்டு மைதானங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது, மைதானத்தைச் சுற்றிலும், விளம்பரப்பதாதைகள் வைக்கப்பட்டிருப்பதுபோன்று இந்த முறை:, இந்தப் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் விளம்பரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்த விளம்பரங்கள் வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டிருந்தன. எனினும் இவற்றில் நகரில் உள்ள மதுபானம் விற்பனை செய்யும் நிறுவனங்களின் பதாதைகளும், டியூட்டரிகளான தனியார் கல்வி நிலையங்களின் பதாதைகளும் வைக்கப்பட்டிருந்ததே இச்சலசலப்புக்குக் காரணமாகும்.

முறைசார்ந்த கல்வி போதனை நெறிகளைக் கொண்ட அரசாங்க பாடசாலைகளில், அதனுடன் இணையாத வழிமுறைகளைக் கொண்ட தனியார் கல்வி நிறுவனங்களின் விளம்பரங்கள் வைக்கப்பட்டமை ஆசிரியர்கள் பலரையும் துணுக்குறச் செய்துள்ளது. இதேபோல, மதுபான விற்பனை நிறுவனங்களின் விளம்பரங்களும் அந்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களைத் துணுக்குறச் செய்துள்ளது.

இந்த விடயம் குறித்து சில ஆசிரியர்களும் பெற்றோர்களும் எடுத்துக் கூறியதும்,குறிப்பிட்ட விளம்பரப்பதாதைகள் மறுபக்கம் திருப்பிக் கட்டப்பட்டதாகவும், விளையாட்டு விழாவில் கலந்து கொண்ட முக்கிய விருந்தினர் ஒருவர் ஏன் அந்தப் பதாதைகள் மறுபக்கத்தில் திருப்பிக் கட்டப்பட்டுள்ளன என்று வினவியதாகவும் தெரிய வருகிறது. இந்த விடயம் குறித்து பாடசாலை அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து அவர் அவற்றை அப்புறப்படுத்த உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் போது, அதற்குப் பொறுப்பாக பெரும்பான்மையான ஆசிரியர்கள் மற்றும் ஒன்றிரண்டு மாணவர் தலைவர்கள் அடங்கிய விளையாட்டுக் குழு அமைக்கப்படுவது வழக்கம். இந்தக் குழுவே, பாசாலை அதிபரின் வழிநடத்தலுடனும், விளையாட்டுத் துறை ஆசிரியரின் முக்கிய பங்களிப்புடனும் விளையாட்டுப் போட்டிகள், ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்து செயற்படுவது இயல்பு. விழா ஏற்பாடுகள் அனைத்தும் இந்தக் குழவின் பொறுப்பிலேயே செய்யப்படுவதும் உண்டு.

இந்த வகையில் வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டியின் போது, குறிப்பிட்ட விளம்பரங்கள், எவ்வாறு யாரால் கொண்டு வரப்பட்டன என்பது தெரியவில்லை.